# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 313 புரட்டாதி 19ஆம் நாள் வியாழக்கிழமை 05 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048




அனந்திகா உதயகுமார்
யாழ்ப்பாணம்
புள்ளிகள் -194



மைத்திரேயி அனிருத்தன்
யாழ்ப்பாணம்
புள்ளிகள் - 193



மகேந்திரன் கர்சனா
முல்லைத்தீவு
புள்ளிகள் -188



பாஸ்கரன் பார்தீபன்
கிளிநொச்சி
புள்ளிகள்-188

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

## சென்.ஜோன் பொஸ்கோ மாணவி அனந்திகா வடக்கில் முதலிடம்

*வன்னியில் மன்னார் மாணவன் முதலிடம்*

யாழ்ப்பாணம், ஒக். 5

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகியன. வெளியான புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலய மாணவி அனந்திகா உதயகுமார் 194 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றார்.

தேசிய ரீதியில் நீர்கொழும்பு ஹரிசந்திர மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தினுக்க கிரிஷான் குமார 198 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றுள்ளார். >> 25

### வெட்டுப்புள்ளி

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் மாவட்ட ரீதியான வெட்டுப் புள்ளிகளையும் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டது.

யாழ்ப்பாணம் - 155, கிளிநொச்சி - 154, மன்னார் - 153, வவுனியா - 154, முல்லைத்தீவு - 154 >> 25

## இடைக்கால அறிக்கையுடன் அனைத்து கட்சிகளும் முரண்பட்டபோதும்

# நியூசிலாந்து நாட்டை ஒத்த அரசமைப்பு வரைபுக்கு அனைவரும் ஆதரவு!

*சார்க் சபாநாயகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்பாக தலைமை அமைச்சர் ரணில் இப்படிக் கருத்துத் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்ரோபர் 5

நியூசிலாந்து நாட்டின் அரசமைப்பை ஒத்த புதிய அரசமைப்பு ஒன்றுக்கான வரைபை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று பன்னாட்டு அரங்கில் நேற்றுத் தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

முதல் தடவையாகச் சகல கட்சிகளும் புதிய மாற்றம் ஒன்றை உருவாக்கும் முயற்சிக்கு இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் 8ஆவது மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமானது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதனைத் தொடக்கிவைத்தார்.

2030ஆம் ஆண்டுக்குள் நிலையான அபிவிருத்தியை அடைவது என்ற இலக்கை நோக்கி முன்னேறுவதற்கு தெற்காசியாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்குவதாக இந்த மாநாடு அமைந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மாநாடு நடைபெறும்.

நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார். புதிய அரசமைப்புத் தொடர்பில் தற்போது உருவாக்கப்பட்டிருப்பது ஓர் அறிக்கை மட்டுமே. இது குறித்த கலந்துரையாடல் தொடரும் என்று அவர் அறிவித்தார்.

புதிய அரசமைப்பு எப்போது வரும் என்பது குறித்துக் காலவரையறை எதனையும் குறிப்பிடாத அவர், நாடாளுமன்றத்தில் எல்லோரும் ஒத்துழைத்தால் விரைவில் அதனைக் கொண்டுவரமுடியும் என்றார். அதற்கான நம்பிக்கை தன்னிடம் இருக்கிறது என்றும் கூறினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு அரச >> 25

## தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கத் தடை நீங்கியது

*பசிலின் கருத்தை மேற்கோள்காட்டி அமைச்சர் ராஜித நேற்றுத் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 5

"காணி விடுவிப்புக்கு மகிந்த அணியினரே தடையாக இருந்து வந்தனர். பசில் ராஜபக்ச, காணி விடுவிப்பை தாங்கள் எதிர்க்கவில்லை என்பது எமக்கு உற்சாகத்தைத் தருகிறது. பசில் ராஜபக்ச கூறிய விடயங்களை மகிந்த அன்று கேட்டிருந்தால் அவர் இன்றும் ஆட்சியில் இருந்திருப்பார். கோத்தபாய கூறியதைக் கேட்டதாலேயே மகிந்தவுக்கு இந்தநிலை"

இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித தெரிவித் >> 25

### "எதிர்பார்க்கவேயில்லை"

*வடக்கில் முதலிடம் பெற்ற மாணவி பூரிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 5

"புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவேன். சிறந்த புள்ளிகளைப் பெறுவேன் என்று எதிர்பார்த்தேன். மாவட்ட ரீதியில் முதலிடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. முதலிடம் பெற்றமையை சந்தோசமாக உணர் >> 25

### ஆசிரியர் நியமனம் பெறுவோர் விவரம் உதயன் இணையத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 5

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வின் அடிப்படையில் இலங்கை >> 25

## ஒன்றுபட்ட நாடு என்கிற பதம் ஒற்றையாட்சியையே குறிக்கும்

*அமைச்சர் ராஜித அழுத்தமான விளக்கம்*

கொழும்பு, ஒக். 5

புதிய அரசமைப்புத் தொடர்பான வழிகாட்டல் குழுவின் அறிக்கையில் நாட்டின் தன்மை குறித்துத் தமிழில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருமித்த நாடு என்பது ஒற்றையாட்சியையே அர்த்தப்படுத்துகின்றது என்று தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரட்ன.

"ஒற்றையாட்சி என்பதே ஒருமித்த நாடு என்று அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையை ஒருபோதும் பிரிக்கமுடியாது என்பதை எடுத்துரைக்கவே ஏக்கிய ராஜ்ஜிய என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒற்றையாட்சி, கூட்டாட்சி என்று சொற்களில் தொங்கிக் கொண்டிருப்பது முட்டாள்தனம்" என்றார் அவர்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று முற்ப >> 25



ரி.நிரோசன் ஆர்.பிரகலாதன் எஸ்.மனோஜன் வி.ஆசிகா பி.நிலோஜினி

### தேசியமட்ட பளுதூக்கலில்

## வடமாகாண மாணவர்கள் ஐவர் தங்கம் வென்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 5

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான தேசியமட்ட பளுதூக்கல் போட்டிகளில் வடக்கு மாகாணத்துக்கு ஐந்து தங்கப் பதக்கங்கள் கிடைத்தன.

கொழும்பு டொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் தேசியமட்ட பளுதூக்கல் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இரண்டு தங்கப்பதக்கங்களையும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியன தலா ஒரு தங்கப் பதக்கத்தையும் சுவீகரித்தன.

இதன்படி, 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ரி.நிரோசன் 69 கிலோ >> 25

## யாழ். பல்கலை மாணவர்களின் படுகொலையை உலகறியச் செய்ய சகாக்கள் முன்வரவேண்டும்

*அரசு பாரபட்சமாக நடக்கிறது என சரவணபவன் எம்.பி. குற்றச்சாட்டு*



யாழ்ப்பாணம், ஒக். 5

பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நடராஜா கஜன் மற்றும் விஜயகுமார் சுலக்சன் விடயத்தில் நீதியை விரைந்து நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. >> 25

## சிகரெட்டுடன் சீனப் பெண் நேற்றுக் கைது

கொழும்பு. ஒக்.5
சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களுடன் சீனப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவால் நேற்று அதிகாலை அந்தப் பெண் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பெண்ணின் பயணப் பையில் இருந்து 10 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய 146 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அவரிடம் இருந்து வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2)

## சுற்றுலா தலைவர்கள் மாநாடு நேற்று ஆரம்பம்

கொழும்பு. ஒக்.5
உலக சுற்றுலா தினத்துடன் இணைந்ததாக இலங்கையில் நடைபெறும் 'சுற்றுலா' தலைவர்கள் மாநாடு - 2017' அரச தலைவர் மைத்ரிபால சிறிசேன தலைமையில் நேற்று ஆரம்பமானது.

"அபிவிருத்திக்கு பேண்தகு சுற்றுலாத்துறை - இலங்கையின் முன்னோக்கிய பயணம்" என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த முறை மாநாடு நடைபெறுகின்றது.

மூன்றாவது முறையாக நடைபெறும் மாநாட்டை சுற்றுலாத்துறை, கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

நேற்று முற்பகல் ஆரம்பமான இந்த மாநாட்டின் நோக்கம் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய நிபுணர்கள், தொழில் வல்லுனர்கள் மற்றும் அரச கொள்கை வகுப்பாளர்களின் உதவியுடன் தேசிய உரையாடல் ஒன்றை உருவாக்கி அதன்மூலம் காலத்துக்கேற்ற தேசிய கொள்கையை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான பங்களிப்பே என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் சுற்றுலாத்துறை, கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, அமைச்சின் செயலாளர் எசல வீரகோன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் லக்ஸ்மன் திசாநாயக்க உள்ளிட்ட உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-ரி2)



## சார்க் சபாநாயகர்கள், எம்.பிக்களின் எட்டாவது மாநாடு நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஒக.5
சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் எட்டாவது மாநாடு நேற்று முற்பகல் கொழும்பில் ஆரம்பமானது.

அரச தலைவர் மைத்திரிபால தலைமையில் ஆரம்பமான இந்த மாநாடு நாளையும் நடைபெறவுள்ளது.

பேண்தகு அபிவிருத்தி இல்க்குகள் குறித்து இந்த முறை மாநாட்டில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. தெற்காசிய பிராந்தியத்தில் கலாசாரம் மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாப்பதில் சார்க் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம் தொடர்பாகவும் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.


மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் தலைமை உரையை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், ஆரம்ப உரையை சபாநாயகர் கருஜயசூரிய நிகழ்த்தினர்.

சார்க் அமைப்பு நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் 8ஆவது மாநாட்டை முன்னிட்டு நினைவு முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டது.

சார்க் அமைப்பு நாடுகளின் சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு தெற்காசிய மக்கள் மத்தியில் நட்புறவையும் புரிந்துணர்வையும் மேம்படுத்தல், சார்க் அமைப்பு நாடுகளின் நாடாளுமன்றங்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்தல், பிராந்திய நாடாளுமன்ற முறைமை தொடர்பாக கருத்துக்கள் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான மன்றம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் 1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. (ற)

# அக்கராயனில் உள்ள கரும்புத் தோட்டக் காணியை விவசாயிகளுக்கே வழங்குக

## பிரதேச செயலரிடம் மனு கையளிப்பு



கொழும்பு, ஒக்.5
அக்கராயனில் உள்ள கரும்புத் தோட்டத்தின் 210 ஏக்கர் நிலத்தை அந்தக் கிராமத்தில் வாழும் நிலமற்ற பாமர விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று அந்தப் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அவர்கள் நேற்று பிரதேச செயலரிடம் ஒப்படைத்தனர்.

"அக்கராயன் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டத்தின் 210 ஏக்கர் நிலத்தையும் அந்தப் பகுதியில் வாழும் நிலமற்ற விவசாயிகளுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் வழங்க வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானிக்கப்பட்டது. தற்போது 90வருட குத்தக்கைக்கு 1964ம் ஆண்டில் அந்த நிலத்தைப் பெற்றவருக்கே வழங்கவேண்டும் என்று முதலமைச்சர் பணித்துள்ளார். அந்தப் பகுதியில் நிரந்தரமாக வாழும் நாம் தொழில் வாய்ப்பற்ற நிலையில் உள்ளபோது பிற இடத்தில் உள்ளவர்கள் இந்தக் கிராமத்தின் வள்த்தை உபயோகம் செய்யும் நிலைமை ஏற்படுகின்றது.

அந்த நிலத்தை தனி ஒரு நிறுவனத்துக்கு அன்றி கிராமத்தில் நிலமற்ற விவசாயிகளுக்கே வழங்க ஆவண செய்ய வேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதேவேளை கரும்புத் தோட்டக் காணியை முன்னர் செய்கை மேற்கொண்டவர்களிடமே வழங்குமாறு மாகாண காணி ஆணையாளர் , மாவட்ட அரச அதிபர் , பிரதேச செயலாளர் மாவட்டத்தின் இணைத் தலைவர்களுக்குப் பிரதியிட்டு முதலமைச்சர் 20170308ஆம் திகதி எழுத்தில் உத்தரவிட்டுள்ளார். (ற-101)

## கோட்டை ரயில் நிலையத்துக்கு 100 வயது

கொழும்பு.ஒக்.5
கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 100 வருடங்கள் நிறைவுபெற்றன. அதை முன்னிட்டு நிலையம் அலங்கரிக்கப்பட்டு பல்வேறு சிறப்பு நிகழ்வுகளும், அணிவகுப்புகளும் இடம்பெற்றன. ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொடருந்து இயந்திரங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

நிகழ்வில் அமைச்சர்கள், முப்படையினர், ரயில்வே அதிகாரிகள், ஊழியர்கள், பயணிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். 1917 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி திறக்கப்பட்ட கொழும்பு கோட்டைத் தொடருந்து நிலையம் பெரிய அளவில் இரும்புகள் பயன்படுத்தப்பட்டு அந்தக் காலப்பகுதியில் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று நடை மேடைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட கோட்டைத்தொடருந்து நிலையத்தில் தற்போது 13 நடை மேடைகள் நிறுவப்பட்டுள்ளன. (ற)









வடமராட்சி சிறி வல்லிபுர ஆழ்வார் கோவில் தேர் திருவிழா நேற்றுச் சிறப்புற நடைபெற்றது. பக்தர்கள் தூக்குக் காவடி எடுத்தும், அங்கப் பிரதிஸ்டை செய்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ற-173)



# அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக.5

சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும், சிறையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

"கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வந்த அசாதாரண சூழ்நிலைகளின் போது பல தமிழ் மக்கள் அரசியல் காரணங்களின் அடிப்படையில் அரசமைப்புக்கும், இயற்கை நியதிகளுக்கும் முரணான பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர கால ஒழுங்குவிதிகள் போன்றவற்றின் அடிப்படையில் எவ்வித காரணங்களும் இன்றி கைது செய்யப்பட்டு பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்."என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

"2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த புதிய நல்லாட்சி அரசு தமிழ் அர்சியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அவை எவற்றையும் நிறைவேற் றவில்லை.

தமிழ் மக்களுடைய அரசியல் பிரதிநிதிகளும் தேர்தல் காலங்களில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான உத்தரவாதத்தை வழங்கியிருந்தனர். அவர்களும் இன்னமும் அவற்றை நிறைவேற்றவில்லை .

யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஆகிய நாம் இந்த உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடும் தமிழ் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளை கால தாமதமின்றி உடனடியாக இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அனைத்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இலங்கை அரசிடமும் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளிடமும் கேட்டுக் கொள்கிறோம்" என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

(ற-8)

# அடுத்த தலைமைக்கு வழிவிடுதலே தலைமைத்துவத்தின் சிறந்த பண்பு

### வட மாகாண சபை உறுப்பினர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.5

சன சமூக நிலையத் தலைவர்கள் தொடக்கம் அரசியல் தலைவர்கள் வரை பல தலைவர்கள் எம்மிடையே உள்ளனர்.



அவர்களில் பலருக்கு ஆயுள் காலம் முழுவதும் தலைவர்களாக இருக்கவேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. தங்களால் இயலாத நிலையில் பதவியை அடுத்தவர்களிடம் கையளிக்கும் மனப்பாங்கு அவர்களிடம் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும், மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன்.

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

அடுத்த தலைமைக்கு வழிவிடுதல்தான் சிறந்த தலைமைத்துவப் பண்புகளில் முதன்மையானது.

மாணவர்கள் நல்ல தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்வதற்கும், அவற்றை வெளிப்படுத்துவதற்குமான வாய்ப்பாக இந்த தலைமைப் பொறுப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தலைமை கிடைத்தவுடன் பலருக்கு அதிகார தோரணையும் கூடவே வந்துவிடும். அவ்வாறு இல்லாமல், தன்னிச்சையாகச் செயற்படுவதைத் தவிர்த்து, அடுத்தவர்களின் திறமைகளை மதித்து, அவர்களின் கருத்துக்களையும் செவிமடுத்து இலக்கை நோக்கிக் கூட்டாகப் பயணிக்கவேண்டும்.

நெடுந்தொலைவு பறக்கும் வலசைப் பறவைகள் நல்ல தலைமைத்துவப் பண்புகளை வெளிக்காட்டுகின்றன. ஆங்கில ஏ(வி) எழுத்து வடிவில் தலைமைப் பறவை முன்னே பறக்க அதன் இரண்டு பக்கங்களிலும் ஒழுங்கு மாறாமல் ஏனைய பறவைகள் பறப்பதைப் பார்க்கலாம். தலைமைப் பறவை காற்றுத் தடையை உடைக்கும் கடினமான பணியைச் செய்து, தன்னைப் பின்தொடரும் பறவைகள் சுலபமாகப் பறப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கிறது.

தலைமைப் பொறுப்புக்கு வரும் ஒருவர் அடுத்தவர் சுமைகளையும் தன் தோள்களில் சுமக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

முன்னே செல்லும் தலைமைப் பறவை கடினமான பணியைச் செய்வதால் மற்றைய பறவைகளைவிட முதலில் களைப்படைந்துவிடும். அது தானாகவே வழிகாட்டும் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகிவிடும். பின்னால் வந்து கொண்டிருக்கும் பறவைகளில் ஒன்று முன்னோக்கிச் சென்று தலைமைப் பொறுப்பை ஏற்று வழிகாட்ட பயணம் தடைப்படாமல் தொடரும்.

பறவைகளிடம் காணப்படுகின்ற அடுத்த தலைமைக்கு வழிவிடும் பண்பு எங்களிடம் இல்லை. பறவைகளிடம் இருந்து உயரிய தலைமைத்துவப் பண்புகளை எமது மாணவத் தலைவர்கள் கற்றுக் கொண்டால் எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்துக்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கவல்ல தலைவர்களாக அவர்களால் உயர முடியும் - என்றார்.

(ற)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய நபருக்கு தண்டம்

திருகோணமலை, ஒக்.5

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றியவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது திருகோணமலை நீதிமன்று திருகோணமலை, ஹரவப்பொத்தானை, ரொட்டவெவவில் இருந்து நொச்சிக்குளத்துக்கு அனுமதியின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றபோதே அந்த நபர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு மொறவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது.

(ற-45)

# யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை, ஒக்.5

அம்பாறை, திருக்கோயில் காஞ்சிகுடாவில் யானை தாக்கி குடும்பத் தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

விநாயகபுரத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தை ஒருவரே உயிரிழந்தார் என்றும், நேற்று அதிகாலை தொழிலுக்குச் சென்ற சமயம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ற-ரி2)



# வீட்டுத் திட்டம் வழங்குமாறு பியர் மக்கள் ஆர்ப்பாட்டம்

மன்னார், ஒக்.5

தலைமன்னார், பியர் பிரதேசத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக வாழும் மக்களுக்கு இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து நேற்றுக் காலை மன்னார் பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

"அரசால் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பியர் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை எந்தத் திட்டங்களும் வழங்கப்படுவதில்லை. தமிழர்கள் என்பதால் இந்தப் பாரபட்சம் காட்டப்படுகின்றது.

போரால் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து பின்னர் மீள்குடியமர்ந்து பல ஆண்டுகளாகின்றன. தற்போது வீடடுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளபோதும், பல்வேறு காரணங்களைக் காட்டி வீட்டுத் திட்டங்கள் நிறுத்தப்படுகின்றன" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

"தற்போது பல வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தலைமன்னார், பியர் பிரதேசத்திலும் பாதிக்கப்பட்ட மக்களை உள்வாங்கி தகுதி அடிப்படையில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும்" என்று மன்னார் பிரதேச செயலர் என்.பரமதாஸ் தெரிவித்தார்.

(ற-56)

# கழிவு கொட்டும் இடத்தின் பராமரிப்புச் சரியில்லை

### பளையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

பளை, ஒக.5

பளை பிரதேச சபையால் சேகரிக்கப்படும் குப்பைகள் கொட்டும் இடம் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. அந்த இடத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி இல்லை என்று தெரிவித்து பிரதேச மக்கள் கழிவகற்றும் வாகனத்தை மறித்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி, பளை, அரத்திநகரில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. அந்த இடம் பாதுகாப்பின்றி உள்ளது. கொட்டப்படும் கழிவுகளால் நுளம்புகள் பெருகுகின்றன. அங்கு சேரும் கழிவு நீரை அருந்தி கால்நடைகள் இறக்கின்றன, இன்றும் (நேற்று) வளர்ப்பு மாடு இவ்வாறு இறந்துள்ளது." என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

(ற-6)

**வீடு வாடகைக்குத் தேவை**

வவுனியா நகரில் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு : 071 1 232 232**

# சராசரிக் குடும்பத்தின் வாழ்க்கைச் செலவுக்கு ரூபா 17,000 போதுமா?

## அரசிடம் ஜே.வி.பி. கேள்வி

கொழும்பு, ஒக். 5

தற்போதைய சூழலில் ஒரு குடும்பத்தின் மாதாந்தச் செலவுக்கு 17 ஆயிரம் ரூபா போதுமானதா என்று கேள்வி எழுப்பியுள்ள மக்கள் விடுதலை முன்னணி, விலைக் குறைப்புக்களை மேற்கொள்ளாவிட்டால் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கலந்துகொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடிப்படைத் தேவைகள் அனைத்தினதும் விலை அதிகரித்துள்ளது. அன்றாட வாழ்க்கையை குறைந்த பணத்தில் அனுபவிக்கும் அதிகமான மக்கள் துன்பப்படுகின்றனர்.

விலை உயர்வைக் குறைக்காது தேங்காய்களுக்கு நிறம் பூசும் வேலையை அரசு முன்னெடுத்து வருகின்றது. கடந்த ஆண்டுடன் பொருள்களின் விலையை ஒப்பிடுகையில் இந்த ஆண்டு அத்தியவசியப் பொருள்களின் விலை 36 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் அதிகார சபையின் கணக்கீட்டின் படி நான்குபேர் கொண்ட குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு 43 ஆயிரம் ரூபா தேவைப்படுகின்றது என்றும், கொழும்பில் நான்கு பேர் கொண்ட சாதாரண குடும்பத்தின் மாதாந்தச் செலவாக 60 ஆயிரத்து 364 ரூபா செலவாவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சர் எஸ்.பி.திசாநாயக, நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மாதாந்தம் 14 ஆயிரத்து 196 ரூபா செலவாவதாகவும் கொழும்பில் நான்கு பேர் கொண்ட சாதாரண குடும்பத்துக்கு 17 ஆயிரத்து 308 ரூபா செலவாவதாக கூறுகின்றார். இந்தக் கணக்கெடுப்புத் தவறான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசும் முன்னைய ஆட்சியைப் போலவே செயற்பட்டு வருகின்றது. இந்த அரசு தூரநோக்குடன் செயற்படவேண்டும். வளங்களை விற்பதன் மூலமும், விலை அதிகரிப்பின் மூலமும் அரசைப் பலப்படுத்தி கொள்வதன் மூலமும் வரிகளின் மூலமாக மக்களின் பணத்தைச் சுரண்டவுமே கவனம் செலுத்தி வருகின்றது.

எதிர்வரும் சில ஆண்டுகளில் இலங்கையில் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடும். சாதாரண மக்களின் மூலமாக இந்த நிலமை உருவாகவில்லை. வெள்ளை உடைகளை அணிந்து கொண்டு மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் உள்ளவர்களே இதற்குக் காரணம். அவர்களே இந்த நாட்டை நாசமாக்கியுள்ள[illegible] இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வேலை வாய்ப்பில்லாது போகும் நிலமை ஏற்பட்டு வருகின்றது.

அரசு தெளிவான பொருளாதார கொள்கையைக் கூறவேண்டும். விலைக் குறைப்புக்களைச் செய்ய வேண்டும். தேசிய உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும். உள்நாட்டு முதலீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இல்லையேல் நாட்டில் மக்கள் புரட்சி வெடிப்பதை தடுக்க முடியாது - என்றார்.

(5,31)

# அதிவேக ரயில் பாதைகள் எமது நாட்டுக்குச் சரிவரா

## அமைச்சர் நிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 5

அதிவேக புகையிரதப் பாதைகள் வெளிநாடுகளில் காணப்பட்டாலும் இலங்கையின் புகையிரத பாதைகளுக்கு குறுக்கிட்டு பல சிறிய வீதிகள் இருப்பதால் எமது நாட்டில் அதிவேகப் புகையிரதப் பாதைகள் அமைக்க முடியாது என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு நூறு வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு அங்கு நேற்று நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் புகையிரத சேவையைத் தரமிக்கதாக மாற்ற முடியாமைக்கு தொழிற் சங்கங்களுக்கு இடையில் காணப்படும் அதிகார போட்டியே பிரதான காரணமாகும். இதனை தவிர்த்துக் கொண்டால் நிச்சியமாக தரமிக்க புகையிரத சேவையை மக்களுக்கு வழங்கமுடியும்.

வெளிநாடுகளில் காணப்படும் புதிய தொழில்நுட்பத்தை இலங்கை கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளோம். ஜி.பி.எஸ் முறைமையிலான சமிக்ஞை திட்டம், பயணச் சீட்டுகளை இலத்திரனியல் முறைமையில் வழங்குதல் போன்றவற்றை விரைவில் முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (5,31)

# குறைந்த பெறுமதியில் விலைமனு கோருமாறு ரவியே ஆணையிட்டார்

## அம்பலமானது தகவல்

கொழும்பு, ஒக். 5

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற முறிகள் ஏலத்தின்போது, குறைந்த பெறுமதியில் விலை மனுவை சமர்ப்பிக்குமாறு அப்போதைய நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க அரச வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பிணைமுறிகள் மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழு முன்னிலையில் இவ்விடயம் நேற்று வெளிக்கொணரப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் அஷ்விந்த சில்வா ஆகியோர் நேற்று ஆணைக்குழு முன்னிலையில் வழங்கிய சாட்சியத்தினூடாக விடயம் தெரியவந்துள்ளது.

மூன்று அரச வங்கிகளைச் சேர்ந்த ஏழு பிரதானிகள் ஆணைக்குழு முன்னிலையில் எதிர்வரும் நாள்களில் தொடர்ந்து சாட்சியமளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று நடைபெற்ற விசாரணைகளில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பொது முகாமையாளர் ஆகியோரும் அரச தலைர் ஆணைக்குழுவுக்கு வருகை தந்திருந்த நிலையில் பிணைமுறி தொடர்பாக செலுத்திய நிதி கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் தங்களது விளக்கத்தை வழங்கியிருந்தனர்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஏலத்தின் பெறுமதியைக் குறைத்துக் கேட்குமாறும் விலைமனு கோரல் விடயங்களை மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி உள்ளிட்ட பிரதான முகவர்களிடம் கோரியுள்ளதாக அரச சட்டத்தரணி டப்புல டி.லிவேரா தெரிவித்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கியின் முகாமையாளர்கள் நிதியமைச்சரின் கட்டுப்பாட்டின் அடிப்படையிலேயே பிணைமுறி ஏலம் நடந்தமையை ஏற்றுக்கொண்டனர்.

ஏற்கனவே பிணைமுறி ஏலத்தின் கால அளவை நீடிக்குமாறு முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் அறிவித்ததாகச் சாட்சியமளித்திருக்கின்ற நிலையில், சர்ச்சைக்குரிய ஏலத்தில் அரச உயர்தரப்பு தெளிவாக ஆதிக்கம் செலுத்தியுள்ளமை நேற்று நடைபெற்ற விசாரணைகளில் தெளிவாகியுள்ளது.

(5)

# இருதய மாற்றுச் சிகிச்சைக்குட்பட்ட இளம்பெண் சாவு குறித்து விசாரணை

## சுகாதார அமைச்சர் ராஜித தகவல்



கொழும்பு, ஒக். 5

இருதய மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இளம்பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளேன். யாராவது பொறுப்பற்ற முறையில் செயற்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த இளம்பெண் எனது தொகுதியைச் சேர்ந்தவர். 70 நிமிடங்களில் இருதய மாற்று சத்திரசிகிச்சை நடந்துள்ளது. இளம்பெண்ணுக்குப் பொருத்தப்பட்ட இருதயமும் இளம் வயதைச் சேர்ந்த ஒருவருடையதாகும். சிகிச்சையின் பின்னரான ஏதோ ஒரு குழப்பத்தில் இளம் பெண் உயிரிழந்திருக்கிறார். விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

(5,31)

# ஏதிலிகள் மீதான தாக்குதலை பொலிஸார் தடுக்கத் தவறினரா?

## விசாரணைகள் ஆரம்பம் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, ஒக். 5

மியன்மாரில் இருந்து வந்த ரோஹிங்ய முஸ்லிம் ஏதிலிகளை உடனடியாக வெளியேற்றி நாடு கடத்துமாறு பிக்குகள் தலைமையிலான குழுவினர் அத்து மீறல்கள் மற்றும் தாக்குதல்களை மேற்கொண்ட போது பொலிஸார் அவற்றைத் தடுக்காமல் கடமை தவறிச் செயற்பட்டனரா என்பதைக் கண்டறிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தின் சிறப்பு விசாரணைப் பிரிவு இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குனசேகர தெரிவித்தார்.

(5,31)

# மருத்துவச் சபையின் புதிய தலைவருக்குக் கடும் எதிர்ப்பு

இலங்கை மருத்துவச் சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கொல்வின் குணரத்ன நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்கச் சென்றபோது அவருக்கு மாணவர்கள் கடுமையான எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். அவரது வாகனத்துக்கு காலால் உதைத்தும் உள்ளனர்.

இலங்கை மருத்துவ சபையின் தலைவராகப் பதவி வகித்த காலோ பொன்சேகாவின் பதவிக் காலம் நிறைவடைந்தமை அடுத்து அந்தப் பதவிக்கு கொல்வின் குணரத்ன நியமிக்கப்பட்டார். மாலபே சைட்டம் மருத்துவ கல்லூரி தொடர்பான பிரச்சினையை அடிப்படையாக கொண்டு காலோ பொன்சேகாவை பதவியில் இருந்து நீக்கக் கூடாது என்று பல்கலைகழக மாணவர் சங்கங்களும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் அவருடைய பதவியைத் தக்கவைக்கக் கடுமையான போராட்டங்களை நடத்தியிருந்தன.

இந்த நிலையில் இலங்கை மருத்துவ சபையின் தலைவராக கொல்வின் குணரத்னவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்தார்.

மருதானை கின்சி வீதியில் அமைந்துள்ள இலங்கை மருத்துவ சபைத் தலைமை காரியாலயத்துக்குக் கடமைகளை பொறுப்பேற்க நேற்றுச் சென்ற போது கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டது. (5,31)

## நாலரைக் கோடி ரூபா

# வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் சிக்கின சிறப்பு அதிரடிப்படையிடம்

கொழும்பு ராஜகிரியவில் இரு மாடிகளைக் கொண்ட வீடொன்றைச் சுற்றி வளைத்து, நாலரைக் கோடி ரூபா பெறுமதியான மதுபானப் போத்தல்களைச் சிறப்பு அதிரடிப் படையினர் கைப்பற்றினர். சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்தனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்ட விரோத விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 5 ஆயிரத்து 613 வெளிநாட்டு மதுபானப் போத்தல்களுடன் 46 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு மதுபான போத்தல் கொள்வனவு செய்யும் சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் அனுப்பட்டுள்ளார். சிவில் உடையில் சென்ற அவருக்கு வெளிநாட்டு மதுபான போத்தல் விற்பனை செய்யப்படும் போது சுற்றிவளைப்புக்குத் தயாராக இருந்த சிறப்பு அதிரடிப் படையினர் அங்கு புகுந்தனர். வெளிநாட்டு மதுபானப் போத்தல்களை மீட்டனர்.

நேற்றுக் கைப்பற்றப்பட்ட மதுபான போத்தல்களே, இலங்கையில் கைப்பற்றப்பட்ட இரண்டாவது மிகப் பெரிய சட்ட விரோத வெளிநாட்டு மதுபான போத்தல்கள் சுற்றிவளைப்பு என்று கருதப்படுகிறது. இரு வருடங்களுக்கு முன்னர் பொரளைப் பகுதியிலிருந்து கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் இதைவிட அதிக பெறுமதியான வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,31)

# உயர் நீதிமன்றத்தில் நேற்றுத் திடீரெனத் தீ

கொழும்பு, ஒக். 5

உயர் நீதிமன்ற நீதியரசரும், பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக் குழுவின் தலைவருமான கே.டி.சித்ரசிரியின் உத்தியோகபூர்வ அறையில் நேற்றுக் காலை 10 மணியளவில் திடீர் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது.

கொழும்பு புதுக்கோட்டையில் உள்ள உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் சித்ரசிரியின் அமைதி அறையில் உள்ள தண்ணீர் வடிகட்டியுடன் இணைக்கப்பட்டிருந்த பகுதியில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகத் தீ பரவியுள்ளது. (5,31)



## கிராமச் செயலகத்துக்கு அத்திபாரம் வெட்டிய மக்கள்

*அல்லாரை வடக்கில் போற்றத்தக்க பணி*

சாவகச்சேரி.ஒக்.5
மீசாலை அல்லாரை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்படவுள்ள கிராமச் செயலகத்திற்கான அத்திபாரம் இடும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் இரவு மக்களால் முன்னெடுக்கப்பட்டன.

அல்லாரை வடக்குக் கிராமத்தில் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் மற்றும் குடும்ப நல சேவையாளர் ஆகியோருக்கான அலுவலகங்கள் ஒரே கட்டத்தில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது. கட்டடத்துக்கான ஆரம்பப் பணிகளை அப்பகுதி மக்கள் சிரமதான அடிப்படையில் செய்து கொடுத்து வருகின்றனர். நேற்றுமுன்தினம் இரவு கட்டடம் அமையவுள்ள இடத்தில் அத்திபாரம் வெட்டிக் கொடுத்துள்ளனர்.

(ய-9)

### வடக்கில் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ள

# நுண்கடன் விவகாரம் தொடர்பில் மத்தியவங்கி ஆளுநர் ஆராய்வார்

யாழ்ப்பாணம், ஒக். 5
வடக்கு மாகாணத்துக்கு வருகை தரும் மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி வடக்கில் தற்போது அதிகரித்துள்ள நுண்கடன் விவகாரம் தொடர்பிலும் ஆராய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

போரின் பின்னர் பொருளாதாரத்தில் மிகவும் நலிந்து காணப்படும் மக்களிடத்தில் ஆசை வார்த்தைகள் காட்டி நுண்கடன் என்னும் பெயரில் அதிக வட்டிக்குப் பணத்தை வழங்கி அதன் அறவீடுமுதல் அனைத்து விடயங்களாலும் பெரும் தொல்லைகள் ஏற்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

குடும்பப் பிரிவு , தற்கொலை முயற்சி என்பவற்றுக்கும் இதுவே வழி ஏற்படுத்துகிறது என்று விமர்சிக்கப்படுகிறது.

குறித்த கடன் முறைதொடர்பில் தினமும் செய்திகள் வெளிவரும் நிலையில் இது தொடர்பில் பலரும் சுட்டிக் காட்டினர்.

**போரின் பின்னர் பொருளாதாரத்தில் மிகவும் நலிந்து கானப்படும் மக்களிடத்தில் ஆசை வார்த்தைகள் காட்டி நுண்கடன் என்னும் பெயரில் அதிக வட்டிக்கு பணத்தை வழங்கி அதன் அறவீடுமுதல் அனைத்து விடயங்க ளாலும் பெரும் தொல்லைகள் ஏற்படுகின்றன என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.**

இதனால் குறித்த விடயம் மத்திய வங்கியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதன் அடிப்படையில் நாளை வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் 7ஆம் திகதியும் இருநாள் பயணமாக வடக்கு மாகாணத்துக்கு வரும் மத்திய வங்கி ஆளுநரிடம் இந்த விடயங்கள் குறித்து எடுத்துரைக்கப்படவுள்ளது.

இதற்காக கிராமத்தின் முக்கிய அமைப்புக்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை 7ஆம் திகதி சந்தித்து அவர் கலந்துரையாட உள்ளார்.

இந்தக் கடன் முறையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கடன் வழங்கும் வழிமுறை, அதன் அறவீட்டு நடவடிக்கைகள் தொடர்பில் அவர் சிறப்புக் கவனம் செலுத்துவார் என்றும் கூறப்படுகிறது.

(4-101)

## குருநகர் மீனவருக்கு வசதியாக ஆலயத்தில் சிறப்புப் பூசைப்பலி

யாழ்ப்பாணம் ஒக்.5
குருநகர் கடற்றொழிலாளர்கள் பூசைப்பலியில் பங்குபற்ற வசதியாக வெள்ளிக்கிழமைகளில் சிறப்புப் பூசைப்பலிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என குருநகர் புனித யாக்கப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ம.ரவிச்சந்திரன் அடிகளார் தெரிவித்தார்.

இந்தச் சிறப்புப் பூசைப்பலிகள் றெக்கிளமேசன் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயத்தில் இம்மாதம் 2ஆம், 4ஆம் வெள்ளிக்கிழமைகளிலும், கொலைவிலக்கி மாதா சிற்றாலயத்தில் 3ஆம் வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

கடற்றொழிலாளர்கள் தினமும் தொழிலுக்குச்செல்வதனால்பூசைப்பலிகளில் பங்கேற்க முடியாது போகின்றது. எனவே, மீனவர்கள் வருகைதராவிடின் இந்தச் சிறப்பு ஏற்பாடு இரத்துச் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ய-51)



மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கணித விஞ்ஞன தொழில்நுட்ப கண்காட்சி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் க.தேவராசா கலந்துகொண்டார்.

கல்லூரியின் ஓய்வுநிலை முதல்வர் எஸ்.சிவநேஸ்வரன், பழையமாணவர் சங்கத் தலைவர் ரி.பிரதீபன், அயல்பாடசலை மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். மாணவர்களது ஆக்கங்கள் பயில்நிலை சார்ந்த வகையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ய)

### ஆனைக்கோட்டைப் பகுதியில்

# கெரோயினுடன் இளைஞனும் யுவதியும் சிக்கினர்

யாழ்ப்பாணம். ஒக்.5
ஆனைக்கோட்டைப் பகுதியில் கெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் உட்பட இருவரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:
ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை சாலையில் இளைஞனும் யுவதியும் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். இவர்களைப் பொலிஸார் சோதனையிட்டனர். இதன்போது கெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 5,940 மில்லிக்கிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் இதே பகுதியில் கெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் உட்பட ஐந்துபேரை பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

அடுத்தடுத்த நாள்களிலேயே அப்பகுதியில் பெண்கள் உட்பட மேலும் சிலர் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர.

(ய-8)

# வடக்கு மாகாணத்தில் பணியாற்ற தமிழ் பொலிஸார் 1,000 பேர் தேவை

### தயக்கமின்றி உடனடியாக விண்ணப்பிக்குமாறு பெண்களையும் கோருகிறார் பொலிஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், ஒக். 5
வடக்கு மாகாணத்துக்கு ஆயிரம் தமிழ் பேசும் பொலிஸார் தேவையாக உள்ளனர். வடக்கிலுள்ள இளையோர் உடன் விண்ணப்பியுங்கள். உங்களுக்கான பயிற்சிகளும் காங்கேசன்துறையில் வைத்தே வழங்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அங்கு அவர் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கில் தமிழ் பொலிஸார் பற்றாக்குறை அதிகமாக உள்ளனர். இந்தமுறை வடக்கு கிழக்கில் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்பவர்களுக்குரிய பயிற்சிகள் இதே மாகாணங்களிலேயே வழங்கப்படவுள்ளது.

முன்னைய காலங்களைப் போன்று பொலிஸ் பயிற்சிக்காக பிற மாகாணங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. எனவே இளையோர் மிக விரைவாக துணிச்சலுடன் இளைஞர்கள் குறித்த பதவிக்கு விண்ணப்பி யுங்கள். பொலிஸ் நிலையங்க ளில் இதற்கான விண்ணப்பப்படி வங்கள் வழங்கப்படும். எதிர்வரும் ஜனவரி மாதம் ஆயிரம் தமிழ் பொலிஸார் தேவையாக உள்ளனர்.

பெண்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதிகளவில் பற்றாக்குறை நிலவுகிறது. எனவே பெண்களும் கட்டாயம் பொலிஸ் வேலைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். மாதாந்த ஊதியமாக 55 ஆயிரம் ரூபா பெற்றுக்கொள்ள முடியும்.

எமது மக்களின் முன்னேற்றத்தை, தேவைகளை கருத்தில் கொண்டு விரைவாக பொலிஸ் சேவையில் இணையுங்கள் என்று வடக்கிலுள்ள இளையோரைக் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

# கொள்ளைச் சம்பவங்கள் நெல்லியடியில் அதிகரிப்பு

நெல்லியடி, ஒக். 5
நெல்லியடி பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

நெல்லியடி முருக மூர்த்தி வீதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் உள்நுழைந்த கொள்ளையர் அங்கு சமையலறைக்குள் சமைத்துக் கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவரின் 2 பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார். அதேபோல் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நெல்லியடி வதிரி வீதி செட்டித்தறை வீதியில் பெண் ஒருவர் தமது வீட்டின் முன்பக்க கதவை திறந்த போது, வீதியால் சென்ற கொள்ளையர் அந்தப் பெண்ணின் ஒன்றரை பவுண் சங்கிலியை அறுத்துத் தப்பித்துள்ளார்.

(வ-422)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரி | 150 | 160 | 150 | 160 | 140 |
| மரவள்ளி | 80 | 60 | 80 | 60 | 50 |
| பயிற்றை | 120 | 120 | 120 | 120 | 140 |
| பாகல் | 300 | 300 | 180 | 300 | 200 |
| க.கிழங்கு | 100 | 80 | 100 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 140 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 260 | 250 | 250 | 300 | 260 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 140 | 120 | 180 | 160 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 80 | 70 |
| கீரை | 40 | 40 | 35 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 400 | 280 | 400 | 340 |
| புடோல் | 80 | 100 | 100 | 100 | 100 |
| கோவா | 160 | 120 | 120 | 160 | 140 |
| வெண்டி | 80 | 80 | 100 | 80 | 80 |
| போஞ்சி | 240 | 200 | 140 | 180 | 200 |
| லீக்ஸ் | 160 | 200 | 120 | 180 | 180 |
| தேங்காய் | 75 | 90 | 80 | 90 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 250 | 250 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 25 | 15 | 15 |
| கறிமிளகாய் | 160 | 200 | 220 | 180 | 220 |
| கரட் | 200 | 160 | 80 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 170 | 100 | 280 | 120 | 160 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 700 |
| சுறா | 600 | 700 | 800 | 900 |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 500 | 500 |
| முரல் | 350 | 350 | 400 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 350 | 300 | 450 | – |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 350 | 200 | 400 | – |
| மதனம் | 250 | 200 | 200 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 250 | 300 | 400 | – |
| வாளை | 150 | 200 | 400 | – |

# மோ.சைக்கிள் லீசிங் செலுத்துவதற்காக தொலைக்காட்சி திருடியவர் மறியலில்

சாவகச்சேரி.ஒக்.5
நாவற்குழி பிரதேசத்தில் தொலைக்காட்சி திருட்டுப்போன சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
இதுதொடர்பில் தெரிய வருவதாவது:
மோட்டார் சைக்கிளின் கட்டுப்பணத்தைச் செலுத்த புதிதாக கட்டுப்பணத்தில் கொள்வனவு செய்த 48 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டியைப் பட்டப்பகலில் திருடிய நாவற்குளி வாசியை கட்டுக்காவலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.
நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த குடும்பத்தினர் கடந்த 28ஆம் திகதி மாதாந்தத் தவணைக் கட்டுப்பணத்தில் தொலைக்காட்சி ஒன்றை வாங்கியுள்ளனர்.
நேற்றுமுன்தினம் காலை வீட்டார் யாழ்ப்பாணம் சென்றுவிட்டனர். திரும்பிவந்து பார்த்தபோது வீட்டுக்கதவு உடைக்கப்பட்டு தொலைக்காட்சி திருடப்பட்டிருந்தது. அப்பகுதியில் விசாரித்தபோது அங்குள்ள ஒருவர் இன்னொருவரின் மோட்டார் சைக்கிளில் தொலைக்காட்சிப் பெட்டியை ஏற்றிச் சென்றதைக் கண்டதாகக் கூறியுள்ளனர்.
சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட இவர், மோட்டார் சைக்கிள் தவணைக் கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்காக தொலைக்காட்சியைத் திருடியதாக ஒப்புக் கொண்டார். (ய-9)

# மீசாலைப் பகுதியில் இன்று பற்றைக்காணிகள் துப்புரவு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட இளைஞர் கழகங்கள், சனசமூகநிலையங்கள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து டெங்கு ஒழிப்புநடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன. சாவகச்சேரி நகரசபையால் அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணுதல் தொடர்பான கூட்டங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
இதனையடுத்து சிரமதானம் மூலம் பற்றைக் காணிகளை துப்பரவு செய்வதற்கு பொது அமைப்பினர் முன்வந்துள்ளனர்.
இதனடிப்படையில் இன்று மீசாலையில் பற்றைக் காணிகள் துப்பரவுசெய்யப் படவுள்ளன.
இந்த நடவடிக்கைக்கு சபையின் பணியாளர்களுடன் வாகனங்களையும்வழங்க தயாராக உள்ளதாக இவ்விடயம் தொடர்பாக நகரசபை செயலாளர் தெரிவித்தார். (ய-9)

## வட்டு. இந்துவில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.5
வட்டு இந்துக்கல்லூரியின் பரிசளிப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி.கந்தையா சர்வேஸ்வரன் கலந்துகொள்வார்.
நிகழ்வில், நிறுவுனர் பேருரையை யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற்கல்லூரி உப பீடாதிபதி கலாநிதி பாலசுப்பிரமணியம் தனபாலன் நிகழ்த்துவார். (ய)

## நீர்வேலி பாடசாலையில் சிறுவர், ஆசிரியர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.5
நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை சிறுவர், ஆசிரியர் தின நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் தில்லைநாதன் ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொள்வார். (ய)




பெண்களுக்கான சாறி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## மூத்த பத்திரிகையாளருக்கு "கலைஞானச் சுடர் விருது

யாழ்ப்பாணம், ஒக்.4
நல்லூர்ப் பிரதேச சபை கலாசாரப் பேரவை இந்த வருடம் ஊடகத்துறை சார்ந்த மூத்த பத்திரிகையாளர் ஒருவருக்கு விருது வழங்கி மதிப்பளிக்கவுள்ளது.
இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய மண்டபத்தில் 2017ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேச சபையின் கலாசாரப் பேரவையின் பண்பாட்டு மற்றும் கலைஞர் மதிப்பளிப்பு நிகழ்வு நடைபெறும்.
இதில் பலதுறைகளைச் சார்ந்த கலைஞர்கள் விருது வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளனர். அவர்களில் ஊடகத்துறைக்கான விருதும் மதிப்பளிப்பும் மூத்த பத்திரிகையாளர் ஒருவருக்கு வழங்கப் படவுள்ளது.
யாழ்ப்பாணத்தில் 50 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள எஸ்.பெருமாள் இந்த விழாவில் "கலைஞானச் சுடர்" விருது வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளார்.
இந்தத் தகவலை நல்லூர் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி அன்ரன் யோகநாதன் வெளியிட்டார்.
எஸ்.பெருமாள் கதை, கட்டுரை, எழுத்தாளராகவும் கவிஞராகவும் விளங்கியுள்ளார். 2002 ஆம் ஆண்டு பத்திரிகைத் துறை தொடர்பான தனது அனுபவங்கள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அண்மையில் "நடந்தபடி தேடுவோம்" என்ற தலைப்பில் கவிதை நூல் ஒன்றையும் அவர் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ய. 21)

## தென்மராட்சியில் முழுநிலா கலைவிழா

தென்மராட்சி, ஒக்.4
தென்மராட்சி கல்வி வலயத்தின் முழுநிலா கலைவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்துகொள்வார்.
நிகழ்வின் சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், மதிப்புறு விருந்தினராக இலங்கை மனித உரிமைகள் அமைப்பைச்சேர்ந்த கலாநிதி வை.சிவராஜாவும், இனிய விருந்தினர்களாக ஓய்வு நிலைஅதிபர்களான அ.கயிலாயப்பிள்ளை மற்றும் க.அருந்தவபாலன் ஆகியோரும் கலந்துகொள்வர்.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் போராசிரியர் வசந்தி அரசரத்தினம் மதிப்பளிக்கப்படவுள்ளார். (ய-9)

## திருநிலைபடுத்தல்

யாழ்ப்பாணம். ஒக்.5
சில்லாலையைச் சேர்ந்த அருட்சகோதரன் யூட் கறோவ் இன்று வியாழக்கிழமை யாழ் ஆயர் பேரருத்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்பட உள்ளார்.
இந்த நிகழ்வு யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெறும். இவர் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்தவராவார். (ய-51)

## ஆசிரியர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.5
நெல்லியடி மத்திய கல்லூரியில் உலக ஆசிரியர்தினம் தொடர்பான நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப.9 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் நிகழ்வுகள் நடைபெறும்.
முதன்மை விருந்தினராக நெல்லியடி மத்தியகல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியினதும் முன்னாள் அதிபர் கி.நடராசா கலந்து கொள்வார்.
மூத்த மாணவத் தலைவன் நே.சிந்துஜன் நிகழ்வுக்கு தலைமை தாங்குவார். (ய-35)

+++++++++++++

யாழ்ப்பாணம், ஒக்.5
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியர்தின நிகழ்வு இன்று மு.ப.10 மணிக்கு நடைபெறும்.
பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும். (ய)

+++++++++++++

யாழ்ப்பாணம், ஒக்.5
நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய ஆசிரியர் தினவிழா நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை முதன்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக பவளவிழா கண்ட ஓய்வுநிலை ஆசிரியை செல்வி தங்கப்பொன் சபாபதி கலந்துகொள்ளவுள்ளார்.
மாணவ முதல்வர் சபை இதனை ஏற்பாடு செய்துள்ளது. (ய)



உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் நடத்தப்பட்ட நடப்பு ஆண்டுக்கான தேசிய கலை இலக்கிய விழா கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமைச்சர் எஸ்.பி. நாவின்னதலைமையில்கொழும்புபண்டார நாயக்கஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அரச ஊழியர்களுக்கிடையிலான குறு நாடகப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலகம் சார்பாக மேடை ஏற்றப்பட்ட "அன்பால் இணைந்த உறவுகள் "நாடகம் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றது. இதில் பங்குபற்றியவர்களான கு.குகானந்தனுக்கு 3 விருதுகளும், கு. கௌசல்யா, எஸ். வி. ஜோன் கலிஸ்ரஸ், இ. அனுராகரன் ஆகியோருக்கு தலா 3 விருதுகளும் கிடைத்தன. (ரி)

## வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால்

# கைவேலி காணி அபகரிப்பு தொடர்பான அறிக்கையை கோருகிறார் முதலமைச்சர்

முல்லைத்தீவு, செப். 5

புதுக்குடியிருப்பு-கைவேலிப் பகுதியில்வனவளப்பாதுகாப்புத்திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டு வனப் பிரதேசமாகஅடையாளப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக விரிவானஅறிக்கைஒன்றை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ்வரன்முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் கேட்டுள்ளார்.



கைவேலியில் 25 தமிழ்க் குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் வனவளத் திணைக்களத்தினரால்அபகரிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பானமுதலமைச்சர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:

வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் மக்கள் வாழ்ந்த பகுதியை வனப்பகுதியாக அடையாளப்படுத்தியிருக்கின்றது. அதனைதமக்கு மீளப்பெற்றுக்கொடுக்கும்படி மக்கள்மாகாணசபைஉறுப்பினர் து. ரவிகரன் ஊடாக எனக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

மேற்படி மக்களின் காணிகளை மீள மக்களிடமே கொடுக்கும்படிவனவளபாதுகாப்பு திணைக்க ளத்திடம் கோரவேண்டும். எனவே இதற்கு உகந்த வகையில் விரிவானஅறிக்கைஒன்றை வழங்குங்கள் என்று அக்கடிதத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது.

### பின்னணி

விடுதலைப்புலிகள்இயக்கத்தால் போராளி குடும்பங்கள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு கைவேலிப் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு குறித்த காணிகள் வழங்கப்பட்டன. 2006 ஆம் ஆண்டு அந்தக் காணிகளில் 25 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப்போரைத்தொடர்ந்துஅங்கிருந்துமக்கள்இடம்பெயர்ந்தனர். பின்னர் மீண்டும் தமதுபகுதிகளுக்குத்திரும்பினர். தமது காணிகளைச் சென்று பார்வையிட்டனர். எனினும், காணிகளுக்குச் செல்வதற்கு இராணுவத்தால் தடை விதிக்கப்பட்டது. மக்களை உட்செல்லவிடாது இராணுவத்தினர் அறிவித்தல் பலகையும் அங்கு நட்டனர். மக்கள் அங்கிருந்து திரும்பிதங்களது உறவினர்களுடைய வீடுகளிலும், வாடகைவீடுகளிலும்வசித்து வந்தனர்.

இந்தநிலையில் கைவேலிப் பகுதியில் இருந்து அண்மையில்இராணுவத்தினர்வெளியேறினர். ஆனாலும் இப்போது அந்தக் காணிகளை வனவளப்பாதுகாப்புப் பிரிவினர் கையகப்படுத்தியுள்ளனர். காணிகளைமீட்டுத்தருமாறுமக்கள் கோரினர்.

இவ்விடயம்வடக்குமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின்கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டது. ரவிகரன் குறித்த பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

இதுதொடர்பாக வடக்கு மாகாணமுதலமைச்சர்விக்னேஸ்வரனுக்கு அறிவிப்பதாகவும், மக்களுடைய காணிகளை மக்களுக்கு பெற்றுகொடுக்கநடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலைலேயேஇப்போது முதல்வரால் அறிக்கை கோரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ய-21)

## இளைஞர் கொள்கை உருவாக்கம்: எவருமே கருத்துக் கூறவில்லை

### மாவட்டரீதியில் செல்லத் திட்டம்

யாழ்ப்பாணம். ஒக். 5

வடக்கு மாகாணத்தில் இளைஞர் கொள்கை உருவாக்கம் தொடர்பில் எவரும் கருத்துத் தெரிவிக்கவில்லை. இதனால்மாவட்டரீதியாக கருத்துகளைச்சேகரிப்பதற்குநடவடிக்கைஎடுக்கப்படவுள்ளது என்று மாகாண இளைஞர் விவகார அமைச்சின் கொள்கை உருவாக்கல்குழு தெரிவுத்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இளைஞர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கொள்கைரீதியான பகுப்பு அவசியம். கொள்கைஒன்று இருக்குமானால் அதன் ஊடாக இளைஞர்களின் தேவைகளைஇனம்கண்டு சிறப்பாக நிறைவேற்ற முடியும்.

இதனால்கொள்கைஒன்றை உருவாக்குவதற்குஅமைச்சு தீர்மா னித்தது. அதற்கான அமைச்சரவைஅனுமதியும் கிடைத்திருந்தது.

இதனையடுத்து இணையதளம்மற்றும்சுற்றறிக்கைகள் ஊடாககருத்துகள்கோரப்பட்டது. எனினும்எவரும்கருத்துகளை முன்வைக்கவில்லை.

எனவே மாகாணசபையின் அனுமதியுடன் மாவட்ட ரீதியாக இளைஞர் குழுக்கள். பொது அமைப்புகள் மற்றும் கழகங்கள் ஊடாக கருத்துகளைப் பெறவுள்ளோம்.

இந்தச் செயற்பாட்டுக்கு யு.என்.எப்.இ.எ. நிறுவனம் நிதியுதவி செய்ய முன்வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

## இந்தியப் புடைவை வியாபாரிகள் இருவர் காவலூரில் கைது

யாழ்ப்பாணம் ஒக். 5

சுற்றுலாநுழைவுச்சீட்டில்இலங்கைவந்துசட்டவிரோதமான முறையில்வர்த்தகநடவடிக்கையில்ஈடுபட்டனர்என்றகுற்றச்சாட்டில்இரண்டுஇந்தியர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.



இது தொடர்பில் மேலும்தெரியவருவதாவது:

வேலணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீடுவீடாகச் சென்று புடவை வியாபாரத்தில் ஈடுபட்ட இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின்பின்னர்கைதுசெய்யப்பட்டஇருவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்வுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் பெருமளவிலான உடுபுடைவைகள்கைப்பற்றப்பட்டுள்ளனஎன்றும்தெரிவிக்கப்பட்டது. (ய-8)

## பூநகரியில் மணல் அகழ 4 பேருக்கு மட்டுமே அனுமதி

### கனிய வளங்கள் திணைக்களத்துக்குப் பரிந்துரை

கிளிநொச்சி, ஒக். 4

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த காலத்தில் 16 பேர் மணல்குவாரியில் மணல் ஏற்ற அனுமதி வழங்கப்பட்டது. புதிய நடைமுறையின் கீழ் 4 பேருக்கு மட்டுமே வழங்கப்படும் வாய்ப்புள்ளதாக பூநகரிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய நடைமுறையின் கீழ் மணல் ஏற்ற 7 பேரின் விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தன. அவற்றை மிக இறுக்கமாக ஆராய்ந்தோம். 4 விண்ணப்பங்கள் மட்டுமே நில உரிமையாளர்களால் விண்ணப்பிக்கப்பட்டதோடு அதற்குரிய தகைமையைக் கொண்டிருந்தன. அவர்களுக்கே மேல் நடவடிக்கைக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அவை கனியவளத் திணைக்களம் கோரிய தகைமைகள் இருப்பின் அனுமதிக்கப்படலாம் எனத் தெரிவித்தார்.

குறித்த இடத்தில் குறிப்பிட்ட அளவில் மணல் ஏற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டபோதும், அளவுக்கு அதிகமாகவே மணல் ஏற்றப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அதனால் மணல் ஏற்றுவதற்குப் புதிய முறையில் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-101)

## புதிய உள்ளூராட்சி சபைக்கான ஆய்வுகள் நேற்றுடன் நிறைவு

யாழ்ப்பாணம், ஒக். 5

வடக்கு மாகாணத்தில் புதிய உள்ளூராட்சி சபைகளின் உருவாக்கம் மற்றும் தரமுயர்த்தல்தொடர்பானஆய்வுகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்துள்ளனஎன்றுமாகாண தலைமைச் செயலர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

வடக்கில் புதிதாக 6 உள்ளூராட்சி சபைகளை உருவாக்குவதற்கும், 6 சபைகளை தரமுயர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் ஆய்வு செய்வதற்காக வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் கடந்த 13ஆம் திகதி குழுக்களை நியமித்திருந்தார். ஐந்து மாவட்டங்களுக்கும், மாவட்டச்செயலாளர்கள்தலைமையில் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

அந்தக் குழு தமது அறிக்கையை இருவாரங்களுக்குள் (செப்ரெம்பர் 30) மாகாண தலைமைச் செயலாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது. அந்த அறிக்கைகளின் அடிப்படையில் தலைமைச் செயலாளர் தமது பரிந்துரைகளைமுன்வைப்பார். அதனடிப்படையில் கொழும்பு அமைச்சால் இறுதித் தீர்மானம் எட்டப்படும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கானகுழுக்களும் ஆய்வுகளை நடத்தி புள்ளியிடலை மேற்கொண்டிருந்தன. கிளிநொச்சி, முல்லைத்தீவுஆகியஇருமாவட்டங்களின் குழுக்களும் ஆய்வை நடத்தி முடிக்கவில்லைஎன்றுதெரிவிக்கப்பட்டது.

எனினும், குறித்த இரண்டு மாவட்டங்களின் குழுக்களும் நேற்றுத் தமது ஆய்வுகளைநிறைவுசெய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த அறிக்கைகள் விரைவில் மாகாண தலைமைச் செயலருக்கு அனுப்பிவைக்கப்படும்எனகுறித்தஇரண்டு மாவட்டங்களினதும் செயலாளர்கள்தெரிவித்தனர். (ய-101)

## விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு அடுத்த வருடம் தீர்வு கிடைக்கும்

### அமைச்சின் திட்டப்பணிப்பாளர் உறுதி

யாழ்ப்பாணம். ஒக். 5

வடக்கு மாகாணத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடுத்தாண்டின்நிதிஒதுக்கீட்டில்நிறைவேற்றுவதற்குநடவடிக்கைஎடுக்கப்படும்என்று விவசாய அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஈ. சுரேந்திரநாதன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயிகளின் பிரச்சினைகளைஆராயும் வேலைத்திட்டம் மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கால்நடை சம்பந்தமான பிரச்சினைகளும் ஆராயப்படுகின்றன.

வருடம்தோறும்வறட்சியால்கிணறுகள் வற்றுவதால் பயிர்கள் அழிவடைகின்றன. விவசாயக்கிணறுகளை சீரமைக்கவேண்டும். 2020ஆம்ஆண்டு அரசு புகையிலைஉற்பத்தியை தடைசெய்யவுள்ளது. முதன்மைப் பணப்பயிரான புகையிலைதடைசெய்யப்பட்டால்வாழ்வாதாரம் பாதிக்கும். எனவே சிறப்பான மாற்றுப்பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்படவேண்டும். கால்நடைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க வேலிகளை அமைக்கவேண்டும். இதற்கு மரக்கட்டைகளை வெட்டுவதற்கு வனவள திணைக்களத்திடம் அனுமதி பெற்றுத்தரவேண்டும்.

அத்துடன் பாலைப் பாதுகாத்துப் பதப்படுத்தி மாற்று உற்பத்திகளை முன்னெடுக்க வேண்டும். இதற்கு நவீன உபகரணவசதிகளும், பயிற்சிநெறிகளையும் வழங்கவேண்டும் என்று விவசாயிகள் தமது பிரதிநிதிகள் ஊடாக கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இவைதொடர்பில் அமைச்சு ஆராய்ந்து அடுத்த ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் இவற்றை உள்ளடக்கி உரியதீர்வை வழங்கும் என்றார். (ய-ரி)

# கடற்பாசி செய்கைக்கு வடக்கில் ஆர்வமில்லை

## அதிக இலாபம் ஈட்டக்கூடிய இந்தத் தொழிலை முன்னெடுப்போருக்கு உதவ அமைச்சு தயார்



யாழ்ப்பாணம்.ஒக்.5
"மக்கள் கடற்பாசி வளர்ப்பில் ஆர்வம் காட்டவில்லை. ஏற்றுமதி வருமானம் ஈட்டக்கூடிய பாசியை வளர்ப்பதன் மூலம் சிறந்த பயனைப் பெறலாம். பாசி வளர்ப்பில் ஈடுபடுவோருக்கு அமைச்சு அனைத்து உதவிகளையும் வழங்கும்'' என்று வடக்கு மாகாண நன்னீர் மீன்பிடி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடி சார்ந்த பல்வேறு உதவிகளை அமைச்சு செய்து வருகின்றது. அதில் கடற்பாசி வளர்ப்பு திட்டத்தை மேற்கொள்ளுவதற்கு பல்வேறு முயற்சிள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அத்திட்டம் பெரிதாக வெற்றியளிக்கவில்லை. காரணம் மக்களின் வாழ்க்கை முறைமை. அன்றாடம் தொழிலுக்கு சென்று வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்டனர். இந்தநிலையில் இரண்டு மாதங்களில் பலன் தரும் கடல்பாசி வளர்ப்பில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை. அன்றாடத் தொழில் பாதிக்காத வகையில் கடற்பாசியை வளர்க்க முடியும். இதுதொடர்பான அதிக பயிற்சித் திட்டங்கள் அடுத்த ஆண்டு முன்னெடுக்கப்படும்.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியில் தற்போது 3 மாவட்டங்களில் பயிற்சிநெறிகளை நிறைவு செய்துள்ளோம். 5.5 மில்லியன் ரூபா செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சுழிபுரம், சங்கானை, தெல்லிப்பளையிலும் கிளிநொச்சியில் பூநகரியிலும் மன்னாரில் முசலி, நானாட்டான் பிரதேசத்திலும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடல்பாசி வளர்ப்பதற்கு கடல் மட்டம் சமாந்தரமாகவும் அலைகள் ஆழம் குறைந்த கடற்பரப்பு அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு முல்லைதீவு மாவட்டத்தில் பயிற்சிகளை வழங்கவில்லை. கடற்பாசி மருத்துவ தேவைகளுக்கும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பதற்கும் பயன்படுகின்றது. ஏற்றுமதி வாய்ப்பு அதிகம்.

வடக்கு மாகாணத்தில் கடற்பாசியைக் கொள்வனவு செய்வதற்கு 'கேலிஸ்' நிறுவனம் முன்வந்துள்ளது.

எனவே, மக்கள் பயிற்சிகளைப் பெற்று கடற்பாசி செய்கையில் ஆர்வம் காட்ட வேண்டும். 45 நாள்களில் அதிகளவு வருமானத்தைப் பெறமுடியும். பயிற்சிகள் மற்றும் உபகரணங்கள் என்பன இலவசமாக வழங்கப்படும். இதுதொடர்பாக நன்னீர் மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் இருந்து தகவல் சேகரிக்கப்பட்டு வருகின்றன- என்றார். (ய-ரி)

*கிளிநொச்சி மாவட்டத்தில்*

# பாடசாலைகளில் இடைவிலகும் மாணவர் எண்ணிக்கை உயர்வு

கிளிநொச்சி, ஒக்.5
கிளிநொச்சி மாவட்டத்தின் விசுவமடு, கல்லாறு மற்றும் மயில்வாகனபுரம் பகுதிகளில் பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

எதிர்கால நன்மை கருதி அதிகாரிகள் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதிசெய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடப்படுகின்றது.

இந்த விடயம் போர் முடிந்த காலத்தில் நிலவியது. பின்னர் கட்டுக்குள் இருந்தது.

தற்போது மீண்டும் அதிகரித்து வருகின்றது. இருப்பினும் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். கடந்தவாரம் கல்மடுவில் 7 சிறுவர்கள் இனம்கானப்பட்டு மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் பணி இடம்பெற்றது. இப்பணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்" என்று கிளிநொச்சி மாவட்ட சிறுவர் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (ய-101)

# தாதியர் வெற்றிடங்களை ஈடுசெய்வதற்காக 13 பேருக்கு மீள் நியமனம்

யாழ்ப்பாணம்.ஒக்.5
வடக்கு மாகாணத்தில் நிலவும் தாதியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒப்பந்த அடிப்படையில் இதுவரை 13 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாரகன் தெரிவித்தார்.

சேவைக்காலத்தை நிறைவுசெய்தவர்களே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் தாதியர்களின் வெற்றிடம் நீண்டகாலம் நிரப்பப்படாமல் உள்ளது. இதற்கு தமிழ் மாணவர்கள் தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பிக்காமையும் ஒரு காரணமாகும்.

எமது மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் அதிகம் தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பித்தால் மாத்திரமே நாம் வெற்றிடங்களை நிரப்பமுடியும். உடனடியாக 40 தாதியர் வெற்றிடங்கள் நிரப்பவேண்டிய தேவை உள்ளது.

ஆனால் கொழும்பு அதிகமானவர்களை வேறு மாகாணங்களுக்கு நியமனம் செய்துவிடுகின்றது.

வடக்கு மருத்துவமனைகளில் சேவையாற்றும் தாதியர்களின் சேவைக் காலம் நிறைவுபெற்றாலும், தேவையின் நிமித்தம் இதுவரை 13 பேர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 பேர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கும், 2 பேர் மன்னார் மாவட்டத்துக்கும் ஒருவருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர ஒப்பந்த அடிப்படையில் 5 மருத்துவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் -என்றார்.

(ய-ரி)

# அரச விடுதிகளை ஆக்கிரமித்திருக்கும் அரசியல்வாதிகள்

வவுனியா, ஒக்.4
வவுனியா மாவட்டச்செயலகத்துக்குச்சொந்தமான அரச விடுதியை மீளப் பெற்று க்கொள்ளுமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மாவட்டச்செயலாளருக்கு எழுத்தில் அறிவித்திருந்தார். இருந்தபோதிலும் அங்கு குடியிருக்கும் ஈ.பி.டி.பியினர் அதனை ஒப்படைக்க மறுத்து வருகின்றனர் என மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவட்டச் செயலகத்துக்குச் சொந்தமான 3 அரச விடுதிகளை அரசியல்வாதிகள் மூவர் நீண்டகாலமாக அடாத்தாகப்பிடித்துவைத்திருக்கின்றனர்.

அதற்கான வாடகைப்பணத்தையும்செலுத்துவதில்லை என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த 3 அரசியல்வாதிகளும் கட்டடங்களை உடன் ஒப்படைக்கப்பட வேண்டும் என ஒழுங்கிணைப்புக் குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விடுதிகளைக் கையகப்படுத்தி வைத்துள்ள அரசியல்வாதிகளான அமைச்சர் ரிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகிய மூவருக்கும் தீர்மானத்தை அனுப்பி கட்டடத்தை மீள ஒப்படைக்குமாறு கோரப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தனது பொறுப்பில் உள்ள கட்டடத்தைப்பொறுப்பேற்குமாறுமாவட்டச் செயலாளருக்கு எழுத்தில் அறிவித்தார். இருப்பினும் அந்தக் கட்டடத்தை தற்போது உபயோகிக்கும் ஈ.பீ.டி.பியினர் அதனை ஒப்படைக்கமறுக்கின்றனர் எனத்தெரிவிக்கப்படுகிறது. (ய-101)



யாழ்ப்பாணம்- கிளிநொச்சி பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் உலக அமைதி தின நிகழ்வுகள் "அமைதிக்காக ஒன்றுபடுவோம் அனைவருக்கும் மரியாதையும் பாதுகாப்பும் கௌரவமும் அளிப்போம்" என்னும் தொனிப் பொருளில் நிலையத்தின் சுகதாமம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களின் ஆசிய -ஆஸ்திரெலிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் மருத்துவர் நிர்மலா கஜாரியா கலந்துகொண்டார். (ரி )

# வீடு அமைத்து வழங்கிவிட்டு அரசு காணி உறுதியை இழுத்தடிக்கிறது

## வித்தியாவின் தாயார் சலிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3
கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் குடும்பத்துக்கு, வவுனியாவில் வழங்கப்பட்ட வீடு, அதனுடன் இணைந்த காணிக்குரிய உரிமைப் பத்திரங்கள் ஒன்றரை வருடங்களாகியும் அரசால் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் வித்தியாவின் தாயாரான சிவலோகநாதன் சரஸ்வதி தெரிவித்ததாவது:

மகளின் படுகொலைக்குப் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு சென்று அரச தலைவரைச் சந்தித்தேன். அதன்போது எமக்கு வீடு ஒன்றைக் கட்டித் தருவதாக அரச தலைவர் உறுதியளித்திருந்தார். அதனை வவுனியாவில் தருவதாகவும் அவர் கூறினார். அதன்படி வவுனியாவில் சுமார் 2 பரப்புக் காணியில் வீடு ஒன்று அமைத்துத் தரப்பட்டது. எனினும் சுமார் ஒன்றரை வருடங்கள் கடந்தும் அந்தக் காணிக்குரிய உறுதியோ வேறு ஆவணமோ இதுவரை எமக்குத் தரவில்லை. இது தொடர்பில் காணி அமைச்சுக்குக் கடிதங்கள் எழுதிச் சலித்துவிட்டேன். இன்னும் பதிலில்லை.

மகளைப் படுகொலை செய்தவர்கள் 7 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தனக்குத் தரப்பட்ட வீட்டுக்கான உறுதிப் பத்திரங்கள் கிடைக்காமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் மூலமாக முறையிட்டு உரிய தீர்வைத் தர நடவடிக்கை எடுக்குமாறு 2 வாரங்களுக்கு முன்னர் கோரியுள்ளேன். அவரின் பதிலுக்காகக் காத்திருக்கிறேன்" என்றார்.

(வ-4)

### கூட்டாட்சி வழங்கப்படவில்லை:

# சிங்களத் தலைவர்கள் இப்படித்தான் கூறுவர்


## ஆனால் உண்மை அதுவல்ல என்கிறார் தமிழரசுவின் செயலர் கி.துரைராஜசிங்கம்

கொழும்பு, ஒக். 5
இடைக்கால அறிக்கையில் கூட்டாட்சி கொடுக்கப்படவில்லை என்றுதான் சிங்களத் தலைவர்கள் சொல்லுவார்கள். சொல்லித்தான் ஆக வேண்டும். கூட்டாட்சி கொடுக்கப்பட்டு விட்டது என்பதுதான் உண்மை. அதனை நாங்கள் பூதாகரமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.
மட்டக்களப்பு வந்தாறுமூலை மாருதி பாலர் பாடசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்ற கலை விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டிலே தற்போது புரட்டப்பட்டிருக்கின்ற புதிய பக்கங்கள் எமது கனவை நனவாக்குகின்ற செயற்பாட்டைச் செய்து கொண்டிருக்கின்றது. அறுபது எழுபது ஆண்டு காலமாக எங்களுக்கு விடிவு கிடைக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு விதமான நடிவடிக்கையினை மேற்கொண்டோம். ஒரு சனநாயக நாட்டின் நடவடிக்கைகளின் முற்றுப்புள்ளி என்பது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவது என்பதுதான். அரசமைப்புச் சட்டம் உருவாக்குவது என்கின்ற விடயத்தில் இதனை உருவாக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்கியவர் எமது தலைவர் சம்பந்தன் என்பதை நாம் உறுதியாகக் கூற முடியும்.
இதற்கு முன்பு ஆக்கப்பட்ட எல்லா அரசமைப்புச் சட்டங்களிலும் தமிழ் மக்களும், தமிழ் மக்களின் கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டன. இப்போது இருக்கின்ற அரசமைப்புச் சட்டம் இந்த நாட்டினுடைய முழுமையான நாடாளுமன்றத்தால் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாகச் சொல்லப் போனால் சிறுபான்மை மக்களின் அதிலும் தமிழ் மக்களின் பங்களிப்போடு இந்த அரசமைப்புச் சட்டம் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் அது ஒரே மனதாகத் தீர்மானிக்க வேண்டும் என்ற விடயத்தில் எமது தலைவர், அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர் ஒத்தகருத்துள்ளவர்களாக இருந்து மிக இராஜதந்திரமாகக் கையாண்டு தீர்மானத்தை எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் நாடாளுமன்றத்திலே நிறைவேற்றினார்கள். இது நமது நாட்டின் சரித்திரத்திலே பொறித்து வைக்கப்பட வேண்டிய விடயமாகும். அரசமைப்பின் இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.
எமது மாற்றுக் கருத்துக் கொண்ட எல்லா அன்பர்களுக்கும், தலைவர்களுக்கும் சொல்லிக் கொள்வது, அரசமைப்பை எமது தலைவர்கள் ஏற்றுக் கொள்வதற்கிணங்க அனைவரும் சேர்ந்து நின்று அதனை நாங்கள் நிறைவேற்றுவோம். அதற்குப் பின்பு பிரிந்து நின்று எமது அரசியலைச் செய்யலாம்.
சிங்களத் தலைவர்களால் கூட்டாட்சி கொடுக்கப்படவில்லை என்ற சொல்லானது பிரிந்து செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை



என்ற செய்தி மாத்திரமேயாகும். அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசமைப்புப் பிரிந்து செல்வதற்கு அனுமதிக்கவில்லை. நாங்கள் கேட்டுக் கொண்ட அளவிற்கு அதிகாரங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன, பரவலாக்கப்பட்டிருக்கின்றன. மாகாண ஆளுநர் அரசியல் நடவடிக்கையிலே ஈடுபடக் கூடாது என்ற விடயம் வருகின்றது. இவ்வாறு கூட்டாட்சிக்கான விடயங்கள் அதிலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. பெயர் வேண்டாம். நாங்கள் கூட்டாட்சியைப் பொதியச் செய்திருக்கின்றோம். இதனை நாங்கள் மக்களுக்குச் சொல்லுவோம் - என்றார். (5)

### வாழ்வில் சமநிலை = மனதின் சமாதானம்




– சாந்திகம்.

## இடைக்கால அறிக்கை குறித்து மக்களின் நிலைப்பாடு என்ன?

### *11இல் அரச தலைவருக்கு விளக்கமளிப்பு சிவில் அமைப்புகளும் பங்கேற்பு*

கொழும்பு, ஒக். 5
புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இந்த அறிக்கை தொடர்பில் மூவின மக்களினதும் உறுதியான நிலைப்பாடு என்னவென்று எதிர்வரும் 11ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் சிவில் அமைப்புகள் விளக்கமளிக்கவுள்ளன.
இடைக்கால அறிக்கையானது கூட்டாட்சிக்கு வழிவகுத்துவிடும் எனச் சுட்டிக்காட்டி அதற்கு எதிராக மகிந்த அணி பரப்புரை முன்னெடுத்துவருகின்றது. இந்த அறிக்கையானது தமிழர்களுக்கு ஏமாற்றமளிக்கும் வகையில் அமைந்துள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார். இடைக்கால அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஏற்றுக் கொண்டுள்ளது. ஒற்றையாட்சிக்கு முடிவுகட்டப்பட்டுள்ளது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
இடைக்கால அறிக்கை தொடர்பில் எதிரும், புதிருமாகக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருவதால் இந்த விடயத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்நிலையிலேயே அரச தலைவரைச் சந்தித்து, இடைக்கால அறிக்கை சம்பந்தமாக மக்களின் நிலைப்பாடு என்னவாக உள்ளது என்று விளக்கமளிக்கப்படவுள்ளது.
இந்தச் சந்திப்பில் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களான சரத் விஜேசூரிய, வெயங்கொட, சமன் ரத்னப்பிரிய மற்றும் புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

### மதுபானம் என்று கிருமிநாசினியைப் பருகியவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 5
மதுபானம் என்று நினைத்துக் கிருமிநாசினியைப் பருகிய நபர் உயிரிழந்துள்ளார்.
கம்பகா பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் மதுபான போத்தலில் வைக்கப்பட்டிருந்த கிருமி நாசினியை, மதுபானம் எனக் கருதி அருந்தியுள்ளார்.
கம்பகா, வதுரகம, படேபொல என்னும் முகவரியைச் சேர்ந்த 48 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (5)

## ஒற்றையாட்சியை மாற்றக் கூடாது

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 5
ஒற்றையாட்சி தன்மையில் எந்த மாற்றமும் செய்யப்படக் கூடாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலரான அமைச்சர் பட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்து பேசினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் இலங்கை அரசின் தன்மை தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதற்கு ஹெல உறுமய எதிர்ப்புத் தெரிவிக்கிறது. மாகாண சபை முறைமை நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையில் சில பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.
புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சித் தன்மை மற்றும் தற்போதைய அரசமைப்பின் 4 (1) மற்றும் 76 (1)ஆவது பிரிவுகள் அப்படியே தொடர வேண்டும். இடைக்கால அறிக்கையில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமை நீக்கப்பட்டுள்ளதாகச் சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.
தற்போதைய அரசமைப்பு எந்தவொரு குறிப்பிட்ட மதத்துக்கும் சிறப்பு நிலை அளிக்கப்பட்டிருக்கவில்லை. புதிய அரசமைப்பு நாட்டின் உறுதிப்பாட்டையும், சனநாயகத்தையும் உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும் - என்றார். (5)

## லலித் ஜயசிங்க மீது மற்றுமொரு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 5
வித்தியா படுகொலை வழக்கில் குற்றவாளிக்குப் பாதுகாப்பு வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க மீது மற்றுமொரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.
2011ஆம் ஆண்டு தங்காலையில் வைத்து குராம் செய்க் என்ற பிரிட்டன் குடிமகன் படுகொலை செய்யப்பட்டதோடு, அவரது காதலியான ரஷ்ய நாட்டுப் பெண் பாலியல்வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின்போது லலித் ஜயசிங்க கடமையைச் சரியாக நிறைவேற்றத் தவறியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.
இந்தக் குற்றச்செயல் தொடர்பான விசாரணைகளின்போது தங்காலைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சம்பத் விதாரணபதிக்குச் சார்பாக முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் செயற்பட்டுள்ளார் எனக் குற்றச்சாட்டுச்சுமத்தப்பட்டுள்ளது.
கடந்த 2013ஆம் ஆண்டு தெரணியகல நூரித் தோட்ட அதிகாரி படுகொலை செய்யப்பட்ட விசாரணைகளின்போது கடமையைச் சரியாகச் செய்யத் தவறியமை தொடர்பில் இவர் மீது ஏற்கனவே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.
2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் பரப்புரையின்போது, கஹவத்தை பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்று தொடர்பாக லலித் ஜயசிங்க பொலிஸ் சிறப்பு விசாரணைப் பிரிவினால் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.
முன்னாள் பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட சிலரால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் விசாரணைகள் தொடர்பான தகவல்களை மறைத்த குற்றச்சாட்டிலேயே அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## கொழும்பு – தூத்துக்குடி கப்பல்சேவை ஆரம்பிக்க அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, ஒக். 5
கொழும்புக்கும்- தூத்துக்குடிக்குமிடையில் மீண்டும் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
அமைச்சரவையில் துறைமுகங்கள் மற்றும் கப்பல் சேவைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்தச் சேவையை ஆரம்பிக்க அனுமதி கோரும் ஆவணங்கள்முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
இலங்கை இந்திய சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி ஏற்கனவே மும்பையை சேர்ந்த நிறுவனமொன்றினால் கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையிலான கப்பல் சேவை 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.
ஆயிரத்து இருநூறு பயணிகள் பயணிக்கக் கூடிய அந்தக் கப்பல் வாரத்தில் இரு நாள்கள் சேவையில் ஈடுபட்டது. எதிர்பார்த்தவாறு பயணிகள் கப்பல் பயணத்தில் நாட்டம் கொள்ளாத நிலையில் அதே ஆண்டு நவம்பர் 18ஆம் திகதியுடன் சேவை நிறுத்தப் பட்டது.
கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவே அமைச்சர் மகிந்த சமரசிங்க அமைச்சரவையில் அது தொடர்பான ஆவணங்களை முன்வைத்திருந்தார்.
கொழும்பு இராமேஸ்வரம் பயணிகள் கப்பல்சேவையை ஆரம்பிக்க கேள்வி மனுவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் அது தொடர்பில் உரிய பெறுபேறுகள் கிடைக்கவில்லை என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அவரது அமைச்சரவைப் பத்திரத்தை ஏற்றுக் கொண்ட அமைச்சரவை உத்தேசத் திட்டத்துக்குச் தற்போதுள்ள கேள்வி மனு நடைமுறைகளை ரத்து செய்து விட்டு புதிதாகக் கேள்வி கோரப்பட்டு புதிய ஒருவரை நியமிப்பதற்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தச் சேவை தொடர்பாக இலங்கை - இந்திய அதிகாரிகளுக்கிடையிலான பேச்சு நடைபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (5)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் **திருமதி மேரிஜெசில்டா மேரிபெனடிக்சன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**தேவசகாயம் மைக்கல் இராசையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,**
**ஊழியர் நலன்புரி சங்கம்.**
**பிரதேச செயலகம் தென்மராட்சி**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை

**திருமதி**
**யசியானா மரியசந்திரகுமார்**

அவர்களின் கணவரும் சக ஆசிரியர் **யே.பிரபாகரன்** அவர்களின் மைத்துனருமாகிய

**ஞா.மரியச்சந்திரகுமார்**


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்புடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை, அரியாலை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

" ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் திரும்பி வருவாரோ"

**இராசரத்தினம் சர்வானந்தன் (ரஞ்சன்)**




கொடிகாமம் கச்சாயைப் பிறப்பிடமாகவும் ஆனந்தபுரி திருகோணமலையை வாழ்விடமாகவும், இத்தாலியில் தொழில் புரிந்தவருமான சர்வானந்தன் (ரஞ்சன்) 30.09.2017 இத்தாலியில் அகாலமரணம் ஆனார்.

அன்னார் இராசரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வனும், திருமதி அன்னலச்சுமி அவர்களின் அன்பு மருமகனும், தயாழினியின் ஆருயிர் கணவரும், டனஜா, அஷ்விகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸ்குமார் (கட்டார் ரமேஸ்) அவர்களின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இத்தாலியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ.மகேஸ்வரி (வனஜா)**
**(அம்மா)**

# அமிர்தலிங்கம், லக்ஸ்மன், லலித் அத்துலத் முதலி சனநாயகத்தைப் பாதுகாக்கவே உயிர்துறந்தனர்

### பெருமையாகக் கூறுகிறார் அமைச்சர் நிமல்

அமிர்தலிங்கம், காமினி திசாநாயக்க, ரணசிங்க பிரேமதாச, லலித் அத்துலத்முதலி, லக்ஸ்மன் கதிர்காமர் உள்ளிட்டோர் தமது உயிரைத் தியாகம் செய்து சனநாயக உரிமையைப் பாதுகாத்தனர். இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறப்பு அமர்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மக்கள் சனநாயகத்தை வலுப்படுத்தத் தொடர்ந்தும் உதவியுள்ளனர். அதுபோலவே காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான மக்கள் பிரதிநிதிகளும்கூட நாட்டு சனநாயகத்தை அர்த்தமிக்கதாக மாற்றியுள்ளனர்.

எமது நாட்டு நாடாளுமன்றத்தில் பல தரப்பட்ட மாற்றுக் கொள்கையுடைவர்களின் சங்கமிப்பு இருக்கின்றது என்பதே உண்மையாகும். சனநாயகக் கோட்பாட்டைப் பின்பற்றி வந்து சனநாயகம் பற்றிப் பேசுவது எமக்குப் பெருமையாகும். இலங்கை மக்களும் சனநாயகமான பண்புகளைக் கொண்டவர்கள் என்பதையே அதனால் அறியமுடிகின்றது.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிக்கப்பட்டதையும் நினைவுகூர வேண்டியது அவசியம். 1983ஆம் ஆண்டில் பொதுவாக் கெடுப்பு என்ற போர்வையில் நாட்டு மக்களின் சனநாயக உரிமையைப்பறித்துக் கொள்ள முற்பட்ட போதும் மக்கள் அதற்கு இடமளிக்கவில்லை. மக்கள் இராணுவ ஆட்சியை விரும்பவில்லை. மக்கள் நாடாளுமன்ற ஆட்சியைப் பலப்படுத்தினர் - என்றார். (5)

## மரண அறிவித்தல்



**இராசலிங்கம் குணலிங்கம்**

(முன்னாள் இலங்கை போக்குவரத்து சபை லிகிதர் - கொழும்பு)
(புளியடிக்கடை தாவடி)

இணுவில் கே.கே.எஸ் வீதி ஆஸ்பத்திரியடியைப் பிறப்பிடமாகவும் தாவடி கிழக்கு, நந்தாவில் லேன் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் குணலிங்கம் 04.10.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜாவின் அன்புக் கணவரும் சஞ்ஜீவனியின் (ஆசிரியர் யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) பாசமிகு தகப்பனாரும் இராகவனின் (e -optimiser Pvt Ltd) அன்பு மாமனாரும் ராகவர்ஷினி, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சொர்ணலிங்கம் (தர்ம கேணி எஸ்டேட்), பஞ்சலிங்கம்(முன்னாள் சிரேஷ்ட எழுது வினைஞர் - பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு, கொழும்பு) மற்றும் இராஜேஸ்வரி (முன்னாள் உதவி நூலகர் - யாழ். பல்கலைக்கழகம்), தியாகலிங்கம் (முன்னாள் மருந்தாளர் - குருநாகல் வைத்தியசாலை), சொர்ணபூபதி, யோகலிங்கம் (முன்னாள் வயலஸ் இயக்குநர் - பொலிஸ் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவநேசமணி, பத்மாவதி, கருணானந்தராஜா, சுவர்ணதிலக, சந்திராணி காலஞ்சென்ற விஜயமலர் மற்றும் ராதா, கணேசலிங்கம், சண்முகானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2017) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 918 7888**


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## செல்லையா ஜெகநாதன்

(உரிமையாளர் – நாதன் அலுமினியக் களஞ்சியம்)
மாக்கர் சாவகச்சேரி

திதி – பூரணை



ஆண்டொன்று கடந்தாலும் ஆறிடுமோ
உங்கள் நினைவலைகள்
நூறாண்டு சென்றாலும் உங்கள் நினைவு
எங்களை விட்டு என்றும் மறையாது
மாண்டீர் என்று சொல்ல மனம் மறுக்குதையா
கலங்காத நெஞ்சுடனே காலமெல்லாம் வாழ்ந்தீரே !
கலங்கவிட்டு எமையெல்லாம் பிரிந்து சென்றதேனோ
நீங்கள் நடந்த இடமெல்லாம் வெறுமையாய் - போனதையா
காலமெல்லாம் எம்முடன் வாழ்ந்திடுவீர் என்றிருந்தோம்
காலனே உம்மைப் பறித்தானோ எத்தனை ஜென்மம் எடுத்தாலும் ஆறிடுமோ எம் துயரம்.

அன்னாரது முதலாவது ஆண்டு நினைவேந்தல் இன்று (05.10.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு அன்றைய தினம் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்



தோற்றம் மறைவு

நாடாளுமன்றில் சனநாயகம் பேணப்பட்டால்

## உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

*மகிந்த அணி பகிரங்க சவால்*



கொழும்பு, ஒக். 5
நாடாளுமன்றத்தில் சனநாயகம் பாதுகாக்கப்படுகின்றது என்றால் உடனடியாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்த வேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன அரசுக்குப் பகிரங்க சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தின் 70ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய தினத்தில் உரையாற்றக் கிடைத்தமை ஒரு புறத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும் மறுபுறத்தில் 56 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மகிந்த அணிக்கு நாடாளுமன்றத்தில் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளமை சனநாயகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள சவாலாகும்.

வரலாற்றில் எமது சில தலைவர்கள் சனநாயகத்தைப் பாரதூரமான நிலைக்குக் கொண்டுசென்றது போன்று தற்போதைய ஆட்சியும் சனநாயகத்தைப் பாரதுரமான நிலைக்கே கொண்டு செல்கின்றது. நாடாளுமன்றம் சமூகத்தின் ஒருமைப்பாட்டைப் பிரதிபலிக்கின்றது. சமூக, பொருளாதார, கலாசார, கட்சி, கொள்கை ரீதியில் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்களின் நிலைப்பாடுகள் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. அவர்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அங்கீகாரம் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும். தேர்தல் இருப்பதாலேயே நாடாளுமன்றம் உள்ளது. தேர்தல் இல்லாவிட்டால் நாடாளுமன்றமும் இல்லை. சனநாயகத் தன்மை வாய்ந்த நாடாளுமன்றம் என்றால் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். வெற்றி தோல்விகளுக்கு முகம்கொடுத்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பல ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. மூன்று மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு, தெற்கு என்று நாட்டில் சனநாயகமாகத் தேர்தலை எதிர்பார்த்து காத்திருக்கும் மக்களுக்குத் தேர்தல் சவாலான விடயமாக மாறியுள்ளது. சனநாயக ஆட்சி என்றால் மக்கள் எதிர்பார்க்கும் தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்பதுடன், 54 உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மகிந்த அணியின் உரிமைகளை நாடாளுமன்றத்தில் அங்கீகரித்து அல்லது பெற்றுக் கொடுத்து மக்கள் ஆணையைப் பாதுகாக்க வேண்டும் என்றார். (5)

# அர்ஜுன் மகேந்திரனுக்கும் அஞ்சலோ மத்தியூஸ்க்கும் பிணைமுறியில் தொடர்பா?

## ஆணைக்குழு விசாரணையில் சிரிப்பொலி



கொழும்பு, ஒக். 5
மத்திய வங்கி பிணைமுறி விசாரணை ஆணைக்குழுவில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் முன்னிலையாகியிருந்தார்.

ஆளுநராகப் பதவியிலிருந்து தற்போதுவரை மேற்கொள்ளப்பட்ட அலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

'ஏ.எம்.' என்ற சுருக்கக் குறியீட்டின் விரிவாக்கம் தொடர்பில் கேட்கப்பட்டபோது அஞ்சலோ மத்தியூஸின் பெயரை ஆணைக்குழுவின் நீதியரசர் குறிப்பிட்டார்.

> ஒரே வீட்டில் வசித்தாலும் மத்திய வங்கியில் பரிமாற்றப்பட்ட விடயங்கள் தொடர்பில் அர்ஜுன் அலோசியஸும் நானும் ஒருபோதும் கலந்துரையாடவில்லை எனக் குறிப்பிட்டிருந்த நிலையில் இவ்வாறானதொரு கருத்தைக் குறிப்பிட்டமை வேடிக்கையாகவும் நகைப்பாகவும் பார்க்கப்பட்டது.

ஆணைக்குழுவில் சிரிப்பொலி எழுந்தது. விசாரணையின் போது. அரச சட்டத்தரணி பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டப்புல டி.லிவேரா ஒரு சில குறுந் தகவல்கள் தொடர்பில் தெளிவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். விசாரணைகளுக்கு அனுமதியளித்த ஆணைக்குழு குறுக்கு விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் குறுந்தகவல்களில் காணப்பட்ட ஆர்.கே. மற்றும் ஆர்.எம்.கே. போன்ற குறியீட்டு சொற்பதங்கள் தொடர்பில் கேள்வியெழுப்பப்பட்டன. ஆர்.கே. என்றால் ரவி கருணாநாயக்க, ஆர்.எம்.கே. என்றால் அர்ஜுன் மகேந்திரன்தான் என்று அரச தரப்பில் கூறப்பட்டபோதும் தனக்கு அவ்வாறு யாரையும் தெரியாதென வாதிட்டிருந்தார் அர்ஜுன் மகேந்திரன்.

ஒரே வீட்டில் வசித்தாலும் மத்திய வங்கியில் பரிமாற்றப்பட்ட விடயங்கள் தொடர்பில் அர்ஜுன் அலோசியஸும் நானும் ஒருபோதும் கலந்துரையாடவில்லை எனக் குறிப்பிட்டிருந்த நிலையில் இவ்வாறானதொரு கருத்தைக் குறிப்பிட்டமை வேடிக்கையாகவும் நகைப்பாகவும் பார்க்கப்பட்டது.

ஏ.மகேந்திரன், ஏ.எம். என்பது தனது பெயருக்கு மட்டும் பொருந்தாது எனவும், அந்தப் பெயரில் பலரும் இருப்பர் எனவும் அர்ஜுன மகேந்திரன் கூறினார். பிளவர் வீதியில் ஏ.எம்., ஏ.மகேந்திரன் எனும் சுருக்கத்தில் வேறு யாரும் உள்ளனரா என்று மூத்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் டப்புல டி லிவேரா கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அர்ஜுன மகேந்திரன், அலோசியஸின் மனைவியான தனது மகளின் பெயர் கூட அஞ்சலி மகேந்திரன் எனும் போது அவரது பெயராகக்கூட இருந்திருக்கலாம் எனவும், அது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனவும் குறிப்பிட்டார்.

மத்திய வங்கிக்குள் இடம்பெற்ற முறைகேடான 501 இடமாற்றங்கள் தொடர்பிலும் இதன்போது கேள்வி யெழுப்பப்பட்டது. மத்திய வங்கி சட்டதிட்டங்களுக்குட்பட்டே அனைத்துவிதமான இடமாற்றங்களையும் செய்தது மகேந்திரன் குறிப்பிட்டார்.

அர்ஜுன் அலோசியஸ்க்கும் அவரது பிரத்தியேக செயலரான ஸ்டீவ் சமுவேல் என்பவருக்கும் இடையில் பறிமாற்றப்பட்ட குறுஞ்செய்திகள் மூலமே இடமாற்ற விடயங்கள் வெளிப்பட்டுள்ளதாக அரச சட்டத்தரணிகள் வாதிட்டிருந்தனர்.

இந்த நிலையில் ஏ.எம்.என்பதுஅஞ்சலோ மத்தீயூஸா என்று ஆணைக்குழுவின் நீதியரசர் கேட்டபோது அனைவரும் சிரித்துவிட்டனர். (5)


பவளவிழா வாழ்த்து
சுந்தரம் டிவகலாலா
(பிரதம நிறைவேற்று அதிகாரி – ஆறுதல் நிறுவனம்)

பவளவிழாவில் பௌர்ணமிக்கும் நாயகனாம்
எங்கள் தந்தை சுந்தரம் டிவகலாலா
பக்குவமாய் பணியதனில் பாரினிலே உயர்ந்திட
பணிவுடனே சிரம் தாழ்த்தி கரங்குவித்து வாழ்த்திடுவோம்
வடக்கு கிழக்கினிலே மாகாணக்கல்வி அமைச்சினிலே
மாபெரும் பணி புரிந்தார் அமைச்சின் செயலாளராக
ஓய்ந்ததில்லை அவர்பணி ஓங்கி வளர்ந்தது எம்முடனே
நாட்டில் எம்மவர் ஆறுதல் பெற வேண்டி
ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக
ஆற்றும் பணிகள் அளப் பெரிது
வடலிகள் வானுயர எம் மண்ணின் மைந்தர்
நாட்டின் நாளைய நாயகராக
வழிகாட்டும் எம் தந்தையே ! உம் வழி நாம் தொடர்ந்து !
நாளைய நாயகரை நாம் வளர்ப்போம்
பவளவிழா நாயகனை பார்போற்ற நூறாண்டு
வாழ்க ! வாழ்க !! வாழ்க !!!

Congratulations

வாழ்த்துவோர் :
முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்
இணைப்பாளர்கள், ஆசிரியர்கள்,
துணுக்காய் கோட்டம், மாந்தை கிழக்கு கோட்டம்.

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமாக இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் கதைக்கப்பயில ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி.
424/3, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 675 1649

**விற்பனைக்கு**
கொம்பியூற்றர்கள், பிறின்ரர், போட்டோக் கொப்பி மெசின், பக்ஸ்மெசின், மேசைகள் ஆகியன உடனடி விற்பனைக்கு.
077 493 9767 (மானிப்பாய்)

**பிரத்தியேக வகுப்புக்கள்**
தரம் 06 - O/L கணிதம், வரலாறு வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். O/L Day Class மாணவர்களுக்கு பகல் நேர வகுப்புக்கள்
(தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.)
078 491 4259

**வேலையாள்கள் தேவை**
கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள வேலையாள்கள் (ஆண்) தேவை.
வயது (17 -22)
தொடர்பு: 076 466 6698

**பணிப்பெண் தேவை**
மல்லாகம் துர்க்கை அம்மன் கோயில் அருகில் இருக்கும் வீட்டுக்கு பணிப்பெண் தேவை. தங்கும் இடம் மற்றும் உதவிகள் செய்து தரப்படும். சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
077 502 7708

**தவறிவிட்டது**
செல்லையா சபாரத்தினம் என்பவருடைய தேசியஅடையாள அட்டை (372671491V) உட்பட வேறுசில முக்கிய ஆவணங்களுடன் கூடிய பை யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் செல்லும் தனியார் (பஸ்ஸில்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி கிளை உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். அல்லது தொடர்பு கொள்ளவும்.
077 214 6513

**தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தொலைத்தொடர்பாடல் கம்பனிக்கு மாதாந்தம் 40000/= இற்கு மேல் சம்பளம் பெறக்கூடிய விற்பனைப் பிரதிநிதி வெற்றிடம் இருபாலாருக்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காணப்படுகிறது. க.பொ.த சாதாரண தர அறிவு போதுமானது.
078 500 0580

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**அமரர் டாக்டர் அணாசலம் சிவபாதசுந்தரம் நினைவுப் பேருரை**
**"Tarnished Children of Northern Srilanka"**

| | |
|---|---|
| பேருரை வழங்குனர்: | டாக்டர் கீதாஞ்சலி சத்தியதாஸ்<br>சிரேஸ்ட விரிவுரையாளர்,<br>குழந்தை மருத்தவ ஆலோசகர்,<br>குழந்தை மருத்துவ பிரிவு, மருத்துவ பீடம்,<br>யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம். |
| இடம்: | கைலாசபதி கலையரங்கம்,<br>யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம். |
| திகதி: | 06.10.2017 வெள்ளிக்கிழமை |
| நேரம்: | பி.ப 3.00 மணி |

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பதிவாளர்.

**பகுதிநேர வேலைவாய்ப்பு**
வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு
**காப்புறுதி ஆலோசகராக** யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 1 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர் பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:

**யாழ்ப்பாணம், நெல்லியடி.**

**அடிப்படைத் தகைமைகள்**
- G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்பப்பங்களை 20.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல: 5545
C/0 உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# இந்தியாவுக்கு மத்தளவை வழங்குவதை எதிர்த்து நாளை பெரும் போராட்டம்

## மகிந்த அணி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 5

மத்தள வானூர்தி நிலையத்தை இந்திய நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாளை வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தப்போவதாக மகிந்த ராஜபக்சவின் பொது எதிரணி எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்தள வானூர்தி நிலையத்தை இந்திய நிறுவனத்துக்கு 40 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கும் அரசின் முடிவுக்கு எதிராக நாளை வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

அரசினால் அரச வளங்கள் விற்கப்படுவதை நாங்கள் எதிர்க்கிறோம். அரச வளங்களை விற்பனை செய்வதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். அரசு புரிந்து கொள்ளக் கூடிய மொழியில், அவர்களுக்குஎதிராகப் போராட்டம் நடத்துவோம். சக்திவாய்ந்த நாடுகள் தமது போர்க்களமாக இலங்கையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்கியதை அடுத்து, இந்தியாவைச் சமாதானப்படுத்துவதற்காகவே, மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு வழங்க அரசு முற்படுகிறது - என்றார். (5,31)

## மரண அறிவித்தல்

### செல்வி சத்தியபூரணி தெட்சணாமூர்த்தி

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சத்தியபூரணி தெட்சணாமூர்த்தி 03.10.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தெட்சணாமூர்த்தி - செல்வபூரணி அம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சிவஞானபூரணி, காலஞ்சென்ற சத்தியசீலன், நவநீதன் மற்றும் ஸ்ரீகாந்தா, சிவராஜபூரணி, சிவபாதம் காலஞ்சென்ற சந்திரபூரணி மற்றும் காங்கேயமூர்த்தி ஆகியோரின் சகோதரியும் பரிபூரணம், குமாரசாமி, புஸ்பராணி, காலஞ்சென்ற பாக்கியலக்சுமி மற்றும் செல்வமலர், சீதாலஷ்மி, பூபாலபிள்ளை, வஜந்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 107, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு என்ற முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நல்லூர் வடக்கு

தகவல்:
குடும்பத்தினர்.

077 3301939/ 077 233 4240/ 077 728 6122

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



குவலயம்
03 . 07 . 1932

சிவமயம்
16 . 10 . 2016

திருமதி
**சிவஞானவதி வயித்திலிங்கம்**

திதி : புரட்டாதிமாத பௌர்ணமி (05.10.2017)

ஈன்றெடுத்தெம்மை இன்னமுதூட்டி நற்
சான்றோராக்கிய சிவஞானவதித்தாயே !
ஆண்டொன்றாகியதே அவனியில் எமைப் பிரிந்து
ஆண்டவன் திருவடியில் பேரானந்தம் பெற்றெமக்கு
தூண்டு சுடரொளியாய் எம் வாழ்வினில் ஒளி தருவாய் !
ஓம் சாந்தி !

"ஞான இல்லம்"
தியேட்டர் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

## 20 ஆவது ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
29 . 08 . 1976

இறைவன் அடியில்
05 . 10 . 1997

அமரர் **யோண் கென்பிக்கன் ஜெஸ்ரின் ஜெயமதி**

வயலை தந்த விளை நிலமே
எம் கொடியில் பூத்த புது மலரே
சத்தியம் வென்ற ஒளிச்சுடரே
சுதந்திர காற்றில் ஒரு விளக்கே
மூவேழு வயதில் புதைந்திட்ட விதையே
உறுதியும் திடமும் உறைந்தவனே
இழந்தோம் இங்கு இருபது ஆண்டை
பூமுகம் காணாது புன்னகை மறந்து
கட்டி அழக்கூட புகழ்ட்ல் இன்றி
ஏற்க மறந்து ஏமாந்திருந்தோம்
உண்மை என்று உணர்ந்திட்டபோதும்
உள்ளம் கலங்கி உணர்வு இழந்து
வரம் கேட்கின்றோம் நீ வந்திட இங்கு
ஈழ மண் வளம் பெறும் போது
உனக்காய் ஒரு சரித்திரம் மலரும்
அப்போது உன் கனவும் விடியும்
நெஞ்சு கனக்க கண்கள் மல்க
கண்ணீர் பூக்களை இறைபதம் தூவி
இறைஞ்சுகின்றோம் இளைப்பாற வேண்டி

குடும்பத்தினர்.

## கண்ணீர்த்துளிகளுடன் நான்காம் ஆண்டு நினைவில்



மழலையாய்
19 . 02 . 1989

தெய்வமாய்
05 . 10 . 2013

**அமரர் சோகேஸ்வரன் கஜேந்தன் (கஜன்)**

(கலைப்பீட இறுதி வருட மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்

இமைகள் மூடித்திறப்பதற்குள் வருடம் நான்கு . ஆகிவிட்டது
நாம் வாழும் நாள்களில் - உம் நினைவுகள் எம்முடன் என்றென்றும்
வாழும்... வாழும்... வாழும்....

கெருடாவில்
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 714 8082

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் லயன் கதிர்காமத்தம்பி நாகராசா (J.P)**
(B.Com.M.A)
இளைப்பாறிய அதிபர் மகாஜனக்
கல்லூரி மாவட்ட இணைப்பாளர்
இந்து கலாசார
சமூகசேவைகள் அமைச்சு)

மண்ணில்
28.11.1938

விண்ணில்
07.10.2006

திதி: பூரணை (05.10.2017)

அன்புபொழியும் ஆதரவுப் புன்னகையும்
பணியில் உயர்வும் பலரிடமும் பூண்ட நட்பும்
இன்னமும் எம் கண்முன்னே நீங்கா இடம்பிடிக்க
உங்கள் நினைவுடனே ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்.

கே.கே.எஸ்.வீதி,
8 ஆம் கட்டை, மல்லாகம்

குடும்பத்தினர்.

"உயிர்தாயே உமையிழந்து ஓராண்டு உருண்டதுவோ?"

## முதலாம் ஆண்டு நினைவுத்தூவல்



திருமதி
**மஞ்சுளா செல்வரத்தினம்**

மண்ணில்
08.06.1954

மனதில்
16.10.2016

திதி: 05.10.2017

குலவிருட்சம் என நின்று குறைவின்றிக் காத்தவரே
குணக்குன்றாய் நின்றெங்கள் குடும்பம் யாத்தவரே
பலமாகிப் பண்பாகிப் பாசத்தாய் என்றாகி
பரவுநற் பேர்சொல்லப் படைத்த தாயமுதே
நிலமீது உமையிழந்து நிம்மதியைத் தொலைத்தோமே
நீராறாக் கண்களுடன் நின் நினைவில் நெகிழ்ந்தோமே
உலகுள்ள வரையுங்கள் உயர்பணிகள் வாழுமம்மா
உம்பாதக் கமலங்கள் உயர்மலரால் அர்ச்சித்தோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

"சோபிதாஸ் ஸ்ரோஸ்"
ஆவரங்கால்

நெஞ்சுருகும் நினைவுகளுடன்
குடும்பத்தவர்.

# அத்தியவசியப் பொருள்கள் தங்குதடையின்றி இறக்குமதி

## வாழ்க்கைச் செலவுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஒக். 5

வரையறையின்றி அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து மக்களுக்கு வழங்குவதற்கு வாழ்க்கைச் செலவுக் குழு தீர்மானித்துள்ளதாக, இந்தக் குழுவின் உறுப்பினரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவுக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டம் தொடர்பில் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்ததாவது:

அரிசி, பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம், ரின்மீன் ஆகியவற்றை இறக்குமதி செய்யப்படவுள்ளது. இறக்குமதி செய்யப்படும்பொருள்களைக் குறைந்த விலையில் சதொச ஊடாக விநியோகிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 8 அரிசி வகைகள் மற்றும் நெத்தலி மீனின் விலைகள் கடந்த 28ஆம் திகதி நள்ளிரவு முதல் குறைவடைந்தன. (5)

# இலங்கைச் சந்தையில் விற்பனையாகும் எண்ணெய் வகைகள் தரமற்றவை

## நுகர்வோர் அதிகார சபை கண்டறிவு

சந்தைகளில் விற்பனை செய்யப்படும் 90 வீதமான எண்ணெய் வகைகள் தரமற்றவை என்று நுகர்வோர் விவகார அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதிலும் பல பகுதிகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட எண்ணெய் மாதிரிகளை ஆய்வு செய்ததில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பாம் எண்ணெய், தேங்காய் எண்ணெய் மற்றும் மரக்கறி எண்ணெய் வகைகளின் மாதிரிகளே பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. இந்த எண்ணெய் வகைகளில் பிறிதொரு இரசாயனம் கலக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (5)

## ஆடைத் தொழிற்சாலையில் 155 பெண்கள் திடீர் மயக்கம்



டிக்கோயோ, ஒக்.5

நில்வெளியில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையிலிருந்த 200 பெண் பணியாளர்கள் நேற்றுத் திடீரென மயக்கமுற்றனர். அவர்கள் டிக்கோயா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று மு.ப. 9.45 மணியளவில் நடந்துள்ளது.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நில்வெளியில் இயங்கும் தனியாருக்குச் சொந்தமான ஆடைத் தொழிற்சாலையிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

உணவு ஒவ்வாமையால் மயக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டிருந்த நிலையில் அதை வைத்தியசாலைத் தரப்புகள் மறுத்துள்ளன என்று தெரியவருகின்றது.

இனந்தெரியாத வாயு ஒன்றைச் சுவாசித்தமையே இதற்குக் காரணம் என்று மருத்துவர்களை மேற்கோள்காட்டித் தகவல் வெளியானது.

மயக்கமுற்றவர்கள் உட்கொண்ட உணவுக்கும் மயக்கமுற்றமைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப் பணிக்கப்பட்டுள்ளது என்று தொழிற்சாலை நிர்வாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தொழிற்சாலை இயந்திரங்களும் ஆராயப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நோர்வூட் பொலிஸார், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், ஹற்றன் சிறப்பு பொலிஸ் பிரிவினர் இணைந்து மேற்கொண்டுள்ளனர். (ற)

# பால் கொள்வனவு நிறுத்தப்பட்டதால் பண்ணையாளர்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா. ஒக்.5

வவுனியாவில் பால் பண்ணையாளர்கள் நேற்று பாற்சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். கணேசபுரத்தில் உள்ள பால்சபையில் நேற்றுக் காலை 7 மணியில் இருந்து பால் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளது. பால் கொள்வனவைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

"பல ஆண்டுகளாக நாம் பால் வழங்குகின்றோம். திடீரெனப் பால் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளது. எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் எம்மிடம் இருந்து 55 ரூபாவுக்கு ஒரு லீற்றர் பாலை ஊருக்குள் வந்து கொள்வனவு செய்தனர். நாம் நேரடியாகப் பால் சபையில் கொடுத்தால் 63 ரூபாவுக்குக் கொள்வனவு செய்தனர். தற்போது திடீரெனக் கொள்வனவை நிறுத்தியுள்ளனர்." என்று பால் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி உற்பத்தியாளர்களுடனும், பால் சபை முகாமையாளருடனும் கலந்துரையாடினார். பால் கொள்வனவு நிறுத்தப்படவில்லை. வழமையான வாடிக்கையாளர்களிடம் இருந்து பால் கொள்வனவு நடைபெறுகின்றது என்று அதன்போது சுட்டிக் காட்டப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

"பாலின் தரம் குறைந்துள் ளது. எமது நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே தற்போது பால் கொள்வனவு நிறுத்தப்பட் டுள்ளது. பாலின் தரத்தை வைத்தே கொள்வனவு நடைபெறும்." என்று சம்பவ இடத்துக்கு வந்திருந்த பால் சபையின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

"வவுனியாவில் ஒரு நிறுவனமே பாலைக் கொள்வனவு செய்வதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த நிறுவனம் பால் கொள்வனவை 9 மணியிலிருந்து 8 மணியாக மாற்றித் தற்போது 7 மணியாக மாற்றியுள்ளது. அதனால் பாலை நேரத்துடன் எடுக்க வேண்டிய நிலைமை பண்ணையாளர்களுக்கு ஏற்படுகின்றது. சிலர் பாலைக் குளிரூட்டியில் சேமிப்பதால் அதன் தரம் குறைகின்றது.

வடக்கு மாகாண சபை இது விடயத்தில் கரிசனை எடுத்து வவுனியா மாவட்டத்தில் உள்ள பண்ணையாளர்களை ஊக்குவிப்பதற்கு வேறு பல் கொள்வனவு நிறுவனங்க ளையும் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்." என்று பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற)



# காட்டலோனியத் தேர்தல் சட்டத்துக்குப் புறம்பானது

*மன்னர் பிலிப் தெரிவிப்பு*



“ ஸ்பெய்னின் வருவாய் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் காட்டலோனியாவின் பங்கு அதிகம். மக்கள் தொகையும் காட்டலோனியாவில் அதிகம். இதனாலேயே அந்த மாநிலம் தனிநாடாகச் செல்ல விரும்புகிறது.

மட்ரிட், ஒக். 5
“ஸ்பெய்னில் இருந்து பிரிந்து செல்வதற்காக ஸ்பெய்னின் காட்டலோனியா மாநிலத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு சட்டத்துக்குப் புறம்பானது” என்று தெரிவித்தார் ஸ்பெய்ன் மன்னர் பிலிப்.
ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெய்ன் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக காட்டலோனியா திகழ்கிறது. ஸ்பெய்னின் வருவாய் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் காட்டலோனியாவின் பங்கு அதிகம். மக்கள் தொகையும் காட்டலோனியாவில் அதிகம். இதனாலேயே அந்த மாநிலம் தனிநாடாகச் செல்ல விரும்புகிறது. கடந்த ஐந்து வருடங்களாக இந்தத் தனிநாட்டுக் கோரிக்கை வலுத்துள்ளன. இந்தப் பின்னணியிலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
பதிவான வாக்குகளில் சுமார் 90 சதவீதமான வாக்குகள் காட்டலோனியா பிரிந்து செல்வதற்கு ஆதரவாகப் பதிவாகின. இந்த நிலையில் இந்த வாக்கெடுப்பு சட்டத்துக்குப் புறம்பானது என்று தெரிவித்துள்ளார் ஸ்பெய்ன் அரசர் பிலிப்.
“தனிநாடு கோரியவர்கள் அவர்களாகவே வாக்கெடுப்பு நடத்தியது சட்டவிதிமுறைகளுக்கு அப்பாற்பட்டது இந்த விவகாரம் மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறது” என்று பிலிப் மேலும் தெரிவித்தார். (ம)





மியன்மார் அரசின் இனச் சுத்திகரிப்பில் இருந்து தப்பித்து பங்களாதேஷை அடைந்த பின்னர் தரையில் வீழ்ந்து கிடக்கின்றனர் ரொஹிங்ய அகதிகள் இருவர். (ம)

# இயற்பியலுக்கான நோபல் விஞ்ஞானிகள் மூவருக்கு



வொஷிங்டன், ஒக். 55
அமெரிக்காவைச் சேர்ந்த ராய்னர் வெய்ஸ், கிப் தோர்ன், பேரி பேரிஷ் ஆகிய 3 விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.
சுவீடனை சேர்ந்த விஞ்ஞானி ஆல்பிரட் நோபல் நினைவாக மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த ஜெப்ரி சிஹால், மைக்கேல் ராஷ்பேஷ், மைக்கேல் டபிள்யூ யங் ஆகிய 3 பேருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு கடந்த திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அமெரிக்காவைச் சேர்ந்த ராய்னர் வெய்ஸ் (வயது85), கிப் தோர்ன் (வயது77), பேரி பேரிஷ் (வயது 88) ஆகிய 3 விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு நேற்றுமுன்தினம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஈர்ப்பு அலைகளை உறுதி செய்த தற்காக அவர்கள் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம)



# எதிர்பாரா அழிவை சந்திக்கும் ஜப்பான்

*கிம் ஜோங் உன் எச்சரிக்கை*

பியாங்யாங், ஒக். 5
வடகொரியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை அதிகரிக்குமாறு ஜப்பான், பன்னாட்டுச் சமூகத்துக்கு அறிவுறுத்திய நிலையில் “ஜப்பான் எதிர்பாரா அணுவாயுத அழிவுகளைச் சந்திக்கும்” என்று வடகொரியா எச்சரித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய ஜப்பான் தலைமை அமைச்சர் அபே, “வடகொரியா அதன் அணுவாயுதச் சோதனைகளை கைவிட உலக நாடுகள் பேச்சு நடத்துவதைவிட அதன் மீது பொருளாதாரத் தடைகளை அதிகரிக்க வேண்டும்” என்று தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் ஜப்பான் தலைமை அமைச்சர் அபேயின் உரை குறித்து வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தெரிவிக்கையில்,
“ஜப்பான் தலைமை அமைச்சர் அபே அரசியல் நோக்கங்களுக்காக பொருளாதார நெருக்கடிகளை வடகொரியா மீது பயன்படுத்துகிறார்.
கொரியத் தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்த ஜப்பான் ரொக்கட் தாக்குதல் நடத்துகிறது. இந்த நடவடிக்கையை நிறுத்திக் கொள்ளாவிட்டால் அணு ஆயுதத் தாக்குதலுக்கு உள்ளாகும்” என்று எச்சரித்துள்ளார். (ம)


# கியூபத் தூதரக 15 அதிகாரிகளை வெளியேற்றியது அமெரிக்கா

வொஷிங்டன், ஒக். 5
அமெரிக்காவில் உள்ள கியூபத் தூதரக அலுவலகங்களில் பணிபுரியும் 15 அதிகாரிகள் வெளியேற்றப்பட்டனர்.
அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையே 45 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தூதரக உறவு ஏற்பட்டது. இந்த நிலையில் கியூபாத் தலைநகர் ஹவன்னாவில் அமெரிக்க தூதரகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பலவித மர்ம நோய்களால் அவதிப்பட்டனர். இது கியூபாவின் சதிச் செயல் என அமெரிக்கா குற்றம் சாட்டியது. இதைத் தொடர்ந்து கியூபாவில் இருந்த அமெரிக்க தூதர்கள் மற்றும் ஊழியர்கள் அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டனர். இந்த நிலையில் அமெரிக்காவில் உள்ள கியூபத் தூதரக அலுவலகங்களில் பணிபுரியும் 15 அதிகாரிகளை வெளியேற்றியும் நடவடிக்கை எடுத்துள்ளது அமெரிக்கா. (ம)



# 34 துப்பாக்கிகளைக் குவித்து வைத்திருந்த லொஸ் வெகாஸ் தாக்குதல்தாரி ஸ்ரீபன்

வொஷிங்டன், ஒக். 5
லொஸ் வெகாஸ் நகரில் துப்பாக்கிச் சூடு நடத்தி 59 பேரின் உயிரைக் காவு வாங்கிய தாக்குதல்தாரி ஸ்ரீபன் 34 துப்பாக்கிகளைச் சொந்தமாக வைத்திருந்துள்ளார்.
லொஸ் வெகாஸ் நகரில் உள்ள பிரபல கேளிக்கை விடுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இசை நிகழ்ச்சிக்காக சுமார் 20 ஆயிரம் பேர் திரண்டிருந்த போது, மர்ம நபரொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 59 பேர் உயிரிழந்தனர். 515 பேர் காயமடைந்தனர். தாக்குதல்தாரி தன்னையும் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.
பின்னர் இது தொடர்பில் விசாரணை நடத்திய அமெரிக்கப் புலனாய்வுத்துறை, “தாக்குதல் தாரியின்பெயர்ஸ்ரீபன். இவருக்கு வயது 64. தாக்குதலின் பின்னணியில் ஸ்ரீபனுக்கும் ஆயுதக் குழுக்களும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. குறித்த விடுதியின் 32ஆவது மாடியில் இருந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பத்து இயந்திரத் துப்பாக்கிகளின் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது' ஆகிய தகவல்களை வெளியிட்டது.



தற்போதும் மேலும் சில தகவல்கள் வெடியிடப்பட்டுள்ளன. இதன்படி“ஸ்ரீபன் தனக்குச் சொந்தமாக மொத்தம் 34 துப்பாக்கிகளை வைத்திருந்துள்ளார்.
16 துப்பாக்கிகளை தான் தங்கியிருந்த விடுதியிலும், 18 துப்பாக்கிகளை தனது வீட்டிலும் அவர் வைத்திருந்துள்ளார்.
அனைத்தும் தானியங்கித் துப்பாக்கிகள். சூதாட்டப் பழக்கம் ஸ்ரீபனுக்கு மிகையாகவே இருந்துள்ளது. அவர் மிகப் பெரும் பணக்காரர்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

PFIRC

# பிரசாந்த்

குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

THE TIMES OF INDIA
SURVEY OF FERTILITY CLINICS
NO.1 FERTILITY CENTRE IN CHENNAI
NO.6 @ NATIONAL LEVEL IN INDIA

## யாழ்ப்பாணத்தில்

செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சையில் உலகப் புகழ் பெற்ற சென்னை பிரசாந்த் மருத்துவமனையின் பிரதிநிதிகள்..

எதிர்வரும் **அக்டோபர் மாதம் 7ஆம், 8ஆம்** திகதிகளில் நேரில் சந்திக்க வாய்ப்பு!

**வழி நடத்துகிறோம் நாங்க.. சந்திக்கலாம் வாங்க...!**

- டொக்டர் கீதா ஹரிப்ரியாவை இலங்கையில் நடந்த இலவச மெடிக்கல் கேம்ப்பில் ஏற்கனவே சந்தித்து ஆலோசனை பெற்றவர்கள்
- டொக்டர் கீதா ஹரிப்ரியா அவர்களை தமிழகத்தில் சந்திக்க விரும்புபவர்கள்
- பிரசாந்த் மருத்துவமனையில் சிகிச்சை பெறத் திட்டமிட்டிருப்பவர்கள்
- விரைவில் சென்னை செல்ல வேண்டிய விபரங்களை அறிய விரும்புபவர்கள்
- விமானப் பயணத்துக்கான ஆவணங்களைத் தயார் செய்து கொள்ள விரும்புபவர்கள்

நேரில் வந்து சந்தித்துப் பேச அரியதோர் வாய்ப்பு!

உடனடியாகத் தொடர்பு கொண்டு உங்களது நேரத்தைப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

**அழையுங்கள்: 075 40000 12**

- ★ சென்னைக்கு விமான பயணச் சீட்டு இலவசம்!
- ★ முதற்கட்ட சிகிச்சைக்கான 5 நாட்கள் தங்குமிடம்!
- ★ விமான நிலையம் ⇄ மருத்துவமனை போக்குவரத்து இலவசம்!

தாய்மைக்கு தயாராகுங்கள்!

தாய்மைக்கான தடைகளை தகர்த்தெறியும் அதிநவீன சிகிச்சைகள்!

- ★ ஆண்களிடம் குறை இருந்தால் என்ன? பெண்களிடம் குறை இருந்தால் என்ன? தீர்வு நம் கையில் இருக்கையிலே..!
- ★ தம்பதிகளின் தவிப்பு நீங்கி, மடியில் குழந்தை தவழட்டும்
- ★ தாய்மையின் மகத்துவத்தைப் பெற்று மகிழுங்கள்!



Dr. கீதா ஹரிப்ரியா
MD, DGO, FRCOG (London)



No. 77, HARRINGTON ROAD, CHETPET, CHENNAI-31, TAMIL NADU, INDIA.
pfrcivf.com haripriyageetha@gmail.com
0091-98410-30388 | 0091-44-422-77777



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க

# 06.10.2017 முதல் சாவகச்சேரியில்

# ES Printers

**06 - 10 வரை விசேட விலைக்கழிவு**

**2018ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள்**
அனைத்து அளவுகளிலும், அனைத்து நிறுவனங்களுக்கும்.



தின நாள்காட்டி (கலண்டர்)
'டெஸ்க் கலண்டர்'
'வோல் கலண்டர்'
'நம்பர் சீற் கலண்டர்'
பஞ்சாங்கக் 'கலண்டர்'
'போட்டோக் கலண்டர்'

மக் பிரிண்ட் ( MUG ) 350/=



அன்புக்குரியவர்களின் அன்பளிப்பாக விரும்பிய படம், வாழ்த்து பொறித்த 'மக்' வழங்கி வாழ்த்துங்கள், குறைந்த விலையில் குறுகிய காலத்தில் நேர்த்தியாக செய்து தரப்படும்.

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்

நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 492 7432 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மேலும் வெளிப்படையாக சம்பந்தர் பேசலாம்

இலங்கையின் நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு 70 ஆண்டுகள் கடந்துவிட்டன. அது தொடர்பான சிறப்பு அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாட்டின் முக்கிய தலைவர்கள் அனைவரும் அதில் உரையாற்றினர். அவர்களின் உரைகள் எல்லாவற்றிலும் அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு ஆகிய விடயங்கள் இடம்பெற்றிருந்தன. நாட்டின் நிரந்தர அமைதிக்கும் பொருளாதார நிலைத்தன்மை மற்றும் அபிவிருத்திக்கும் அரசியல் தீர்வு எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதைத் தலைவர்களின் உரைகள் உணர்த்தின.

அரசியல் தீர்வின் முக்கியத்துவத்தையும் அதற்கான முதற்படியாக அவர்கள் கருதும் புதிய அரசமைப்புக்கான முக்கியத்துவத்தையும் தலைவர்களின் உரைகள் உணர்த்தினாலும், புதிய அரசமைப்பையும் தீர்வையும் விரைவுபடுத்துவதற்குப் பதில் தாமதப்படுத்துவதிலேயே அவர்கள் ஏன் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பது புரியவில்லை. அவர்களின் உரைகளில் அவர்கள் சொன்னவற்றை அவர்கள் உளப்பூர்வமாக நம்புபவர்களாக இருந்தால், தீர்வை அடைவதும் அதனை விரைவுபடுத்துவதும் கடினமான காரியமல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அதனை அழகாகத் தனது உரையில் இடித்துரைத்தார். "போலியான நாட்டுப்பற்றின் அடிப்படையில் மோசமான நிலைமைகள் மேலும் தொடர எவராவது முயற்சிப்பார்களாயின் அது பெரும் சோகமாகவே முடியும்" என்று அவர் எச்சரித்தார்.

அவர் தனது உரையில் "எவராவது" என்று விளித்தாலும் அது அனைத்துத் தலைவர்களுக்குமே பொருத்தமானது. ஏனெனில், சம்பந்தரின் உரையில் குறிப்பிடப்படும் மோசமான நிலைமை தொடர்வதற்குச் சிங்களத் தலைவர்கள் எல்லோருமே காரணகர்த்தாக்கள். ஒருசிலர் மீது மட்டுமே குற்றத்தைச் சுமத்த முடியாது.

குறிப்பாக முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச மீது பழியைச் சுமத்திவிட்டு ஏனையவர்கள் தப்பிக்கொள்ள முடியாது. அது வெறும் சாட்டு மட்டுமே. மற்றைய தலைவர்கள் அனைவரும் இதயசுத்தியுடன் ஒன்றுபட்டு நிற்பார்களாயின் மகிந்த, அவர்களுக்கு முன்னாள் ஒரு தூசுக்குச் சமானம். எனவே தலைவர்கள் எல்லோருமே இன்றைய நிலை தொடர்வதற்குப் பொறுப் பானவர்கள்.

ஆக, சம்பந்தர் கூறியது போன்றே போலித் தேசியம் பேசுவதன் மூலம் நாட்டைச் சோகத்தை நோக்கித் தள்ளிச் செல்வதில் சிங்களத் தலைவர்கள் அனைவருக்குமே பங்கு உண்டு. தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுகிறோம், பிளவுபடாத, பிளவுபடுத்த முடியாத நாட்டுக்குள் ஐக்கியமாக வாழ இணங்குகின்றோம் என்று தமிழர்கள் பகிரங்கமாக அறிவித்து அதனைத் தேர்தல் வாக்களிப்பின் மூலம் உறுதிப்படுத்திய பின்னரும், ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு முன்னுரிமை என்று போலித் தேசியம் பேசியபடி அரசியல் தீர்வைத் தாமதப்படுத்தி வருகிறார்கள் இந்தத் தலைவர்கள். இதைத்தான் சம்பந்தர் தனது உரையில் குறிப்பிட்டுக் காட்டினார்.

இலங்கையின் அரசமைப்புகள் பன்முகத் தன்மையை ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளிக்கத் தவறியிருக்கின்றன என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பெரும்பான்மை வாதத்தை உறுதிப்படுத்துவனவாகவே அவை இருந்தன என்றும் சாடினார். ஆயுதப் போராட்டத்துக்குக் காரணமான விடயங்கள் இன்னமும் நீடிக்கின்றன என்பதையும் அவர் தெளிவாகக் குறிப்பிட் டார். இவற்றின் அடிப்படையிலேயே, போலி நாட்டுப்பற்றின் அடிப்படையில் இந்த நிலைமைகளைத் தொடரவிடுவது பெரும் சோகத்தைக் கொண்டு வரும் என்று எச்சரித்தார். அவர் பொதுப்படையாகவே இந்தக் கருத்துக்களைத் தனது உரையில் தெரிவித்திருந்தார். "தொப்பி அளவானவர்கள் போட்டுக்கொள்ளலாம்" என்ற பாணியிலான உரை அது. ஆனால், இன்றைய தீர்க்கமான அரசியல் சூழலில் சம்பந்தர் இன்னும் காத்திரமாக நேரடியாகவே சிங்களத் தலைவர்களை நோக்கி விரல் சுட்டிப் பேசலாம். அதற்கான தேவையும், வயதும், பழுத்த அனுபவமும் அவரிடம் உண்டு.

**சிங்களத் தலைவர்களை நேரடியாகத் தோலுரிப்பதன் மூலம் அவர்களை உண்மையான நாட்டுப்பற்றை நோக்கி உந்தித்தள்ள அவர் முயற்சிப்பது இன்று அவசரமும் அவசியமுமாகும்.**



**இந்தியாவில் 1962 ஆம் ஆண்டுமுதல், இந்தியாவின் முன்னாள் அரச தலைவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணனது பிறந்த தினமான ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதியன்று உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இலங்கையில் ஆசிரியர் தினம் வருடாவருடம் ஒக்ரோபர் 6 திகதியன்றே கொண்டாடப்பட்டுவருகின்றது. உலகின் பல நாடுகள் இந்த விதம் வெவ்வேறு திகதிகளில் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவது குறித்து அடிப்படையான காரணமெதுவும் தெரிவிக்கப்படவில்லை.**



# வாழ்க்கையின் அத்திபாரம் கல்வி என்பதால் ஆசிரியத்துவம் போற்றுதலுக்கு உரியதொன்று

மு.ஈழத்தமிழ்மணி

மனிதர்களை சிறந்த மனிதர்களாக உருவாக்குவது ஆசிரியர்களது பணியாகும். அறிவைஆள்பவர்கள் தான் ஆசிரியர்கள். ஆசிரியம் என்பது வல்லமையுள்ள பொருள் நிறைந்த சொல்லாகும். ஆசிரியத் தொழில் என்பதும் பெரும் சவால்கள் நிறைந்த தொழிலாகவும் உருவாகிவிட்டது. இன்று உலகஅளவில்வளம்மிக்க எதிர்காலத்தை நிலையானதான வகையில் வைத்திருக்கும்விதத்தில்எதிர்காலத்தலைவர்களாகவும் சிறந்த நற்பிரஜைகளாகவும் உருவாக்க பாடசாலைகளில் கற்றலில் ஈடுபடுகின்ற மாணவச் சமூகத்தைச் சீராக்குகின்றவர்கள் ஆசிரியப்பெருந்தகைகளே.

**யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டது ஆசிரியர் தினம்**

பன்னாட்டு ரீதியில் ஆண்டுதோறும் ஒக்ரோபர்மாதம் 5ஆம் திகதி பன்னாட்டு ஆசிரியர் நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றது. யுனெஸ்கோ 1994 ஆம் ஆண்டில் இந்த நாளை பன்னாட்டு ஆசிரியர் தினமாக அறிவித்திருந்தது. ஆசிரியர்களுக்கு ஆதரவு திரட்டத் தயார்ப்படுத்தலும், எதிர்காலச் சந்ததியினரின் தேவையறிந்து தொடர்ந்தும் ஆசிரியர்கள் பணியாற்றத்தக்கவாறு ஒன்றிணைத்தலுக்கான நாளே உலக ஆசிரியர் தினமாகும்.

சமூகத்தில் மதிப்புமிக்க பணிகளாகவிளங்கும்பணிகளிலெல்லாம் போற்றுதற்குரிய பணியாகஎன்றென்றும்இருப்பதும் ஆசிரியப் பணியேயாகும். மாணவர்களது பாதுகாவலராக, வழிகாட்டியாக, அன்னையாக, நல்லதொரு நண்பராக, முகாமையாளராக, ஆலோசகராக, போதனாசிரியராக தமது பங்களிப்பை அந்தந்த இடங்களிலிருந்துசந்தர்ப்பசூழ்நிலைக்கேற்றவாறுஏற்றுச்செயற்படுத்துகின்ற நிலைக்குள்ளாகின்ற ஆசிரியர்கள், சமூகத்தில் பொறுப்புள்ள மனிதர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

எப்போதுமே ஆசிரியர்கள், திறந்தமனதுடையவர்களாக இருப்பது அவசியமாகும். அப்போதுதான் தம்மிடம் கல்வி கற்கின்ற மாணவர்களினது மனப்பாங்குகளை வளர்த்தெடுக்க அவர்களால் இயலக்கூடியதாகவிருக்கும். ஆசிரியர்களது ஒழுக்கவியல் கலாசாரம் சார் அறிவானது, நாட்டுக்குப் பொருத்தமான பிரரஜைகளை உருவாக்கஉதவும். மாணவச் செல்வங்களின் மீது பற்றும் பாசமும்கனிவும்வைத்து அர்ப்பணிப்புடன் சேவை யாற்றுகின்றபோது அதனால்கிடைக்கின்ற மகிழ்ச்சியும் மனநிறைவும் இரட்டிப்பாகின்றது. ஆசிரியத்துக்கான மதிப்பும் உயர்ந்து செல்கின்றது.

முதலாம் ஆண்டிலிருந்து க.பொ.த. உயர்தரம் வரையிலானஅதிதிறமைச்சித்திகளைப் பெறுகின்றவரை, அந்தமாணவர்களுக்கான கல்வியைக் கற்பித்தலில் ஆசிரியர்களின் பங்கும் பொறுப்பும் சாதாரணமானதாக இருக்க முடியாது. மருத்துவராக, பொறியியலாளராக, கணக்காய்வாளராக, சட்ட அறிஞராக எந்தத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் கல்வி அறிவில் சிறந்தவர்களாகவே இருப்பர். ஆசிரியன் இல்லாமல் அறிவியலோ, விஞ்ஞானமோ, கண்டுபிடிப்புகளோ, தொழில்நுட்ப யுகமோ உருவாகவில்லை. பாடசாலைகளில் கல்வி கற்பித்தலுக்கான முகாமையாளர்கள் அதிபரும் ஆசிரியர்களுமேயாவர்.

பல்கலைக்கழக உயர்கல்வி முறையில் விரிவுரையாளர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், துணைவேந்தர், வேந்தர் என்றும், கல்வியில் உயர் முகாமையாளர்களும், கண்டுபிடிப்பாளர்களும், விஞ்ஞானிகள் தொழில்நுட்ப வல்லுநர்கள் என்று கூறப்படுகின்றவர்கள் யாவரும், கல்வி கேள்விகளில் வல்லவர்களாகவே இருப்பார்கள்.

**மாணவர்களைக் கல்வி கேள்விகளில் வல்லவர்களாக ஆக்கும் ஆசிரியத்துவம்**

ஒரு மாணவனைக் கல்வி கேள்விகளில் வல்லவனாக உயர்த்துவது ஆசிரியரின் கடமையாகவும், பொறுப்பாகவுமுள்ளது. இப்படிப்பட்ட ஆசிரியர்கள் முன்னைய காலகட்டத்தில் தமக்குரிய கற்பித்தல் கடமைகளை எதிர்காலச் சந்ததியினரின்நன்மைகருதி அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வந்துள்ளனர்.

**ஆனால்இன்றைய காலத்தில் மாணவர்கள்ஆசிரியர்களை அவமதித்தல், ஆசிரியர்**

களைக் கேலி செய்தல், பாடங்களை ஆசிரியர்கள் நடத்திக் கொண்டிருக்கும்போதுஇடையில்வகுப்பைவிட்டு வெளியேறிச்செல்லல்போன்றதகாத விதங்களில் நடந்து கொள்ளும் மாணவர்களைசீராக்கும்பணியையும்பொறுப்பையும்ஆசிரியர்கள்ஒருசேர மேற்கொள்ள வேண்டி நேர்கிறது.

ஆசிரியர்களோ, விரிவுரையாளர்களோ,பண்டிதர்களோஇன்றுமாணவர்களால் மதிக்கப்படுகின்ற நிலை குறைவடைந்து வருகின்றது. கல்வி கற்றலில் மாணவர்களைப் பொறுத்தவரை பாடசாலை ஒரு புனிதமான இடமாகும். கல்விக்கூடம் என்பது வெறும் பொழுது போக்குக்காகவோ அரட்டை அடிக்கவோ சென்று வரும் இடமல்ல. சரஸ்வதித் தெய்வம் குடியிருக்கின்ற இடமாகும் அது.

ஒரு பிரிவுமாணவர்களினால் ஆசிரியர்கள் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதுண்டு. இதனாலேதான், ஆசிரியர்கள்பலவிதமானசூழ்நிலைக்குள்ளாகி சவால்களை எதிர்கொள்கின்றனர்.

சிறந்த மனிதர்களுக்கு அமைய வேண்டிய அன்பு, கனிவு, பாசம், போன்றபண்புகளைப்பார்த்துஅவற்றைக் கடைக்கொள்ளல் என்ற உணர்வை மாணவர்கள் மத்தியில் உருவாக்கும்பொருட்டு,தம்மையும் மாணவர்களாக உருமாற்றிக்கொள்ளக்கூடியவர்கள் தான் ஆசிரியர்கள். அதனால் தான், ஒரு ஆசிரியர் மாணவர்களுக்குக் கல்வியைப் புகட்டும்போது பாசமிக்கதோர் நண்பனாக மாறி பாடங்களைக் கற்பிக்கின்றார்.

சிறந்த இலட்சியத்தை அடைய வேண்டிகுறிக்கோள்களுடன் ஆரம்பித்ததிலிருந்தே மாணவர்கள் கற்கவும், கற்றதை மனதில் பதியவைக்கவும், மனதில் பதியவைப்பதற்குரிய முயற்சிகளை, தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அந்த மாணவச் செல்வங்களின் உள்ளங்களைப் பண்படுத்தும் பெரியதொரு பொறுப்பில் ஒவ்வொரு ஆசிரியரும் கடமை நேரத்திலும்சரி, அதற்குஅப்பாற்பட்ட நிலையிலும்சரி முழுமூச்சாக ஈடுபடுகின்றஅந்தமகிழ்ச்சிகரமான நாளிகைகள்தான்ஆசிரியருக்குக்கிடைக்கின்றமிகப்பெரிய மகிழ்ச்சியாகும்.

**அறியாமை இருள் அகற்றும் ஞானவிளக்குகள் ஆசிரியர்கள்**

ஞானவிளக்குகள் என விழிக்கப்பட்டு மாதா, பிதா, குரு,தெய்வம்என்றவரிசையில் தெய்வத்துக்கும் முதற்படியாகக் கருதப்படுகின்ற ஆசிரியர்கள், மதிக்கப்படவேண்டியவர்கள். போற்றப்படும் ஆசிரியத்துவம் என்பது மிகவும் புனிதமானது. "ஆசு (மாசு) நீக்கி, அறியாமை இருள் அகற்றி, அறிவென்னும் ஒளிபரப்பும் ஞானவிளக்குகளே ஆசிரியர்கள்" என சுவாமி விவேகானந்தர் ஆழமாக, அழகாகக் கூறியுள்ளார்.

வாழ்க்கையில் எந்தச் சூழலிலும் தன்னம்பிக்கையுடன்போராடிவெற்றி பெறவேண்டும்என்கிறபுரிதலையும், மனத்தைரியத்தையும் மாணவர்களிடம் ஏற்படுத்தக்கூடிய அளவுக்குப் பொதுவாக ஆசிரியரின் கற்பித்தல் முறை இருக்கும்படி அவர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இன்றையகற்றல், கற்பித்தல்செயன்முறையில் வினைத்திறன் என்பது முக்கியமானதொன்றாகும். எதிர்பார்க்கப்படும்இலக்குஎந்தஅளவுக்கு எட்டப்படுகின்றது என்பதை விளக்குவதாக வினைத்திறன் அமைந்து காணப்படுகின்றது. இலக்கு எட்டப்படுவது தொடர்பில் ஆசிரியரது வகிபாகம் மிக முக்கியமானதாகும்.

ஆசிரியர் ஒருவர், தான் தனது துறை சார்ந்த பாடப்பரப்பில் போதியளவு புலமை, திறமை கொண்டிருந்தால் மட்டுமே, கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை வினைத்திறனுடையதாக மேற்கொள்ள இயலும். பாடப்புலமை சார் திறனுடன் ஒரு பிள்ளைக்கு அறிதல் என்பது இன்றியமையாதது. மாணவரை அறிந்து அவர்களது மனப்பாங்கில் கற்றலில் நாட்டமும் ஆர்வமும் ஏற்பட வைப்பதன் மூலம் ஓர் ஆசிரியர் தமது பணியில் வெற்றி பெற்றவராகிறார்.

ஓர் ஆசிரியரானவர், தன்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற மாணவனை நல் மாணாக்கனாகஉருவாக்குவதோடு, நல்லமனிதனாகவும்ஆக்கமுயல்வதோடுபொறுப்பைக்கையில்எடுத்துச் செயற்படத்தக்க சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடனும் தமது கற்பித்தல் தொழிலை மேற்கொள்கின்றார்.

ஆரம்ப காலத்துத் திண்ணைப் பள்ளிக்கற்பித்தல்முறைமை,இன்றைய நவீனதொழில்நுட்பஉபகரணங்களுடன் கற்பிக்கின்ற முறைமையாக மாறியிருந்தாலும், ஆசிரியர்களது பணியின்றி எவ்விதமான கற்றல் செயல்பாட்டையும்ஒருமாணவனாக மட்டுமே இருந்து கற்றுக் கொள்ள முடியாது. எந்தவொரு மாணவனும் சிறந்தமுறையில்கற்றுத்தேறவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான், ஆசிரியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

**எங்கும் எப்போதும் மதிக்கப்பட வேண்டியவர்கள் ஆசிரியர்கள்**

மனித வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத, மனித சமூகத்தின் முதுகெலும்பாகவிளங்குகின்றஆசிரியர்களைக் கௌரவப்படுத்தும்நோக்கில்ஒக்ரோபர் 5ஆம்திகதி உலகஆசிரியர்தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கல்விக்காகத்தன்னைஅர்ப்பணித்து வருகின்ற ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்டி வாழ்த்தி பரிசில்கள், விருதுகள் வழங்குகின்ற நிகழ்வுகள் மூலம் நாட்டில் சிறப்பான கௌரவத்தை அரசு, ஆசிரியர்களுக்கு வழங்கிவருகின்றது. ஆசிரியர்களுக்கான உயர்விருதான 'குருபிரதீபா' விருது அரசால் வழங்கிக் கௌரவப் படுத்தப்படுகின்றனர்.

ஓர்ஆசானின்வழிகாட்டலிலேதான், ஒரு மாணவன் சரியான வழிமுறைகளைக் கற்றுக் கொள்ளமுடியும். அந்த வகையில் முதன்மைப் பணியானது ஆசிரியப் பணியேயாகும். தமக்காகத் தம்மை அர்ப்பணித்த ஆசிரியர்களுக்கான ஒரு மரியாதை நாளாகவும் இந்த நாளை ஒதுக்கி வைத்து, ஆசிரியர்கள், ஆசிரியர் சங்கங்கள், மாணவர்கள், அபிவிருத்திச் சங்கங்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள்எனப்பல்வேறுதரப்பினராலும் சகல ஆசிரியர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்படுவதோடுமட்டுமன்றி வாழ்த்தப்படலும்வேண்டும். அவர்களின் அர்ப்பணிப்பான பணிகளைச்சமூகம்மதித்திடல்வேண்டும்.

மாணவர்களும் இன்றைய நாளில் ஆசிரியர்கள் சமூகத்தை உயர்வாக மதிக்கின்ற பணியை மேற்கொள்ளல் அவசியமாகும்.

வாழ்க்கையில் எந்தச் சூழலிலும் தன்னம்பிக்கையுடன் போராடி வெற்றி பெற வேண்டும் என்கிற புரிதலையும் மனத் தைரியத்தையும் மாணவர்களிடம் ஏற்படுத்தக்கூடிய அளவுக்குப் பொதுவாக ஆசிரியரின் கற்பித்தல் முறை இருக்கும்படி அவர்களுக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.





## ஆசிரியருக்கான கடிதம்

### ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

ஊடகங்கள் பக்கச் சார்பின்றிச் செய்திகளை வெளியிடும்போதுதான், மக்கள் உண்மையான தகவல்களை சந்தேகம் எதுவுமின்றி பூரணமாக அறிந்து கொள்ள முடியும். ஆனால் இன்று நாட்டில் அந்த நிலை காணப்படவில்லை. இதனால் மக்கள் எது உண்மை, எது பொய் என்பதை அறியாமல் குழம்பிய நிலையில் காணப்படுகின்றனர்.

ஊடகங்கள் செய்திகளை வெளியிடும் போது அவற்றின் உண்மைத் தன்மையைப் பலதடவைகள் உறுதி செய்து கொள்ள வேண்டும். சில செய்தியாளர்கள் எழுந்தமானத்தில் தருகின்ற செய்திகளை அப்படியே வெளியிடுவதால், எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவதுண்டு. ஆகவே செய்திகளை வெளியிடுவதற்கு முன்பாக அவற்றின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்படல் வேண்டும்.

இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் இனவாத அடிப்படையில் செயற்படும் சில ஊடகங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. சிறிய சம்பவங்கள் கூடப் பெரிதுபடுத்திச் சித்தரிக்கப்படுவதால் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றன.

கல்கிசையில் உள்ள வீடொன்றில் மியன்மாரிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தங்கியிருந்த ரொஹிங்ய முஸ்லிம் அகதிகள், பௌத்த பிக்குகள் உட்படச் சிலரால் அச்சுறுத்தப்பட்டு அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டமை நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்திவிட்டது. ஆனால் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் வேறு விடயமொன்று இருந்ததாகத் தற்போது தெரிய வந்துள்ளது. ஆனால் இது தொடர்பாக அநேக ஊடகங்களில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது ஊடக தர்மத்தைச் சிதைக்குமொரு செயலாகும்.


இதைப் போன்றுதான் இறுதிப் போரின் போது தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள் தொடர்பாகத் தென்பகுதியில் இருந்து வெளிவருகின்ற ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கவில்லை. இதற்கு மாறாகப் படையினரின் போர் வெற்றியை மிகைப்படுத்தி வெளியிடுவதிலேயே அந்த ஊடகங்கள் அதிக அக்கறை காண்பித்தன.

மேற்குலக நாடுகளைப் பொறுத்த வரையில் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது தமது பதவிகளை இழந்த அரசியல்வாதி கள் குறித்த வரலாறுகளும் உள்ளன.

ஊடகங்கள் நேர்மையுடன் செய்ற்பட்டால், இந்த உலகில் எவ்வளவோ மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

மா.தருமதுரை
கட்டுவன்

# பவளவிழா நாயகரான சுந்தரம் டிவகலாலா அவர்களை வாழ்த்துகின்றோம்



பிறந்த திகதி : 05.10.1942
ஆரம்பக் கல்வி : வல்வெட்டித்துறை இந்துத் தமிழ்கலவன் பாடசாலை,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
இடைநிலைக் கல்வி – யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
உயர்கல்வி -B.A (Hon) in Economics. பேராதனை பல்கலைக்கழகம் 1963 - 1967
இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் சித்தி (CAS) 1971
காணி அபிவிருத்தி அலுவலர் - காணி அபிவிருத்தித் திணைக்களம்
1970 – ஒகஸ்ற் 1971 – திருகோணமலை
ஒகஸ்ற் 1971 - ஏப்ரல் 1972 – அனுராதபுரம்
மே 1972 - மே 1973 – பொலன்நறுவை
திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்
ஜூன் 1973 - செப்ரெம்பர் 1977 பொலன்நறுவை
ஒக்ரோபர் 1977 - மார்ச் 1979 திருகோணமலை
திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்
எப்ரல் 1979 - மார்ச் 1983 மன்னார்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
ஏப்ரல் 1983 - மார்ச் 1989 முல்லைத்தீவு
ஏப்ரல் 1989 - ஜனவரி 1995 யாழ்ப்பாணம்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
பெப்ரவரி 1995 - மார்ச் 1996
செயலாளர் - வடக்கு கிழக்கு மாகாணம், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
ஏப்ரல் 1996 - ஏப்ரல் 2000
பணிப்பாளர் விளையாட்டுத் திணைக்களம்
பெப்ரவரி1995 - ஏப்ரல் 2000
ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுழைப்பகம் (GTZ)
ஆலோசகர் ஒக்ரோபர் 2000 - ஜனவரி 2001 - திருகோணமலை
செயற்றிட்டப் பணிப்பாளர் - பெப்ரவரி 2001 – செப்ரெம்பர் 2005 வவுனியா
செயற்றிட்டப் பணிப்பாளர் - ஜனவரி 2002 – ஜனவரி 2003 - கிளிநொச்சி
தொழில்நுட்ப ஆலோசகர் BESU - நவம்பர் 2005 – மார்ச் 2008 - வவுனியா
சிரேஷ்ட ஆலோசகர் GTZ ESC - நவம்பர் 2009 – மார்ச் 2011

கல்விப் பயணங்கள் - இந்தியா , சிங்கப்பூர், தென்கொரியா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி, ஜேர்மனி, தாய்லாந்து
ஆறுதல் நிறைவேற்றுப் பணிப்பாளர் 2006 - இன்று வரை



## கல்விசார் பெருந்தகையீர்!

திரு.சுந்தரம் டிவகலாலா அவர்கள் இன்று 75 ஆவது அகவை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மனிதனாகப் பிறந்து மனிதப் பண்புகளுடன் வாழுகின்ற வாழ்க்கை முறையினைக் கொண்டவர் டிவகலாலா.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியுடைய புகழுக்கு வாழ்வாகக் கொண்டவர். பல அரச பணிகளிலும் பொதுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி காலத்திற்கு ஏற்றவகையில் சமுதாயப் பணிகளைச் சரிவர நெறிப்படுத்தி தானும் செய்து, மற்றவர்களையும் செயற்பட வைத்து எல்லோருக்கும் முன்னுதாரணமாக வாழந்துகொணடு இருப்பவர். இவருடைய பணிகளால் பல பேருடைய வாழ்க்கை நெறிப்படுத்தப்பட்டுள்ளது. இன்று "ஆறுதல்" எனும் நிறுவனத்தை ஆரம்பித்து அதனூடாக வாழ்ந்து வருகின்ற இளையவர்களை நெறிப்படுத்தி வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. திரு.சுந்தரம் டிவகலாலா பல ஆண்டுகள் வாழ்ந்து நற்பணியாற்ற இறையருளை வேண்டுகின்றோம்.

**இரண்டாவது குருமஹா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

திருவாளர் சுந்தரம் டிவகலாலா அவர்களின் பவள விழா சிறப்புற வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திரு.சுந்தரம் டிவகலாலா அவர்கள் வடமராட்சியின் வல்வெட்டிக் கிராமத்தில் பிறந்து அங்கு ஆரம்பக் கல்வியினையும், யாழ் இந்துக் கல்லூரியில் உயர் கல்வியையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். 1970 இல் இலங்கை நிர்வாக சேவையில் தெரிவாகி 30 வருடங்களாக சிறந்த அரச சேவையாளராக விளங்கியவர். தற்பொழுது "ஆறுதல்" நிறுவனத்தை ஆரம்பித்து அதனூடாக அரிய சேவையாற்றி வருபவர். பாடசாலைக் காலத்திலும், சிறந்த மாணவத் தலைவனாக விளங்கியதுடன், பேராதனையிலும் புகழ் பூத்த பேராசிரியர்களின் அன்புக்குரியவராகவும் திகழ்ந்த பெருமைக்குரியவராக அறியப்படுகின்றனர்.

இவர் பல மாவட்டங்களில் பல்வேறு அமைச்சின் பணிப்பாளர், செயலாளர் ஆகிய பதவிகளில் மக்களுக்கான சேவைகளை மகத்தாக விளங்கியவர். இவரது பணி சிறக்கவும், பவளவிழாகாணும் இவ்வேளை அவரை வாழ்த்தி இங்கு வெளியீடு செய்யப்படும் " வடலிகள் வானுயரும்" நூல் சிறப்புற அமையவும் பிராத்தித்து இவ் அரிய முயற்சியினை நெறிப்படுத்திய பவளவிழா சபையினரையும் பாராட்டி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ். மாவட்டம்.**



## I honour you

I am so honoured to be invited to contribute to your birthday volume. Please accept my message; Mr. Divakalala, or shall I rather say 'Our Mr. Divakalala', our even better 'Our Diva'. To even try to describe what you have meant to us, what you mean to us, what you have accomplished with us together or better what we have accomplished because of you is a very big challenge indeed. You are one of these few and unique human beings, who combine leadership, power and charisma with a sense of deep and loving compassion. In my personal work life, I have never met a man like you. Daring, strong, ambitious, yet full of love for the suffering of people, of course mostly for the poor and suffering children. Their struggle was and is your struggle and I know you do not like it (for the humble soul you are), but I would put you in line with the Nelson Mandelas and Mahatma Gandhis of our world. Without you we, could not have accomplished what we have at the time. And I honour you and deeply thank you for that.

You are a beautiful soul and I wish for your peace and happiness and joy and freedom now and always!

Happy and joyous birthday to you — we are there in spirit to celebrate!

Dr. Elisabeth, Kaiser-Schauer, Vivo International, Mental Health & Human Rights.



## எங்கள் வழிகாட்டி

இன்று அகவை எழுபத்தைந்தை நிறைவுடன் கொண்டாடும் ஓர் நல்லாயன். நல்ல உடல் ஆரோக்கியத்துடன் எமக்கு தலைமுறை தாண்டிய வழிகாட்டியாய் வாழ இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன். இத்தருணத்தில் எமது நிறுவனத்தின் தலைவர் என்ற ரீதியில் இளையவர்களாகிய நமக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து எம்மைக் கவர்ந்த விடயங்களையும் குறிப்பிடுதல் சாலச்சிறந்ததாகும்.

முன்மாதிரியாளர்களின் தேவை அளப்பரியதாக இருக்கும் இக் காலப்பகுதியில் இளையவர்களை வரவேற்று அவர்களுடைய கருத்துக்களும் அரங்கேற ஆவன செய்யக்கூடிய ஒரு வழிகாட்டியாகவும் இருப்பதோடல்லாமல் ஓய்விலும் எமது பிரதேசத்தில் கல்வி வளர்ச்சிக்காகவும் பின்தங்கிய மக்களின் நல் வாழ்க்கையையும் அதற்கான உரிமைகளையும் வலியுறுத்து கின்ற ஒரு தீர்க்க சிந்தனையாளராகவும் அவர் காணப்பட்டார். இத் தகைய சிறந்ததொரு வழிகாட்டி தீர்க்க நலத்துடன் எமக்கும் எம் சமூகத்திற்கும் அத்திபாரமாய் அமையக் காலம் வழிசெய்யட்டும்.

**ஷாருக்கா செல்வராஜா**
**திட்ட உத்தியோகத்தர்**
**-ஆறுதல்**



## ஆசிச் செய்தி

திரு.சுந்தரம் டிவகலாலா அவர்களுக்கு 75 ஆவது வயது பூரத்தியாகி விட்டது என்று அறிந்தேன். இவர் யாழப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்பதற்கு வந்தார். அப்பொழுது தொடக்கம் இவரை நன்கு அறிந்திருந்தேன். பல்கலைக்கழகப் படிப்பு முடிந்த பின்னர் அரசாங்க நிருவாக சேவையில் இணைந்து பல துறைகளில் பணியாற்றி இருக்கின்றார். இவருடைய ஆளுமையும் கருமங்களைச் செய்து முடிக்கும் வேகமும் என்னை வியக்க வைத்தன.

அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னர் "ஆறுதல்" எனப்படும் அரச சார்பற்ற நிறுவனத்தில் யாழ் பிரதேசத்துக்குப் பொறுப்பதிகாரியாக அமர்ந்து பல சமூக சேவைகளுக்கு காரண கர்த்தாவாக விளங்குகின்றார்.

இவருடைய பலம் இவருடைய துணிவும், அவரிலே காணப்பட்ட சுறுசுறுப்புமே ஆகும். இவருடைய ஆற்றலினால் பயனடைந்தவர்கள் பலர். அவருடைய சேவை தொடர்ந்து மக்களுக்குக் கிடைக்க இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓய்வுபெற்ற அதிவணக்கத்துக்குரிய**
**கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
**பேராயர் தென்னிந்திய திருச்சபை**



## A Teacher

I feel very happy and honored to contribute to your birthday volume, thank you very much for the invitation. When I think of you and your immeasurable work in Northern Sri Lanka, there is in particular one picture coming to my mind that I have taken in a camp with displaced families some weeks after the Tsunami in 2005.

A man surrounded by children, carefully listening to them, to their concerns and worries with a heart full of compassion but also filled with hope, optimism and the strong determination to change their situation to the better.

I feel blessed to have you in my life … as a consultant, a teacher, a mentor and at the same time as a dear and close friend if not a family member. I wish you a very happy birthday and hope that the coming years will be full of joy, laughter, health and moments of deep satisfaction.

With Love, Claudia.




## தொலைநோக்குடைய தலைவர்

1984 இன் நடுப்பகுதி. இலங்கை நிருவாக சேவையின் பயிற்சி உத்தியோகத்தனாக மன்னார் கச்சேரியுடன் என்னை இணைத்திருந்த காலம். முதல் முதலாக டிவகலாலா என்கின்ற பெயர் என் காதில் விழுந்தது. அங்கு பணிபுரிந்த முதுநிலை உத்தியோகத்தர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பணிபுரிந்துகொண்டிருந்த தங்களது சகபாடி எனத் தொலைபேசி ஊடாக எனக்கு அறிமுகப்படுத்தினர். அக்காலத்தில் மன்னாரில் கடமையாற்றுவது என்பது அரச உத்தியோகத்தர்களுக்கு விருப்ப மில்லாத விடயம். மிகுந்த வெப்பம், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மின்வழங் கல் வசதி, தண்ணீர் தட்டுப்பாடு, அளவுக்கதிகமான புழுதியும் தூசிப்படலமும், சாப்பிடுவதற்கு என்று தரமான உணவுச்சாலைகளைக் கண்டறிவது கடினம், பொழுதுபோக்கு வசதிகள் மிகமிகக் குறைவு. ஆனாலும் எனது அனுபவம் மகிழ்ச்சிகரமானது.

இளைப்பாற்றுக் காலத்திற்கு பின்பு டிவகலாலா அவரக்ளின் தெரிவு இங்கும் மரபுக்கு மீறியதாக இருந்தது வியப்பிற்குரியதாக எனக்கு இருக்கவில்லை. தான் இளைப்பாறுவதற்கு முன்பு பணிபுரிந்த கல்வித்துறையில் பெற்ற பட்டறிவு, மானிட அனர்த்தங்களும் சமூக அரசியற் பாரபட்சங்களும் மக்கள் மீது ஏற்படுத்திய பாதகமான தாக்கங்களை உணர்ந்த பக்குவம், படுக்கையில் வீழ்ந்து பாயிற்சுருண்டு போய்விடு முன்பு சமூகத்திற்கு ஆற்றவேண்டிய பிறவிக்கடனை செய்ய தவறிவிடுவோமா? என்ற அச்சம் யாவும் ஒன்றிணைந்து உருவாக்கியதே "ஆறுதல்" என்கின்ற ஆய்வு நிறுவனமாக எனக்குத் தோன்றுகின்றது.

போருக்குப் பின்னான கால நீட்சியினுள் கண்ணுக்குப் புலனாகாத காரணிகள் ஒன்றிணைந்து எதிர்காலத் தலைமுறையின் கல்வியை சீரழிக்க முயலும் வேளையில் வடக்கு கிழக்குச் சிறார்களின் கல்வியை மேம்படுத்த முறைசார் அமைச்சு நிறுவனங்களுடன் இணைந்தும் தனியாகவும் கல்விசார் வளமூட்டல் பணிகளைத் தொடரும் ஆறுதல் நிறுவனத்தின் உயிரோட்டமாகவும் தொலைநோக்கு கொண்ட தலைமையாகவும் திரு. டிவகலாலா அவர்கள் திகழ்வது அனைவரதும் பாராட்டிற்குரியது.

**திரு. ம.செல்வின் பணிப்பாளர்,**
**தொழில்த் திணைக்களம்.**



## நன்னெறி புகட்டும் நல் ஆசான்

வடக்கு - கிழக்கு மாகாண கல்விச் செயலாளராக சேவையாற்றி ஓய்வுபெற்றாலும் கற்றுக்கொள்வதற்கும் கற்றுக்கொடுப்பதற்கும் ஓய்வெடுத்துக்கொள்ளாமல் சேவையாற்றும் நல் ஆசான். வாழும் காலத்தை பயனுள்ளதாக்க முனையும் இலட்சியவாதி. கல்வி என்பது இறக்கும்வரை தொடரப்படவேண்டும் எனவும். வாழும் காலம்வரை கற்றுக்கொண்டே இருங்கள் எனவும் எமக்கு வழிகாட்டும் ஐயா அவர்கள் எந்நேரமும் செய்யும் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் எமக்கு புதிது புதிதாக பல விடயங்களை கற்றுக்கொடுக்கின்றது. ஆகவே கற்றுக் கொண்டே இருங்கள் வாழ்வை வளப்படுத்துங்கள் என வழிகாட்டுகிறார்.

பவள விழாக்காணும் இந்நாளில் எம்மவர்க்கு அவர் சொல்லும் செய்தி "தேடல் வழி அறிவைப் பெருக்குவோம்" என்பதாகும். "தெரியத் தெரிய தெரியாததும் தெரிய வரும்" என்ற வாக்கினை அடிக்கடி உபயோகப்படுத்தி அவ்வாக்கினை மெய்ப்பித்து காட்டியவர். ஐயா சுந்தரம் டிவகலாலாவின் அறிவுரைகளும் வழிநடத்தல்களுக்கும் இந்நாளில் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கிறேன்

**அ.இமக்குலேசியா**
**- ஆறுதல்**



## நீடூழி வாழ்க

இன்றைய இனிய நாளில் பவளவிழாவை எதிர்கொள்ளும் திரு.சுந்தரம் டிவகலாலா என்ற அனுபவம் முதிர்ந்த ஆக்கப் பணியாளருக்காக ஆசியுரை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மண்ணில் ஓர் வைரக்கல்லாய் வாழ்ந்து காட்டி வளமான சமூகத்தைக் கட்டியெழுப்பக் காரணமான இவர் ஓர் "ஓல்ட் இஸ் கோல்ட்" (Old is Gold) நாற்பது வருடங்களுக்கு மேலாக சமுதாயத்துடன், ஒன்றிணைந்து ஆற்றியுள்ள அளப்பரிய பணிகள் எதிர்காலத்துச் சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டுதலாகும். யார் யாருக்கு எவ்வேளையில் எத்தேவை பூர்த்தி செய்யப் பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களை உணர்ந்து அவர் செயற்பட்டதால் தான் இன்று முன்பள்ளிகள் தலைநிமிர்ந்து நிற்கின்றன. அடிப்படைக் கல்விக்கு அத்திபாரமிட்ட அன்னவர் சமூக விழிப்புணர்வை உருவாக்கி மனித நேயங்களை வளர்த்ததால், மார்க்க விழுமியங்கள் மழுங்கடிக்கப்படாது திட்டமிட்டு செயற்பட்டதால் பண்பாடு, பழக்கவழக்கங்கள், கலை, கலாசார உணர்வுகள் உயிரூட்டமாக வாழ்வது மறக்க முடியாதது. காலத்தால் மறக்க முடியாத இவர் சேவைகள் மனித மனங்களாலும் என்றும் மறக்க முடியாதவை என்பதுதான் உண்மை. அதற்காக அவர் மேலும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வல்ல இறைவன் என்றும் அருள்பாலிப்பாராக. அல்ஹம்து லில்லாஹ்!

ஆமீன் யாரப்பல் ஆலமீன்!

**அல்ஹாஜ் மௌலவி, ஏ.எம்.ஏ அஸீஸ் (காஸிமி), (யாழ் / கிளி மாவட்ட உலமா சபை சர்வமதத் தலைவர்).**



## பவளவிழா வாழ்த்துக்கள்

அந்த நாட்களில்
ஆய்வு, அறிவார்ந்த சமூக
விழிப்புணர்வு என
ஆற்றல் வளர் களங்களில்
ஆழ வேர்விட்ட உறவு

ஆளுமை வெளிப்படும்
அழகிய தருணங்களில்
இசைந்து பயணித்த சிறப்பு

அரச பணியை
அயராத சமூகப்பணியாக்கும்
வித்தை தெளிவித்த நிறைவு

ஓய்வுக்குப் பின்னாலும் ஓயாது
சமூகத்து
ஆறுதலாகும் நிமிர்வு
எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை

எல்லையிலா அன்புடன்
பவளவிழா வாழ்த்துக்க ள் !!!

**பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம**



## நேரான சிந்தனையாளர்

காலங்கள் விரைவதுபோல் வேறெதுவும் விரைவதில்லை. எனது பாடசாலைப் படிப்புகளை நிறைவாக்கி வேலைதேடும் ஆவலோடு பலரையும் சந்தித்திருக்கிறேன் ஆனால் எனக்கு அறிவுரைத்து என்னை வழிநடத்தி எனக்கான எதிர்காலத்தை நானே அமைத்துக் கொள்ளும் வகையிலான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் எனது உந்துசக்தியாக 2012இல் சுந்தரம் டிவகலாலா சேர் அவர்களை அவருடைய துணைவியரின் ஊடாக சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். "என்ன செய்கிறாய்" என வினாவி "நாளை ஆறுதல் நிறுவனத்துக்கு வா" எனக் கூறினார். என்னை ஆறுதல் நிறுவனச் செயற்பாடுகளோடு இணைத்துக் கொண்டார்.

எனக்குத் தரப்பட்ட பல்வேறு பணிகளினூடான எனது அனுபவத்தில் அவர் தோற்றமிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பமும் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

கம்பீரமான நடை, கணீர் என்ற குரல், அவரது மும்மொழி ஆற்றல், வசீகரிக்கும் வார்த்தைப் பிரயோகம், அனுபவ ஞானம்; அஞ்சாத தற்துணிவு, சளைக்காது பதிலளிருக்கும் பலம், முடிவெடுக்கும் தீரம், குறிக்கோளை நோக்கிச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் விவேகம், நேரத்தை பயன்படுத்தும் நுண்ணறிவு, வேலைகளைத் திட்மிட்டுச் செய்தல், தொழில் அர்ப்பணிப்பு, சிறந்த தொடர்பாடல், ஞாபகசக்தி, ஊழியர்களில் காட்டும் கரிசரனை எனப் பலவும என்னை ஈர்த்தன.. நாடும் இனமும் முன்னேறக் "கல்வி" ஒன்றே எமக்குள்ள ஒரே வழி என்ற சிந்தனையை எமக்கு ஊட்டி செயலிலும் காட்டி வரும் எமது முன்மாதிரி இவர்.

சமூகப்பணிகள் இவரது வாழ்வுடன் ஒன்றுபட்டதொன்றாகும். இவர் ஆற்றிவரும் சமூகப்பணிகள் ஏராளம். பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவி, சிறுவர் பெண்கள் உரிமைகளைப் பாதுகாத்தல், மரம்நடுகை, கூட்டுறவு, முன்பள்ளி ஆசிரியர்களின் உயர்ச்சி, நோயாளர்களுக்கு பணவுதவி, ஏழை மாணவர்கள் கற்பதற்கான உதவிகள், போரால் பாதிக்கபட்டவர்களுக்கான மேம்பாட்டுத்திட்டங்கள், வேலை வாய்ப்புக்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. அரசியல் ஆட்கொள்ளாத வாழ்க்கை எவரிடத்திலும் இல்லை என்பதை அனுபவரீதியாக அறிந்து கொண்டு அதற்கேற்பத் தன்னை மக்களின் தேவையோடு இணைத்துக் கொண்டு செயலாற்றுபவர்.

அவருக்கு அகவை எழுபத்தைந்தில் "வடலிகள் வானுயரும்" என்ற அவருடைய வேணவா நிச்சயம் வெற்றியடையும் என்ற நம்பிக்கையுடன் அவர் பாதையில் என் பாதங்களைப் பதித்து முன்னேறுவதில் எனக்குள்ள ஆர்வம் இன்னும் தொடர்கின்றது. அவரது பயணத்தில் நானும் இணைந்து கொள்வேன் என்று உறுதி கூறி இத்திருநாளில் அவரது பாதம் பணிவதில் பெருமையடைகின்றேன்.

**சு.திருக்குமரன்**
**இணைப்பாளர், ஆறுதல்**

## "வடலிகள் வானுயரும்"
-ஆறுதல் குடும்பம்

# ஆசிரியம்

## வாழ்வின் ஒளி விளக்கு




கயல்விழி

அன்பினை வழங்கும் அட்சய பாத்திரங்களே
அறிவுச் சுடர் ஏற்றும் அணையா தீபங்களே
அனுபவப் பசி போக்கும் கற்பக விருட்சங்களே
பண்பியல்பை வழி நடத்தும் முன் மாதிரிகளே
விடுதலைச் சமத்துவமும் உரிமையின் கருத்துருவமும் அறிவின் பொருளால்
உணர்த்தும் உன்னத உள்ளங்களே
பிறர்க்காய் மெழுகென உருகி ஒளி தரும் தியாகத் துருவங்களே
வாழ்க......!

சக்தியுள்ள சமுதாயம் படைத்து
நற்குணங்களை என்றும் காத்து
தீயசக்திகள் அழித்து
முத்தொழில் செய்து மூவுலகை ஆளும் பரம் பொருளின் அருவுருவச் சக்திகளே
நீடு வாழ்க...!

அறிவுச் சுடர் தந்து அறம் தழைக்க
அச்சாணியாய் விளங்கும் ஆசான்களே - உம்
அருள்முகம் பணிந்து திருமலர்ப் பதம் தனைப் பணிகிறோம்
உங்கள் ஆத்மார்த்த அறிவுப் பணிக்கு
என் ஆசிரியப்பா வாழ்த்துக்கள்
வாழ்க நிரந்தரம்...........!

## பொன்மொழிகள்

"நான் உயிரோடு இருப்பதற்கு, என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்."
- மாவீரன் அலெக்ஸண்டர்

"கல்விக்கூடம் ஒரு தோட்டம். மாணவர்கள் செடிகள்;. ஆசிரியர்கள் தோட்டக்காரர்கள்."
- ஜிக்ஜேக்ளர்




பாராளுமன்ற உறுப்பினர்

# கௌரவ ஈ. சரவணபவன்

ஏற்பாட்டில்

## சாதனையாளர்கள் கௌரவிப்பும் பயிலுனர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் - 2017

காலம் : 05.10.2017 வியாழக்கிழமை மாலை 4.00 மணி

இடம் : தமிழ் தேசிய கூட்டமைப்பு அலுவலகம்
அத்தியடி பிள்ளையார் கோவில் முன்பாக, வட்டுக்கோட்டை

தலைமை : யசோதை சரவணபவன்
நிர்வாக இயக்குநர் உதயன்

பிரதம விருந்தினர்
பேராசிரியர் ரா. விக்னேஸ்வரன்
உபவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்

சிறப்பு விருந்தினர்
கௌரவ மாவை சோ.சேனாதிராசா (பா.உ)
தலைவர் இலங்கை தமிழ் அரசுக் கட்சி

கௌரவ விருந்தினர்கள்
உயர்திரு நோர்பேர்ட் உதயகுமார்
கோட்டக்கல்வி பணிப்பாளர் - சங்கானை

உயர்திரு பெ.கனகசபாபதி
பொருளாளர்
இலங்கை தமிழ் அரசுக் கட்சி


உயர்திரு சூ.சே.குலநாயகம்
நிர்வாகச் செயலாளர்
இலங்கை தமிழ் அரசுக் கட்சி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சரவணபவன் அறக்கட்டளை, உதயவாழ்வு

# விளக்கேற்றும் முறைகளும் அவற்றின் பலன்களும்

எமது அன்றாட வாழ்வில் தீப ஒளிக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. வாழ்வில் சௌபாக்கியங்களை பெற நாள்தோறும் வீட்டிலும், எம்மால் முடிந்த பொழுது ஆலயங்களிலும் விளக்கேற்றி வர மன அமைதியுடன், இறைவன் அருளையும் பெற முடியும். ஆனால் விளக்கேற்றுவதிலும் பல முறைகள் காணப்படுகின்றன. அந்த முறைகளில் விளக்கேற்றி வழிபடும்போது வாழ்வில் பல நன்மைகளை அடைய முடியும்.



* விநாயகருக்கு தேங்காய் எண்ணெயினால் விளக்கு ஏற்ற வேண்டும்.
* மகாலட்சுமிக்கு பசும் நெய்யினால் விளக்கு ஏற்ற வேண்டும்.
* பராசக்திக்கு வேப்பெண்ணெய், பசும் நெய், இலுப் பெண்ணெய் கலந்து விளக்கு ஏற்ற வேண்டும்.
* குல தெய்வத்திற்கு வேப்பெண்ணெய், பசும் நெய், இலுப் பெண்ணை கலந்து விளக்கு ஏற்ற வேண்டும்.
* நல்லெண்ணெயில் விளக்கேற்றினால் சகல பீடைகளும் விலகும்.
* விளக்கெண்ணையில் விளக்கேற்றினால் உறவுகாரார்களால் நன்மை உண்டாகும்.
* வேப்பெண்ணெய், பசும் நெய், இலுப்பெண்ணெய் கலந்து விளக்கு ஏற்றுவதால் செல்வம் உண்டாகும்.
* நெய், விளக்கெண்ணெய், வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய இந்த ஐந்து எண்ணெய்களையும் கலந்து விளக்கு ஏற்றி ஒரு மண்டலம் அதாவது 45 நாள் கள் தொடர்ந்து வழிபட்டால் தேவியின் அருள் கிடைக்கும், நினைத்தது நடக்கும், மந்திர சக்தி கிடைக்கும் என்பது காலங்காலமாக நிலவி வரும் நம்பிக்கை.

### விளக்கேற்றும் திசை:

* கிழக்குத் திசை நோக்கி விளக்கேற்றினால் துன் பம், கடன் பகை விலகும்.
* வடக்குத் திசை நோக்கி விளக்கேற்றினால் சர்வ மங்களம், திரவியம் கிட்டும்.
* மேற்குத்திசைநோக்கிவிளக்கேற்றினால்கடன், ராகு சனி தோஷம் விலகும்.
* வீட்டில் சர்வ மங்களமும் உண்டாக அதிகாலை 03.00 மணிமுதல் அதிகாலை 05.00 வரையி லான நேரத்தில் விளக்கு ஏற்ற வேண்டும்.



## நாளை

**06.10.2017**
வெள்ளிக்கிழமை

**புரட்டாதி 20**


திதி: பிரதமை மு.இ. 11.21 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.இ. 09.23 வரை
சுபநேரம்: 06.02–07.32 வரை
ராகுகாலம்: 10.32–12.02 வரை

## வரலாற்றில் இன்றைய தினம்
## 05.10.2017

1665 - கீல் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
1864 - இந்தியாவின் கொல்கத்தா நகரில் சூறாவளியால், 60 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.
1910 - போர்த்துக்கல்லில் புரட்சி மூலம் முடியாட்சி தூக்கி வீசப்பட்டு குடியாட்சி நடைமுறைக்கு வந்தது.
1915 - முதலாம் உலகப்போரில் பல்கேரியா களமிறங்கியது.
1944 - பிரான்ஸில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
1947 - அமெரிக்க அரச தலைவர் ஹாரி எஸ்ருமனின் வெள்ளை மாளிகை உரை, முதன் முதலாக ஒளிபரப்பப்பட்டது.
1992 - இந்திய இராணுவ உதவியைப் பெற இலங்கை இராணுவம் விரும்புவதாக இந்து நாளிதழ் தகவல்.
2016 - விக்கிக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என இராணுவம் தெரிவிப்பு.




1962 - ஜேம்ஸ் பாண்ட் படத் தொடரின் முதலாவது படமாக 'டொக் டர் நோ' வெளியிடப் பட்டது.



1991 - இந்தோனேஷிய இராணுவப் போக்குவரத்து வானூர்தி ஜகார்த்தாவிலிருந்து புறப்பட்டவேளை விபத்துக்குள்ளாகியதில் 137 பேர் உயிரிழந்தனர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப்படிப்புகள் பீடம்

**புதியஅனுமதி**

**பண்பாட்டியலில் முதுகலைமாணி 2017/18 (அணி III)**

மேற்படி சுயநிதிக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டம். (தமிழ், சமஸ்கிருதம், இந்துநாகரிகம், இந்துமெய்யியல், வரலாறு, சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

அல்லது

பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடியவேறு தகமைகளும் அனுபவமும் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**கற்கைநெறிக் காலம்: ஒருவருடம்**
**மொழி மூலம் :தமிழ்**
**தெரிவுமுறைமை: நேர்முகத்தேர்வு**
**கற்கைநெறிக்கட்டணம் : 100,000/-**

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடஅலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு 1000/= கட்டணத்தை செலுத்தி உயர்பட்டப்படிப்புகள் பீடஅலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பபடிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 x 10செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் , உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் www.grad.jfn.ac.lk எனும் பல்கலைக் கழகவலைதள வசதியூடாகவும் (website)பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா1000/- பெறுமதியான காசுக் கட்டளையை /மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில்30.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரியவிண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிப்பு :- **ஏற்கனவே இக்கற்கைநெறிக்கு விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

**பதிவாளர்.**



# மாரி–2 படத்தில் சாய் பல்லவி

தனுஷ் நடிப்பில் உருவாக இருக்கும் 'மாரி - 2' படத்தில், தமிழ், மலையாளம் ரசிகர்களைக் கவர்ந்த சாய் பல்லவி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

தனுஷ் நடிப்பில் கடந்த 2015ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்ற படம் மாரி. பாலாஜி மோகன் இயக்கிய இந்தப் படத்தில் தனுஷுக்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடித்திருந்தார். அனிருத் இசையமைத்திருந்தார். இந்தப் படத்தின் இரண்டாவது பாகம் விரைவில் உருவாக இருக்கிறது. தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் தயாராகும் இந்தப் படத்தை தனுஷே தயாரிக்கிறார். மாரி இரண்டாம் பாகத்தில் தனுஷுக்கு ஜோடியாக யார் நடிப்பார் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில், சாய் பல்லவி நடிக்கவுள்ளார் என்று படக்குழு அறிவித்துள்ளது.

மலையாளத்தில் வெளியான 'பிரேமம்' படம் மூலம் ரசிகர்களைக் கவர்ந்தவர் சாய் பல்லவி. இதில் இடம்பெற்ற 'மலர் டீச்சர்' கதாபாத்திரம், சாய் பல்லவை புகழின் உச்சத்துக்குக் கொண்டு சென்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



twitter.com/udaya_Jisnu

செய்துவிட்டால் முயற்சி,
செய்ய முடியாது என்கிற
நினைப்பே தோல்வி...





















மனைவியின் செயலால் ஆத்திரமடைந்த கணவன் அவனுடைய மாமனாருக்கு ஒரு எஸ்.எம்.எஸ்.அனுப்பினான்.

*''உங்கள் தயாரிப்பு (மகள்) மரியாதைக்குரியதாக இல்லை. எப்பொழுதும் சண்டைபோடுகிறார். உணவு ஒழுங்காக சமைப்பது இல்லை''*

மாமனாரின் பதில்:

*''தயாரிப்பு விற்கப்பட்டுவிட்டது. உத்தரவாதம் காலாவதியாகிவிட்டது. அதனால் உற்பத்தியாளர் பொறுப்பு அல்ல''*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்டுச் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் மிகுந்திருக்கும். உறவினர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும். வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் சந்தோஷம் குடியிருக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்கு திண்டாட நேரிடலாம்.

**கன்னி:** குடும்பத்தினர் பெருமைப்படும் விதத்தில் செயல்படுவீர்கள். நீண்டநாள் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு பெருகும்.

**துலாம்:** நட்பு விஷயத்தில் எச்சரிக்கை தேவை. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். இலாபம் படிப்படியாக உயரும்.

**விருச்சிகம்:** செயல்களில் எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உறவினர் வகையில் செலவு செய்ய நேரிடும்.

**தனுசு:** மனக்குழப்பம் உண்டாகி மறையும். தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். பெற்றோரின் ஆலோசனையை ஏற்பது நல்லது.

**மகரம்:** லட்சிய மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** உலக நடப்புகளை அறிவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். புதிய வீடு, வாகனம் வாங்கத் திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** மாறுபட்ட கருத்து கொண்டவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

# சுடோக்கு


எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 1 | | 6 | | | | |
| | 6 | | | | 8 | | 2 | 4 |
| | | | 5 | | | 8 | | |
| | | 6 | | | 1 | | | 8 |
| 3 | | 5 | | | 7 | | 9 | |
| | | | 6 | | | | | |
| 1 | 5 | | | 7 | | | | 3 |
| | 4 | 8 | | | | | | 5 |
| 6 | | 7 | | 2 | 5 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 | 7 | 5 |
| 9 | 3 | 7 | 8 | 2 | 5 | 6 | 4 | 1 |
| 8 | 1 | 5 | 7 | 4 | 6 | 3 | 9 | 2 |
| 2 | 8 | 3 | 9 | 7 | 1 | 5 | 6 | 4 |
| 4 | 7 | 9 | 6 | 5 | 2 | 1 | 3 | 8 |
| 5 | 6 | 1 | 4 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 7 | 9 | 6 | 2 | 1 | 8 | 4 | 5 | 3 |
| 3 | 2 | 8 | 5 | 6 | 4 | 9 | 1 | 7 |
| 1 | 5 | 4 | 3 | 9 | 7 | 2 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



# அவனின்றி அணுவும் அசையாது



ஒரு ஊரில் அருணாசலம் என்பவன் வாழ்ந்து வந்தான். பரம ஏழையான அவன் மிகுந்த இறை பக்தியும் நம்பிக்கையும் கொண்டவன். வாழ்க்கையில் நிகழ்கின்ற அனைத்தும் அவை இன்பமாகட்டும் துன்பமாகட்டும் எல்லாம் கடவுளின் செயல் என்று கூறுவான். இந்த நம்பிக்கையின் பற்றுதல் காரணமாக எதைப் பற்றியும் அவன் கவலை கொண்டதில்லை. இறையருள் இன்றி எதுவும் சாத்தியமில்லை என்ற கொள்கையை ஏற்றிருந்தான். அதே வேளை அவ்வூரிலே வேலாயுதம் என்பவனும் வாழ்ந்து வந்தான். அவன் இந்த அருணாசலத்துக்கு நேர் எதிரான கருத்தும் குணமும் உடையவன். கடவுளே இல்லை என்று சொல்லும் கொள்கையுடையவன். அவன் வசதிக்கு என்றும் குறைவில்லை. அருணாசலத்தைக் காணும் போதெல்லாம் அவன் கிண்டல் செய்து பேசுவான். "நீ நம்பியிருக்கும் கடவுள் உன்னை ஏழையாகப் படைத்து விட்டானே. ஆனால் கடவுளை நம்பாத என்னை மட்டும் பணக்காரனாகப் படைத்து விட்டான் பார்த்தாயா?" என்பான்.

அருணாசலம் இதற்கெல்லாம் ஒரு போதும் கலங்கியதில்லை. "எல்லாவற்றுக்கும் ஏதோவொரு காரணம் இருக்கும். அதனை இறைவனைத் தவிர வேறு யாரால்தான் அறிய முடியும்" என்று எப்போதும் சொல்லிக் கொள்வான்.

காலங்கள் கடந்தன. ஒரு நாள் உச்சி வெயில் எங்கும் தகதகத்துக் கொண்டிருந்தது. அந்த வழியாக குடை பிடித்தபடி வந்து கொண்டிருந்தான் வேலாயுதம். குடை வாங்க வசதியற்ற வேலாயுதம் வெயிலின் தகிப்பைத் தாங்க முடியாது வியர்வை வழிந்தோட வந்து கொண்டிருந்தான். இதனை அவதானித்த வேலாயுதம் வழக்கம் போல அருணாசலத்தை வம்புக்கு இழுத்தான். "என்ன அருணாசலம் வெயிலில் வேர்க்க விறுவிறுக்க எங்கே போய் வருகிறாய்...? எல்லாம் கடவுள் செயல் என்று நம்பிக்கை வார்த்தைகளைச் சொல்லும் உனக்கு இந்த கொதிக்கும் வெயிலில் ஒரு குடையைக் கொடுக்க வேண்டுமென்று அந்தக் கடவுள் நினைக்கவில்லையே!....?" என்று கிண்டல் செய்தான். பதிலுரைத்த அருணாசலம் அந்தக் கடவுளின் கருணை இல்லையென்றால் உன்னுடைய கையில் குடை இருந்தாலும், நீ அதைப் பிடித்துச் செல்ல முடியாத நிலை தோன்றும். இறைவனது க்ருணையை எப்போதும் கிண்டல் செய்யாதே" என்று சொல்லி விட்டு வேகமாக நடந்தான். இதனைக் கேட்ட வேலாயுதம் "பெரிய தத்துவம் ஒன்றைச் சொல்லி விட்டாய் போ போ" என்று முணுமுணுத்த படி சிரித்துக் கொண்டே நடந்தான்.

அப்போது தெருவோரமாய் நின்றிருந்த வெறிநாய் ஒன்று 'வேலாயுதத்தை முறைத்துப் பார்த்தபடி அவனைத் துரத்தியது. அவன் ஓடத் தொடங்கினான். நாயும் விடாமல் துரத்தியது. இப்போது குடையை விரித்த படி கொண்டோடுவதில் சிரமமேற்பட, அதனை மடக்கி கையில் வைத்துக் கொண்டு உயிர் தப்பினால் போதும் என்று ஒரே ஓட்டமாக ஓடித் தப்பினான் வேலாயுதம். அப்போது அருணாசலம் சொல்லிட்டுச் சென்ற வார்த்தைகளை அவன் நினைவுபடுத்திக் கொண்டான். கடவுளின் கருணை இல்லா விட்டால் கையில் குடை இருந்தாலும் பிடித்துச் செல்ல முடியாது என்பதை உணர்ந்தான். அவனையறியாமலே இறை நம்பிக்கை அவனுள் ஏற்படத் தொடங்கியது.



# சிங்கராஜவனம்

இலங்கையின் மிகப் பழைய காடு சிங்கராஜ வனம். சுற்றாடல் இயற்கை வள அமைச்சின் கீழுள்ள இலங்கை வனத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் சிங்கராஜ வனம் மனிதத் தலையீடுகள் மிகக் குறைந்த வனமாகவும் மழைக் காடாகவும் விளங்குகின்றது. 1988ஆம் ஆண்டில் இந்த வனம் உலக மரபுரிமைத் தளமாக ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

27ஆயிரத்து 643 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த வனம் கிழக்கு மேற்காக சுமார் 21 கிலோ மீற்றர் நீளமும் வடக்குத் தெற்காக 3.7 கிலோ மீற்றர் அகலமும் கொண்டது. இந்த வனப் பிரதேசத்தின் வருடாந்த சராசரி வெப்ப நிலை 23.6 பாகை செல்சியஸ் ஆகும். அதனால் வருடம் முழுவதும் வறட்சிக் காலமில்லாமல் இருப்பதே இந்தப் பிரதேசத்தின் சிறப்பம்சமாகும். இந்த வனத்தின் தரைப்பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 200 மீற்றர் முதல் ஆயிரத்து 300 மீற்றர் வரையிலான உயரத்தில் அமைந்துள்ளது. இந்த வனத்தில் இனம் காணப்பட்டுள்ள 211 வகையான மர இனங்களில் 66%மரங்கள் இலங்கைக்கே உரிய மரங்களாகும். சுதேச பறவையினங்களில் 95% சிங்கராஜ வனத்தில் காணப்படுகின்றன. இவ்வனத்தில்சாம்பூ இன மான்கள் அதிகமாக வாழ்கின்றன. சுண்டெலிமான்களும் குரைக்கும் மான்களும் காணப்படுகின்றன. ஊதா முக இலைக் குரங்குகள் விரியன் பாம்புகளும் இவ்வனத்தில் ஆங்காங்கே நடமாடுகின்றன. இவ்வனத்தில் தாவர அடர்த்தி மிகக் குறைவாகவே காணப்படுதால் இங்கு மிருகங்களும் பறவைகளும் மிக இலகுவாகவும் சுதந்திரமாகவும் நடமாட முடிகின்றது.

## வர்ணம் தீட்டுவோம்



# வற்றாத நிலாவரைக் கேணி



இன்று தென்னிலங்கையில் இருந்து வடக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களில் ஒன்றாக நிலாவரை வற்றாத கிணறு முக்கியத்துவம் பெறுகிறது. இது புத்தூர் சுன்னாகம் வீதியில் நவக்கிரி கிராமத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது. இந்தக் கிணற்றின் பெயராலேயே இது அமைந்துள்ள பிரதேசம் அழைக்கப்படுகிறது. இதன் ஆழம் எவ்வளவு என்று கண்டறிய முடியாத காலத்தில் இது நிலா இருக்கும் தூரம் எவ்வளவோ அவ்வளவு ஆழம் கொண்டதாக அமைந்திருக்கும் என கருதப்பட்டது. அதன் காரணமாகவே நிலா வரை என்று பெயரிடப்பட்டது. இது உருவானது பற்றி பரம்பரைக் கதையொன்று உள்ளது. அதன்படி இராவணன் சீதையைக் கவர்ந்து இலங்கையில் வைத்திருக்க அவனைத் தேடி இராமபிரான் தன் பரிவாரங்களுடன் சேதுப்பாலம் அமைத்து அதன் வழியாக வந்தார். அவருடன் வந்த வானரப் படைகளுக்கு தாகம் எடுக்க அதனைத் தீர்ப்பதற்கு இராமபிரான் தனது தோளில் தொங்கிய அம்பொன்றால் நிலத்தில் குத்த தண்ணீர் பீறீட்டது. வானரப் படைகளின் தாகமும் தீர்ந்தது. அவ்வாறு குத்திய இடமே நிலாவரைக் கிணறு எனப்பட்டது. பொக்கணை வில்லூன்றி முதலியனவும் அவ்வாறே ஏற்பட்டன என்று இக்கதை கூறுகிறது. விஞ்ஞான ரீதியில் இது ஒரு சுண்ணக்கற்பாறைகள் நிலவுருவாகும். மழை பெய்யும் போது மழை நீருடன் மென் காபோனிக் அமிலமும் கலந்து மண்ணில் விழ இந்த சுண்ணாக் கற்பாறை இடைவெளிக்குள் புகுந்து பாறையினை அரித்து மென்மையாக்கி விடுகிறது. இதனால் மென்மையான பாறைப் படை இடிந்து விழும். இவ்வாறு இடிந்த பகுதி நீரால் நிரம்பி உருவாகுபவையே வற்றாத கேணி அல்லது கிணறுகளாகும். உலகின் பல இடங்களில் இத்தகைய கேணிகள் காணப்படுகின்றன.

இது 50 அடி நீளமும் 40 அடி அகலமும் 164½அடி ஆழமும் கொண்டது. கடல் மட்டத்தில் இருந்து 0.2 ஆழத்தில் நீரைக் கொண்டுள்ளது. மேற்பரப்பில் இருந்து 50 அடி ஆழம் வரை நன்னீர் உள்ளது. 50 முதல் 80 அடி வரையான ஆழத்தில் உவர் நீர் உள்ளது. 130 அடியின் கீழ் கடல் நீரை விடக் காரமான உப்பு நீர் காணப்படுகிறது. இந்தக் கிணற்றில் இருந்து அயற் பிரதேச விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக இது உள்ளது.

# வாசிப்புப் பழக்கம்



- வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணத்துவம் அடைகிறான்.
- வாசிப்பதால் எமது அறிவு வளர்கிறது.
- வாசிப்பவன் சிறந்த அறிஞனாகிறான்.
- வாசிப்பைக் கற்றல் என்றும் கூறுவார்கள்.
- கற்றவர் என்போர் கண்ணுடையவர்கள் என்று போற்றப்படுகிறார்கள்.
- வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க வாசிப்புப் பழக்கம் உதவும்.
- வாசிப்புப் பழக்கம் உள்ளவர்கள் தனிமையை உணர மாட்டார்கள். நூல்களையே நண்பர்களாகக் கருதுவர்.
- நல்ல நூல்களைக் கண்டறிந்து அவற்றை வாசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.
- ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் வாசிப்பது நல்ல பழக்கமாகும்.
- நல்லனவற்றைக் கூறும் நூல்கள் நமது நண்பர்களுக்குச் சமன்.
- நூல்களை வாசிப்பதால் நமது சிந்தனை விருத்தியுறுகின்றது.
- சிந்திக்கவும் உலகில் நன்றாக வாழவும் வாசிப்புப் பழக்கம் உதவும்.
- வாசிப்பின் மூலம் கல்விச் செல்வத்தைக் தேடிக்கொள்ளலாம்.
- கல்விச் செல்வத்தை நாம் பிறருக்கு கொடுக்கக் கொடுக்க கொடுப்பவருக்கு மணற் கேணி போல அறிவுச் செல்வம் சுரந்து கொண்டே இருக்கும்.
- கல்விச் செல்வத்தைப் பெற நாம் பாடசாலைப் பாடங்களோடு மட்டும் நின்று விடாது மேலதிகமான நல்ல நூல்களை வாசிப்பதோடு மற்றவர்களையும் வாசிப்புக்குத் தூண்ட வேண்டும்.

**MATHS PERSONAL CLASSES**
தரம் 6 -11வரையான கணித வகுப்புக்கள்
பிரபல ஆசிரியரால் வீடு வந்து
கற்பிக்கப்படும் **0774540529**







# இழை ஒளியியல்

செ.கயல்

## துணிக்கைகளின் ஊடு கடத்துகை

தண்ணீருக்குள் மூழ்கியவாறு மேலே பார்த்தால் ஒரு குறிப்பிட்ட திசையில் கீழேயுள்ள பொருள்கள் எல்லாம் தெரியும். இதற்கு 'முழு அகப் பிரதிபலிப்பு' என்ற நிகழ்வே காரணம். அடர்த்தி மிகுந்த ஓர் ஊடகத்திலிருந்து அடர்த்தி குறைந்த ஓர் ஊடகத்துக்குள் ஒளி புகும்போது, உதாரணமாக தண்ணீருக்குள்ளிருந்து காற்றுக்குள் ஒளி புகும்போது தண்ணீர்ப் பரப்பில் ஒளிபடும் கோணம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலிருக்கும் சந்தர்ப்பத்திலே ஒளி நீர்ப்பரப்பில் பிரதிபலித்து நீருக்குள்ளேயே பாயும். அந்தக் கோணத்தை 'மாறுநிலைக் கோணம்' என்பர். பாலைவனங்களில் கோடைக் காலத்தில் தோன்றும் கானல் நீர், வைரங்களின் சுடரொளி போன்றவற்றுக்கு 'முழு அகப் பிரதிபலிப்பே' காரணம். கண்ணாடிக்குள்ளிருந்து காற்றுக்குப் பாயும் ஒளி, மாறுநிலைக் கோணத்தைவிட அதிகமான கோணத்தில் கண்ணாடிக்கும் காற்றுக்கும் இடையிலான பிரிதளத்தில் படும்போது அந்த ஒளி கண்ணாடிக்குள்ளேயே திருப்பப்பட்டுவிடும். இந்த நிகழ்வின் அடிப்படையில் ஒளியியல் இழைகள் செயற்படுகின்றன.

### இழை ஒளியியல்

1841 ஆம் ஆண்டு 'ஜீன் டேனியல் கொலாடன்' என்ற பேராசிரியர் ஓர் உருளையான ஜாடியிலிருந்த துளைகள் வழியாக நீர் வெளிப்படுவதைத் தமது மாணவர்களுக்குச் செய்முறை விளக்கம் அளித்துக்கொண்டிருந்தார். அப்போது ஜன்னல் வழியே வந்த சூரிய ஒளி தற்செயலாக அந்த ஜாடியின் மேல் பட்டது. துளைகளிலிருந்து வளைந்த தாரையாக விழுந்து கொண்டிருந்த நீர் வெள்ளிக் கம்பியைப் போல ஒளி வீசியது. நீர்த் தாரைக்குள்ளேயே ஒளி திரும்பத் திரும்பப் பிரதி பலிக்கப்பட்டு நீருடனேயே பயணம் செய்ததாகப் பேராசிரியர் புரிந்து கொண்டார். ஒளி நேர்க்கோட்டில்தான் பயணம் செய்யும் என்றபோதும் ஊடகத்தைத் தக்கபடி அமைத்தால் அது வளைந்த பாதையிலும் பயணிக்கும் என்று கொலாடன் கண்டுபிடித்தார். 1854 ஆம் ஆண்டு 'ஜான் டிண்டால்' தமது சோதனைகளின் மூலம் இதே முடிவைக் கண்டறிந்தார்.

1930 ஆம் ஆண்டு 'ஹெயின்ரிஷ் லாமன்' என்ற மருத்துவ மாணவன் ஒரு மின்விளக்கி லிருந்து வெளிப்பட்ட ஒளியைக் கண்ணாடி இழைகளின் மூலம் தேவையான இடத்துக்குச் செலுத்தும் முறையைக் கண்டுபிடித்தார். 1954 ஆம் ஆண்டு 'வான் ஹீல்', 'ஹெரால்ட் ஹாப்கின்ஸ்', 'நரீந்தர் கப்பானி' ஆகியோர் தனித்தனியாக கண்ணாடி இழைகள் மூலம் விம்பங்களைக் கடத்தும் உத்திகளை விளக்கும் கட்டுரைகளை வெளியிட்டனர். நரிந்தர் கப்பானி அந்த நிகழ்வுக்கு 1956 ஆம் ஆண்டு 'இழை ஒளியியல்' என்ற பெயரைச் சூட்டினார்.

### குறைந்த சேதாரம்

1960 ஆம் ஆண்டுக்குள் வளையக்கூடிய கண்ணாடி இழைகளைப் பயன்படுத்தி உடலின் உள்ளுறுப்புகளைப் பார்வையிடவும் படமெடுக்கவும் கூடிய கருவிகள் உருவாக்கப்பட்டுவிட்டன. 1960 ஆம் ஆண்டு 'தியோடர் மைமன்' என்பவர் மாணிக்கக் கல்லிலிருந்து லேசர் ஒளியை உண்டாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். 1962 ஆம் ஆண்டு அரைக் கடத்திகளிலிருந்து லேசர்களை உண்டாக்கும் முறைகளும் 1970 ஆம் ஆண்டுகளில் 'லேசர் டயோடு' கருவிகளும் உருவாக்கப்பட்டன.

ஒளி விலகல் எண் அதிகமாக உள்ள ஓர் இழையின் வெளிப்புறமாக குறைவான ஒளி விலகல் எண் கொண்ட ஒரு காப்பு உறையை அமைத்து இழையின் ஒரு முனையில் ஒளியைப் பாய்ச்சினால் அந்த ஒளிக்கதிர் பல முறை முழு அகப் பிரதிபலிப்புச் செய்து இழையின் மறுமுனைக்குச் செல்லும். அந்த இழைகளைக் கேபிளாக அமைத்து எவ்வளவு தொலைவுக்கும் அவற்றின் மூலம் ஒளியைக் கடத்தலாம். அந்த இழைகளைத் தேவையானபடி வளைத்து ஒளியை விரும்பிய பாதைகளில் செலுத்தவும் முடியும். 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த 20 புதுப் புனைவுகளில் ஒன்றாக இழை ஒளியியலை அமெரிக்கத் தேசிய அக்கடமி பாராட்டுகிறது.


இன்றைய ஒளியிழை, கேபிள்களின் குறுக்குவெட்டுப் பரப்பில் 1 வீத ஒளியைக் கடத்துவது. மீதமுள்ள 99 வீதம் மைய ஒளியிழையைப் பாதுகாக்கும் கவச உறைகளாயிருக்கும். கடலுக்கு அடியில் பொருத்தப்பட்டிருக்கும் ஒளியிழைகள் பல அடுக்குகள் கொண்ட உறைகளால் பாதுகாக்கப்படுகின்றன. ஒரு முனையில் செலுத்தப்படும் ஒளி மிகக் குறைவான சேதாரத்துடன் மறுமுனையை அடையும் வகையில் மைய ஒளி இழை அமைக்கப்படுகிறது.

### சைகைப் பரிமாற்றம்

தகவல்களும் படங்களும் சங்கேதக் குறிகளாக மாற்றப்பட்டு மின் சைகை களாக உருமாற்றம் செய்யப்படுகின்றன. பின்னர் அவை ஒளியியல் சைகைகளாக்கப்பட்டு கேபிளின் ஒரு முனைக்குள் புகுத்தப்படுகின்றன. மறுமுனையில் ஒளியியல் சைகைகள் மின் சைகைகளாக மீள்மாற்றம் செய்யப்படும். அந்த மின் சைகைகள் தக்க கருவிகள் மூலம் ஒளியாகவும் ஒலியாகவும் மாற்றப்படுகின்றன. பின்னர் அவை தகவல்களாகவும் படங்களாகவும் உருமாற்றம் அடைகின்றன.

ஒளியிழை கேபிள்கள் அளவிலும் எடையிலும் குறைந்தவை. இரசாயனங்களால் பாதிப்படையாதவை. செப்புக் கம்பி கேபிள்களைவிடக் குறைவான பராமரிப்பு தேவைப்படுபவை. கண்ணாடியிழைகளில் ஆற்றல் இழப்பு குறைவு. அவற்றின் மூலம் சைகைகள் ஒளி வேகத்தில் பயணிக்கும். ஒரே கேபிளுக்குள் நூற்றுக்கணக்கான தனித்தனிக் கண்ணாடியிழைகளை அடக்கிவிடலாம். அவை மின்சாரம் கடத்தாதவை. எனவே, வெளிப்புற மின்புலங்களாலும் காந்தப் புலங்களாலும் வளிமண்டலக் குழப்பங்களாலும் பாதிக்கப்படாது. அவற்றை மின்கடத்தும் கம்பி வடங்களை ஒட்டியே பொருத்தலாம். சாதாரண தொலைபேசிகளின் கேபிள்களில் இணைப்புப் போட்டு ஒட்டுக் கேட்க முடியும். ஒளியியல் கேபிள்களில் அது முடியாத காரியம்.

உருக்கிய சிலிக்காவினால் செய்யப்பட்ட கேபிள்களைத் தொலைத்தொடர்புக்குப் பயன்படுத்தும் முறைகளை உருவாக்கி 'சார்லஸ் காவோ', 'ஜார்ஜ் ஹக்காம்' ஆகியோர் பெரும் வளர்ச்சிக்கு அடிகோலினர். காவோ, 'அகலக் கற்றைத் தகவல் தொடர்பு மற்றும் நவீன ஒளி இழைச் செய்தித் தொடர்பின் பிதா' எனப் போற்றப்படுகிறார். 2009 ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.



**விற்பனைக்கு**
பூங்கன்றுகள் பழமரக்கன்றுகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனைக்கு. **0779352401**

**விற்பனைக்கு**
பாவித்த Bajaj (Japan Made)ஸ்கூட்டர்
136XXXX விற்பனைக்குண்டு.
**0764355586**

**கடை வாடகைக்கு**
வேம்படி மகளிர் கல்லூரிக்கு எதிரில் கடை
வாடகைக்கு உண்டு.
**0779687677**







## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதி கந்தையா

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது உரும்பிராய் வீதி, மருதனார் மடத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி சரஸ்வதி கந்தையா 30.09.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (முத்துலிங்கம்)வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கருணேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி,நாகேஸ்வரி,பரமேஸ்வரி,இராஜேஸ்வரி,நாகரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரன்,ராஜன், யசோதா ஆகியோரின் அன்பு மாமியாரும் பாவியன், யூலியான், டாமியான், ரம்யா,பிறின்சியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2017) வெள்ளிக்கிழமை மு.ப11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**0775371449**

**உரும்பிராய் வீதி, மருதனார்மடம்.**

## மரண அறிவித்தல்

### முருகேசு கேசவன்



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கேசவன் (கட்டட ஒப்பந்தகாரர்) 02.10.2017 திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சாந்தகுமாரி தம்பதியரின் செல்வப் புதல்வனும் நாகதங்கம் (மணி) இன் அன்புக் கணவரும் முரளி, முருகவிதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகௌரி (பல்வைத்தியர், கண்டி போதனா வைத்தியசாலை), இராகவன் (கனடா), ஸ்ரீகரேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் வேல்முருகு, சுஜிதா, துஷ்யந்தினி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, தங்கம்மா மற்றும் இரத்தினம், சிவபாக்கியம், பூமணி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் செம்மணி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**28/6, கொண்டலடி லேன்,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 . 02 . 1956

மறைவு 05 . 09 . 2017



அமரர்

## சிவசிவாபிள்ளை பன்னீர்ச்செல்வன்

(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் J/120)

கடந்த 05.09.2017 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் சிவசிவாபிள்ளை பன்னீர்ச்செல்வன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபத்தினை தெரிவித்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு. அவரது வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (05.10.2017) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.)

பொற்பதி லேன்,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
021 221 2023

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் கட்டடப்பொருள் உற்பத்திநிலையத்திற்கு தொழிலாளிகள் தேவை.

* கல் அரிதல்
* பூக்கல் அரிதல்
* தூண் அரிதல்
* காவலாளி

(தங்கி நின்று வேலைசெய்பவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு 076 866 5514, 077 022 2644

## தவறிவிட்டது

சுதுமலைக்காணியின் உறுதி, வரைபடம் கொண்ட File 04.10.2017 புதன்கிழமை மானிப்பாய்க்கும் உரும்பிராய்க்கும் இடையில் பிரதான வீதியில் காலை 8.00 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P.- 077 634 1541

## தேவை

சீமெந்து பூச்சாடிகள் செய்வதற்கு வேலையாள்கள் தேவை.

ஆதரவு கைத்தொழில் நிலையம், மீசாலை

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னமுத்து செல்வரத்தினம்



ஜீ.ஜீ.பொன்னம்பலம் வீதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கை நிரந்தர முகவரியாகவும் பிள்ளையார் கோவிலடி, ஈவினை மத்தி, புன்னாலைக்கட்டுவனை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி அன்னமுத்து செல்வரத்தினம் நேற்று (04.10.2017) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் மருமகளும் செல்வரத்தினத்தின் மனைவியும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் சகோதரியும் சிவானந்தன் (கிராம அலுவலர் - சுன்னாகம் கிழக்கு), சித்திரா (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவீந்திரன், வனஜா (ஆசிரியை - கிளி./சிவபாதகலையன்) ஆகியோரின் மாமியும் பிரமீனா, யதுமதி, ரவிவர்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2017) வியாழக் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று ஈவினை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: குடும்பத்தினர்.
ஆ.செல்வரத்தினம், T.P.077 749 7578

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கமுத்து மார்க்கண்டு

சுன்னாகம் சூளானையை பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து மார்க்கண்டு நேற்று(04.10.2017) புதன் கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு(பொலிஸர்,அழகையா ) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் அன்னமுத்து காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சரஸ்வதி, மனோன்மணி, பூமணி ஆகியோரின் சகோதரியும் செந்தூர்செல்வனின்( மதுவரி அத்தியட்சகர்,வவுனியா)மாமியும், அனுஷா(உஷா)வின் மாமியும் மயூரன் (மொறட்டுவ பல்கலைக்கழகம், கொழும்பு), விருத்திகா(பெரதேனியா பல்கலைக்கழகம்) ஆகியோரின் அப்பம்மாவும் கமலவேணி, கிருஷ்ணவேணி, பன்னீர்செல்வன், பேபிசறோயா, கோமளவதி, மாலினி, அனுரா, ரஜிகலா, அனீரா, விஜி, ராஜி ஆகியோரின் மாமியும் சாந்தா, யமுனா, சுரேன் (படப்பிடிப்பாளர்), ரவி, ஜெயா, பாலா ஆகியோரின் பெரியம்மாவும் நவயோகநாதன், சீதா, டில்லிமலர் (Co op ஓய்வு பெற்ற முகாமையாளர்), காலஞ்சென்ற கிருபாகரன்(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2017) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். 021 224 0948

## மரண அறிவித்தல்

### திருமதி பவளம் கந்தையா



பிறப்பு 27.05.1932 இறப்பு 04.10.2017

வைரவகோயிலடி, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் கந்தையா நேற்று (04.10.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம், கமலாதேவி, இரத்தினம்மா (கிளி - கனடா), புஸ்பராணி, தனலட்சுமி, சிவனடி (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா (கனடா), காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் மகேஸ்வரன் (ரூபன் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயமலர், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சின்னத்துரை மற்றும் புலேந்திரன், தயாவதி (பிரான்ஸ்), சிவாஜினி (கனடா), காமினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் லக்சுமி, வள்ளியம்மை, தம்பிப்பிள்ளை, வேலுப்பிள்ளை, நாகநாதி, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசீகரன், சுதாகரன், ஜெயபாகரன், கிருபாகரன், சயந்தன், சஜீவன், சாருதன், சங்கீதன், சர்மிலன், சர்வமோகன், சதீஸ்குமார், சதீஸ்காந்தன், காலஞ்சென்ற கீர்த்திகா மற்றும் கரிகரன், சயானா, சபீனா, சுஜிதா, சுவேதா, சோபனா, தர்மினா, தசோன், கோபிகா, றேமிகா, தீபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2017) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வைரவகோயிலடி,
பத்தமேனி.

தகவல்:
குடும்பத்தினர்.

## நியூசிலாந்து...

தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன களமிறக்கப்பட்டபோது புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது. அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இந்த மாத இறுதியில் அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை மீது விவாதம் நடத்தப்படவுள்ளது.

'ஏக்கிய ராஜ்ஜிய'வினுள் அதிகாரப் பரவலாக்கல், சகல மதங்களுக்கும் சம உரிமை. எனினும் பௌத்தத்துக்கு முதன்மை இடம், அதிகாரப் பகிர்வு, புதிய தேர்தல், இன ரீதியிலான தீர்வுகள் உள்ளிட்ட விடயங்களைக் கொண்ட, அதிகளவில் நியூசிலாந்து அரசமைப்பு முறைமையைக் கொண்ட ஒரு புதிய வரைபை அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொடுள்ளனர். முதற்றடவையாக சகல கட்சிகளும் புதிய மாற்றம் ஒன்றை உருவாக்கும் முயற்சிக்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் புதிய திருத்தங்களைப் பரிசீலனை செய்து பார்க்கவும் எமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. படிப்படியாக நாம் எமது இலக்கை நோக்கிச் செல்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் சகலரதும் இணக்கதை கண்டு அனைவரும் ஏற்றுகொள்ளும் புதிய அரசமைப்பை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இப்போது உருவாக்கப்பட்டிருப்பதானது ஓர் அறிக்கை மட்டுமேயாகும். இது தொடர்பிலான கலந்துரையாடல் தொடரும்.

நாடாளுமன்றத்தின் வெளியில் அனைத்து தரப்பையும் இணைத்து அனைவரதும் ஒத்துழைப்புகளுடன் அரசமைப்பை உருவாக்க நாம் நகர்கின்றோம். இது எமது இரண்டாவது கட்ட நகர்வாகும்.

எப்போது புதிய முறைமைகள் உருவாகும் என்று மக்கள் எம்மிடம் கேட்கின்றனர். நாடாளுமன்றம் விரைந்து இந்த விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குமாயின் விரைவில் புதிய அரசமைப்பை உருவாக்க முடியும் - என்றார்.

இடைக்கால அறிக்கைக்கு எல்லாத் தரப்பினரும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர் என்று தலைமை அமைச்சர் கூறியுள்ளபோதும், வெளியிடப்பட்ட அறிக்கையுடன் அனைத்துக் கட்சிகளுமே இணக்கமின்மையை வெளிப்படுத்தியே தமது பின்னிணைப்புகளைச் சேர்த்துள்ளன என்று அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். அந்தப் பின்னிணைப்புகளை நோக்குகின்றபோது இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் எதிலும் கட்சிகள் இடையே இணக்கம் ஏற்படவில்லை என்பது தெளிவாகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான நிலையில் பன்னாட்டுச் சமூகத்தின் முன்பாகத் தலைமை அமைச்சர், அந்த அறிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்கியிருக்கின்றனர் என்று தெரிவித்திருக்கிறார் என்பது ஆச்சரியமூட்டுகின்றது என்றும் அவர்கள் கூறுகின்றனர். (உ-5,31)

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)

## வட மாகாண...

எடைப் பிரிவில் 157 கிலோ பளுவைத் தூக்கியும், அதே கல்லூரியின் மற்றொரு மாணவன் ஆர்.பிரகலாதன் 94 கிலோ பளுவைத் தூக்கியும் தங்கம் வென்றனர். 94 கிலோவுக்கு மேற்பட்ட எடைப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் எஸ்.மனோஜன் 170 கிலோ பளுவைத்தூக்கி தங்கப் பதக்கம் வென்றார்.

பெண்கள் பிரிவில், 63 கிலோ எடைப் பிரிவில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆசிகா 160 கிலோ பளுவைத் தூக்கியும், 17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் 58 கிலோ எடைப் பிரிவில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி பி.நிலோஜினி 105 கிலோ பளுவைத் தூக்கியும் தங்கப் பதக்கங்களை சுவீகரித்தனர். (வ-ம-422)

## யாழ்...

இதுபோன்ற சம்பவங்களை விசாரிக்க தெற்கில் ஆணைக்குழுக்களை நியமிக்கும் அரசு, இங்கு அதனைச் செய்யவில்லை. அரசின் இத்தகைய போக்கை பன்னாட்டுச் சமூகத்தின் முன்னாள் எடுத்துச் சென்று மாணவர்களின் குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க பல்கலைக்கழக மாணவர்கள் முன்வர வேண்டும். அரசியல் அரசியல் என்று ஒதுங்கி நிற்காமல் அறத்தை நிலைநாட்ட மாணவர்கள் முன்வந்து போராடவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். கொல்லப்பட்ட மாணவர்களின் ஓராண்டு நினைவுதினம் எதிர்வரும் 20ஆம் திகதி, அன்றைய நாளில் இருந்து பன்னாட்டு மட்டத்தில் இந்தப் படுகொலையை உரக்கச் சொல்லும் வகையிலான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொக்குவில் குளப்பிட்டியில் வைத்து பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடராஜா கஜன் மற்றும் விஜயகுமார் சுலக்சன் ஆகிய மாணவர்களின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு உரை ஆற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களவர்களுக்கு ஏதேனும் பிரச்சினை என்றால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் விமல் வீரவன்ச போன்று அனைத்து சிங்கள அரசியல்வாதிகளும் ஒரே அணியாகச் சேர்ந்துகொள்கின்றனர். தமிழர் தரப்பில் அவ்வாறான ஒற்றுமைத்தன்மையைக் காணமுடியாது. ஆளாளுக்கு அரசியல் வேறுபாடுகளுடன் நின்று, ஒவ்வொரு நிகழ்வுகளிலும் அரசியல் ஆதாயம் தேடவே முயல்கின்றனர். நினைவேந்தல் நிகழ்வுகள்கூட அரசியல் இலாபத்துக்கு ஏற்றாற்போலவே நடைபெறுகின்றன.

மே18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலாக இருக்கட்டும் தியாகி திலீடன் நினைவேந்தலாக இருக்கட்டும் அனைத்து நினைவேந்தல்களையும் நாம் எழுச்சியுடன் கடைப்பிடிக்க வேண்டும். அந்த நினைவு தினங்களின் முக்கியத்துவத்தை பெரியவர்கள் தமது பிள்ளைகளுக்கு மாணவர்களுக்கு - எடுத்துக் கூறவேண்டும்.

தற்போது அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த வேளையில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தத்தமது தேவைக்கு ஏற்ப அரசியல் நடத்துவதை விடுத்து சமயோசிதமாக சிந்தித்துச் செயற்படவேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அதை ஏற்றுக்கொண்ட சில அரசியல் தலைமைகள் இப்போது அதை வேண்டாம் என்று எதிர்ப்பது போலச் செயற்படுகின்றன. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாம் அப்போதே கூறினோம். அதனால்தான் போராட்டத்துக்குச் சென்றோம்.

எமது காலத்தில் ஆயுதப் போராட்டம் மூலமாக எமது பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு வரும் என்று எதிர்பார்த்திருந்தோம். நாம் இறுதி இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது பல நாடுகளினதும் துரோகத்தனத்தால் அதை அடைய முடியாமல் போய்விட்டது.

இந்த நிலையிலேயே நாம் தற்போது ஜனநாயக வழியில் இராஜதந்திரமாகச் செயற்பட்டு வருகின்றோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ ஐக்கிய தேசியக் கட்சியோ போடுகின்ற பிச்சைக்கு நாம் அடிமையானவர்களாக இருக்க முடியாது. எமது கொள்கைகளில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் நாம் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றோம். கொல்லப்பட்ட தமது சக மாணவர்களுக்கான போராட்டங்களை அவர்களே முன்னெடுக்க வேண்டும்- என்றார்.

படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் திருவுருவப் படங்களுக்கு சுலக்சனின் பெற்றோர் மலர்மாலை அணிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பொதுச் சுடரை ஏற்றினார். மாணவர்கள், பெற்றோர், பொது மக்கள் என்று கலந்துகொண்ட பலரும் மெழுகுவர்த்திகளை ஏற்றி மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். மலர் தூவியும் அஞ்சலித்தனர். வெண்கரம் செயற்பாட்டாளர் ந.பொன்ராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சுலக்சனின் குடும்பத்தவர் சார்பாக எஸ். சிறி, வெண்கரம் செயற்பாட்டாளர் மு.கோமகன் ஆகியோரும் நினைவுரைகளை ஆற்றினர். (உ-வ-5,8)

## தமிழ்...

தார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காணி விடுவிப்புக்குத் தாங்கள் எதிர்ப்பில்லை என்று வடக்கில் வைத்து பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளமை தொடர்பில் ராஜிதவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"காணி விடுவிப்புக்கு மகிந்த அணியின் பசில் ராஜபக்ச எதிர்ப்பு இல்லை என்று தெரிவித்தமை வரவேற்கத்தக்கது. இதன் பின்னர் வடக்கு மக்களின் காணிகளை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் விடுவிக்கலாம் எனக் கருதுகின்றோம். காணி விடுவிப்புக்கு மகிந்த அணியினரே தடையாக இருந்தனர். பசில் ராஜபக்ச கூறியுள்ள விடயம் எமக்கு உற்சாகத்தை தருகிறது. பன்னாட்டுச் சமூகத்தினுள்ளேயே இலங்கை இருக்கின்றது என்பதைப் புரிந்து பசில் ராஜபக்ச செயற்பட்டார். ஆனால் அவர் கூறியவற்றை மகிந்த கேட்கவில்லை. மகிந்த ராஜபக்ச, கோத்தா கூறியவற்றையே கேட்டுக்கொண்டிருந்தார்" என்று ராஜித பதிலளித்தார். (வ-5,31)

## ஒன்றுபட்ட...

கல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"இடைக்கால அறிக்கையில் அரசின் தன்மையைக் குறிக்கும் சிங்கள மற்றும் தமிழ்ப் பதங்கள் ஒற்றையாட்சி என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. இதில் எந்த மாற்றங்களும் இல்லை. இவற்றுக்கு மேலாக ஆங்கிலத்தில் 'யுனிற்ரரி' என்ற வார்த்தையை உள்ளடக்குவது தொடர்பில் விவாதிக்கப்பட்டு வருகின்றது" என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அனுராதபுரத்தில் இரண்டுநாள்களின் முன்னர் தெரிவித்திருந்தார்.

அதே தினத்தில் மன்னாரில் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஒற்றையாட்சியைக் கைவிட இடைக்கால அறிக்கையின் மூலம் இணக்கம் காணப்பட்டுள்ளது என்றார்.

இந்த நிலையிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன, ஒருமித்த நாடு என்பது ஒற்றையாட்சியையே குறிக்கின்றது என்று விளக்கமளித்துள்ளார்.

"இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. நிறைவேற்று அரச தலைவர் முறைமையை மாற்றக்கூடாது என்று அரச தலைவர் மைத்திரி தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சி தெரிவித்திருக்கிறது. என்ன நடக்கப் போகிறது?" என்று அமைச்சர் ராஜிதவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"இடைக்கால அறிக்கை என்பது யோசனைகள் மாத்திரமே. இறுதி அறிக்கையல்ல. நிறைவேற்று அதிகாரம் தொடர்வதும், குறிப்பிடத்தக்களவு அதிகாரங்களுடன் நிறைவேற்று முறைமையைத் தொடர்வதும் ஒரு யோசனை மாத்திரமே. அனைத்தையும் நாடாளுமன்றில் விவாதித்துத்தான் இறுதி அறிக்கை தயாரிக்கப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சிதான் நிறைவேற்று அதிகார முறைமையை 1978ஆம் ஆண்டு தொடக்கம் ஒழிக்கவேண்டும் என்று வலியுறுத்திவந்தது. ஐக்கிய தேசியக் கட்சி அது தொடரவேண்டும் என்று வலியுறுத்திவந்தது.

நாங்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளோம். அரச தலைவரும் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளார். கூட்டு அரசின் உருவாக்கத்துக்குபாடுபட்ட சோபித தேரரின் பூதவுடல் முன்னாள் நின்றும் அரச தலைவர் இதே உறுதிமொழியை எடுத்தார்" என்று ராஜித குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

ஒற்றையாட்சி என்பதுதான் தமிழில் ஒருமித்த நாடு என்று அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலும் ஏக்கிய ராஜ்ஜிய என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையை ஒருபோதும் பிரிக்கமுடியாது என்பதை எடுத்துரைக்கவே இந்தப் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து ஆகியவற்றிலும் ஒற்றையாட்சிதான் காணப்படுகிறது. உயர் நீதிமன்றம், தேசியக் கொடி, தேசிய கீதம், சட்டவாக்கம் என்று வழங்கப்பட்டுள்ளது. இதனால் பிரிந்துபோக முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதிலிருந்து தப்புவதற்காகவே ஏக்கிய ராஜ்ஜிய என்ற பதம் ஆங்கிலத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாட்டைப் பிளவுபடுத்தாத அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய புதிய அரசமைப்பைக் கொண்டுவருமாறு மகாநாயக்க தேரர்களும் கூறியுள்ளனர்.

கூட்டாட்சி என்றால் நாடு பிளவுபடாது என்று உயர் நீதிமன்றமும் கூறியுள்ளது. சொற்பதங்களால் எவ்விதப் பிரச்சினையும் இல்லை. இந்தியாவின் அரசமைப்பில் ஒற்றையாட்சியும், கூட்டாட்சியும் இணைந்து காணப்படுகிறது. ஆரம்பகாலத்தில் உலகில் பல்வேறு முறைகளில் ஆட்சிகளை வகுத்தனர். தற்போது உலகம் மேலும் நிலைமாறிய பின்னர் இந்த ஆட்சி முறைகள் பின்னிப்பிணைந்து ஒன்றிணைந்துள்ளன. பெயர்களின் அடிப்படையில் பார்ப்பது முட்டாள்தனமாகும்.

எமது நாட்டிலுள்ள கட்சிகள் இணைந்து மாகாணங்களுக்கும், மத்திய அரசுக்கும் எவ்வாறான அதிகாரங்கள் உள்ளதென பரிசீலிக்கவேண்டும். அரசமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டால் பொதுவாக்கெடுப்புக்குச் செல்லவேண்டும். அதனை உயர்நீதிமன்றம் தீர்மானிக்கும் - என்றார். (உ-வ-5,31)

## ஆசிரியர்...

ஆசிரியர் சேவை வகுப்பு 3க்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 182 பேரின் பெயர் விவரங்களை www.newuthayan.com/story/34442.html என்ற உதயன் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம். (வ-5)

## வெட்டுப்புள்ளி...

மட்டக்களப்பு - 154, அம்பாறை - 154, திருகோணமலை - 152, கொழும்பு - 156 என வெளியிடப்பட்டுள்ளது. (வ-5)

## எதிர்பார்க்க...

கின்றேன்" என்று புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் மாவட்டத்தில் முதலாம் இடம் பெற்ற பொஸ்கோ மாணவி அனந்திகா உதயகுமார் தெரிவித்தார்.

ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சைப் பெபேறுகள் நேற்றிரவு வெளியாகியது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த அனந்திகா உதயகுமார் 194 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பிடித்தார்.

'மாவட்ட மட்டத்தில் முதலிடம் கிடைத்தமை சந்தோசம். எனக்குப் கற்பித்த ஆசிரியையும் கடவுள் பக்தியும்தான் எனக்கு இந்த நிலமைக்கு காரணம். சிறந்த புள்ளிகளைப் பெறுவேன் என்று எதிர்பார்த்தேன். மாவட்ட ரீதியில் முதலிடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. எதிர்காலத்தில் எனக்கு எந்தத் துறை பொருத்தமாக இருக்கின்றதோ அந்தத் துறையில் நான் படிப்பேன்" என்று அனந்திகா 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

இவரது தந்தையார் பொறியியலாளர் என்பதுடன், தயார் மருத்துவபீடத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். (வ-5)

## சென்.ஜோன்...

கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகியன. பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தின் ஊடாக முதல்கட்டப் பெறுபேறுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில், சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலய மாணவிகள் மாவட்டத்தில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றுள்ளனர். அனந்திகா உதயகுமார் 194 புள்ளிகளுடன் மாவட்டத்தில் முதலிடத்தையும், மைத்திரேயி அனிருத்தன் 193 புள்ளிகளுடன் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

வன்னிப் பிராந்தியத்தில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த புனித சென். சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த கே.அபிசேக் 191 புள்ளிகளுடன் மாவட்டத்ததில் முதலி டத்தைப் பெற்றார்.. வவுனியா இறம்பைக்குளம் மகளிர் பாடசாலையைச் சேர்ந்த உதயராஜ் அவிசாஜினி மற்றும் ஜெயக்குமார் லெவின் ஆகிய இருவரும் தலா 190 புள்ளிகளுடன் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பிரமணியம் வித்தியாலயத்தைச் சேர்ந்த மகேந்திரன் கர்சனா 188 புள்ளியுடன் முதலிடம் பெற்றார். விசுவமடு விஸ்வநாதர் ஆரம்ப வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.அன்பருவி 187 புள்ளியுடன் இரண்டாம் இடம் பெற்றார்..

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த பாஸ்கர் பார்தீபன் 188 புள்ளியுடன் முதலிடத்தைப் பெற்றார். கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வினோதரன் தணிகைக்குமரன் 185 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், கிளிநொச்சி இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த கையிலநாதன் சுவேதனா 183 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றிவு கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் கிளிநொச்சி மகா வித்தியாலய 39 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். கிளிநொச்சி விவேகானந்தாக் கல்லூரியில் 18 மாணவர்களும் முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்தில் 6 மாணவர்களும் பூநகரில் மத்திய கல்லூரியில் 4 மாணவர்களும் பூநகரி செம்பாங்குன்று அ.த.க. பாடசாலையில் 3 மாணவர்களும், பளை இந்து ஆரம்பப் பாடசாலையில் 3 மாணவர்களும் இராமநாதபுரம் மகா வித்தியா லயத்தில் 3 மாணவர்களும்சித்தியடைந்துள்ளனர் என்று கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் தெரிவித்தார்.

(வ-5,101)

## வவு. தமிழ் மத்திக்கு கிடைத்தது வெள்ளி




யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளு தூக்கல் போட்டியில் 17 வயதுக்குட் பட்ட பெண்கள் பிரிவில் வவு. தமிழ் மத்திக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

இசுறுபாய கல்வி அமைச்சின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற 17 வயதுக் குட்பட்ட பெண்கள் பிரிவு பளுதூக்கலில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அ.சாமிகா தர்சினி 63 கிலோ எடைப் பிரிவில் 79 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கம் வென்றார். (ம-23)

## காலிறுதியில் ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

கூரேபார்க் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் திருகோணமலை கிண்ணியா மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் இன்று இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் கொழும்பு பெனடிற் கல்லூரி அணியுடன் சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.
(ம-23)

## அரையிறுதியில் சென். ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

குணசிங்கபுர மைதானத்தில் நேற்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் சென். செபஸ்ரியன் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. மன்னார் சென். சேவியர் கல்லூரி அணியும், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியும் அரையிறுதியில் இன்று மோதவுள்ளன.
(ம-23)

## வெளியேறியது சென். பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 5
தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவில் முதல் சுற்றுடன் வெளியேறியது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. கொழும்பு குணசிங்கபுர மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து களுத்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் களுத்துறை அணி வெற்றிபெற்றதை அடுத்து, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் சுற்றுடன் வெளியேறியது.
(ம-23)



## தெல்லிப்பழை யூனியன் தங்கத்துக்காக மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி தங்கப் பதக்கத்துக்காக இன்று மோதவுள்ளது.

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத் தொடர் மொறட்டுவ வேல்ஸ் குமார வித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதன் அரையிறுதியாட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து கேகாலை வித்தியாலய அணி மோதியது.

முதலாவது செற்றை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 26:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. அந்த அணி இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாவது செற் 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யூனியனின் வசமாக அந்த அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க கல்லூரியுடன் மோதவுள்ளது. (ம-422)

## கடற்கரை கரப்பந்தில் வீரகத்திப்பிள்ளை வென்றது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில் தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி வெண்கலப் பதக்கத்தை வென்றது.



நீர்கொழும்பு உல்லாசக் கடற்கரையில் நேற்று இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் சீதுவு தவி சமீர வித்தியாலயத்திடம் 21:18 22:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வி அடைந்த தொண்டைமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய அணி, மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியை 21:11, 21:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தி வெண் கலம் வென்றது.
(ம-108)

## முதல் சுற்றுடன் மத்தி வெளியே

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதல் சுற்றுடன் வெளியேறியது.

சென். பீற்றர்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற 17 வயதுப்பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மோரிஸ்ரெலாக் கல்லூரி அணி மோதியது. 24:88 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மத்திய கல்லூரி அணி தோல்வியடைந்ததை அடுத்து அந்த அணி முதல் சுற்றுடன் வெளியேறியது. (ம-23)

## வெண்கலம் வெல்ல யூனியனுக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 20 வயது ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெண்கலப் பதக்கம் வெல்ல அதிக சாத்தியமுள்ளது.

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்ட தொடர் மொறட்டுவ வேல்ஸ் குமார வித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற அரையிறுதியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து குருவிட்ட மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலாவது செற்றில் குருவிட்ட மத்திய கல்லூரி அணி 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆனால் இரண்டாவது செற்றை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தது. மூன்றாவது செற்றில் ஆதிக்கம் செலுத்திய குருவிட்ட மத்திய கல்லூரி அணி 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்ற இறுதி வாய்ப்பைத் தவறவிட்டது யூனியன். இன்று மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதவுள்ளது.
(ம-422)



# இன்றைய மோதல்கள்

**வவு. மாவட்ட கால்பந்தாட்டம்**

வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல் ஹிஜிரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருக்குமரன் வி.க. கால்பந்துத் தொடர்**

உரும்பிராய் திருக்குமரன் விளையட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பை ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி ச.ச.நி. கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரேழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சிறிமுருகன் வி.க. கரப்பந்துத் தொடர்**

மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட துடுப்பாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான ரி-20 துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. காலை 9 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# பாகிஸ்தானுக்கு எதிராக கிடைத்த திரில் வெற்றி கடின முயற்சியின் பயன்

## தலைவர் சந்திமல் பெருமிதம்

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்டில் கிடைத்த வெற்றி "கடின முயற்சிக்கான பயன்" என்று இலங்கை அணித்தலைவர் சந்திமல் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 28ஆம் திகதி ஆரம்பமாகி கடந்த 2ஆம் திகதி முடிவுக்கு வந்தது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி திரில் வெற்றிபெற்றது. முன்னதாக இந்திய அணிக்கு எதிரான தொடரில், மூவகை ஆட்டங்களையும் சேர்த்து 0:9 என்று படுதோல்வியடைந்த இலங்கை அணி, பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளமை குறித்துப் பாராட்டுக்கள் குவிந்துள்ள நிலையில் இவ்வாறு தெரிவித்தார் சந்திமல்.

"ஒவ்வொரு வீரரும் மிகவும் கடினமாக உழைத்தோம். இறுதியில் இந்த உழைப்புக்கு வெகுமதி கிடைத்துள்ளது. நாங்கள் கடைசி இலக்கை வீழ்த்தியதும் சந்தோசத்தை வெளிப்படுத்தத் தொடங்கினோம். ஆனால், நடுவர் முறையற்ற பந்து என்றதும் ஆடிப்போய்விட்டோம். குறிப்பாக டில்ருவான் மிகவும் மனமுடைந்துவிட்டார். ஆனார், அவரிடம் நான் மற்றும் கேரத் சென்று, கவலைப்படாதே, இன்னும் ஏராளமான ஓட்டங்கள் உள்ளன என்றோம் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருந்தோம். அதற்கு இந்த வெகுமதி கிடைத்துவிட்டது. அணி வெற்றிக்குத் திரும்பியிருப்பது மகிழ்ச்சி' என சந்திமல் மேலும் தெரிவித்தார். (ம)

# மலேசியக் கார்ப்பந்தயம் வெர்ஸ்டப்பன் சம்பியன்

**உலகக் கார்ப்பந்தயத் தொடரில், கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற மலேசியச் சுற்றில் நெதர்லாந்து வீரர் வெர்ஸ்டப்பன் சம்பியனானார்.**

நடப்பு வருடத்துக்கான உலக கார்ப் பந்தயத் தொடர் உலகம் முழுவதும் 20 சுற்றுக்களாக நடத்தப்படுகிறது. இதன் 15ஆவது சுற்றான மலேசியக் கார்ப் பந்தயத் தொடர் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பந்தயத் தூரமான 310 கிலோமீற்றர்களை ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்களில் எட்டி முதலிடம் பிடித்தார் நெதர்லாந்து வீரர் வெர்ஸ்டப்பன். இரண்டாவது இடத்தை பிரிட்டன் வீரர் லூயிஸ் ஹமில்டன் பிடித்தார். ஆஸ்திரேலிய வீரர் டானியல் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

முதல் 15 சுற்றுக்கள் முடிவடைந்துள்ள நிலையில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் 281 புள்ளிகளுடன் ஹமில்டன் முதலிடத்திலும், 247 புள்ளிகளுடன் ஜேர்மனிய வீரர் வெட்டல் இரண்டாவது இடத்திலும், 222 புள்ளிகளுடன் பின்லாந்து வீரர் போத்தாஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

2015ஆம் ஆண்டு சம்பியனாகியிருந்த ஹமில்டன் கடந்த வருடம் ரஸ்பேர்க்கிடம் மகுடத்தைப் பறிகொடுத்தார். நடப்பு வருடத்துக்கான தொடர் ஆரம்பமாகும் போது இந்த வருடத் தொடரில் தான் சம்பியனாகும் நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தியிருந்தார். இதற்கு ஏற்ப அவர் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

(ம)



## வென்றது பற்றிக்ஸ்

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டக் கால்பந்தாட்டத் தொடரில், நேற்று இடம்பெற்ற 20 வயதுப் பிரிவு ஆட்டமொன்றில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கொழும்பு கம்பல்பார்க் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கெறோப்போத்தனை மகாவித்தியாலய அணி மோதியது. சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

# இந்தியாவைக் கண்டு பயப்படுகிறது ஆஸி. அதிருப்தியில் பயிற்சியாளர் டேவிட் சாகோர்

"இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்யும் வேளைகளில் இந்திய அணியைக் கண்டு ஆஸ்திரேலிய வீரர்கள் பயப்படுகின்றனர்" என்று ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் டேவிட் சாகோர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரை இந்திய அணி 4:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சாகோர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் செய்ய முடியாத சில விஷயங்களை செய்ய முயற்சி செய்யும் போது ஆஸ்திரேலிய வீரர்களில் பெரும்பாலானோர் பயப்படுகிறார்கள். வீரர்கள் அதிக அளவில் சுதந்திரத்துடன் விளையாட நாங்கள் முயற்சி செய்கிறோம். ஆனால், போட்டியில் தோல்வியைச் சந்திக்கும்போது, பயத்துடன் விளையாடுகிறார்கள். இது மிகவும் மோசமானதல்ல. இதை எங்களால் புரிந்து கொள்ள முடியும். அணி வீரர்களிடம் திறமை உள்ளது" என சாகோர் மேலும் தெரிவித்தார். (ம)



# ஆலோசனைக்காக மகேலவும் வந்தார்

இலங்கை கிரிக்கெட் சபையை முன்னேற்றுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவில் முன்னாள் வீரர் மகேலவும் இணைந்துள்ளார். அத்துடன் அரவிந்த டி சில்வாவும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கவுள்ளார். இலங்கை அணி தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வந்ததை அடுத்து அணியை மீட்டெடுக்கப் பல்வேறு திட்டங்களைப் பரிசீலித்து இருந்தது இலங்கை கிரிக்கெட் சபை. இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர அண்மையில் சந்திப் பொன்றை நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பில் இலங்கை அணியின் வீரர்கள், செய்தியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இலங்கை கிரிக்கெட் அணியை மீட்டெடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டன. அவற்றில், இலங்கை கிரிக்கெட் அணிக்கு என தனியான ஒரு ஆலோசனைக் குழுவை அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைவராக ஹேமகா அமரசூரிய நியமிக்கப்பட்டார். இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான சங்கா, மகேல இருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த அழைப்பை சங்கக்கார ஏற்றிருந்தார். எனினும் மகேல தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. இந்த நிலையில் ஆலோசனைக் குழுவில் இடம்பெறுவதை மகேலவும் ஏற்றுள்ளார்.



(ம)

## உடன் தேவை

பலாலி வீதி, பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் உள்ள கடை ஒன்றிற்கு கணினியில் தமிழ், ஆங்கிலம் தட்டெழுத்து வேலை செய்யத் தெரிந்த பெண்கள் தேவை. தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் தமிழ், ஆங்கிலம் தட்டடெழுத்து கற்கை நெறியினைப் பயின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும். நேர்மையும் கடமையுணர்வும் விரைவான செயற்திறனும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு - 077 356 2043

FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
2006 முதல் இன்றுவரை 1305 மாணவர்கள்.
40, பலாலி வீதி, இலுப்பையடி 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் :07.10.17 சனி காலை 10மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973 ஆரம்பம் :09.10.17 மாலை 4மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Grammar வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

## பதவி வெற்றிடம் (Computer Clerk)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் முன்னணி தனியார் நிறுவனத்திற்கு மேற்படி பதவிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தகைமை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு -
0212217662, 0777664909



# ஸ்கந்தவரோதயா அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கைப் பாடசாலைகளின் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில், 17 வயதுப் பிரிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மாலியாவத்தை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து கண்டி திரித்துவக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி திரித்துவக் கல்லூரி அணி 24.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. சமிந்த பெற்ற 27 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் டிலுக்சன் 4 இலக்குகளையும், டாங்சன் 2 இலக்குகளையும், சோபிதன், தனுசன், தனுராஜ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 11.3 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று 10 இலக்குகளால் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. கலிஸ்ரன் ஆட்டம் இழக்காமல் 41 ஓட்டங்களைப் பெற்றார்.

(ம-422)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 3-4 மாதங்கள் தங்கி இருக்கக்கூடிய சகல வசதிகளைக் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. (முற்பணம் - வாடகை தரப்படும்) - 0773611282

# பண்டத்தரிப்பு பெண்கள் அரையிறுதிக்குத் தகுதி


யாழ்ப்பாணம், ஒக். 5
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டக் கால்பந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

நாரம்பிட்டிய சாளிகா வித்தியாலய மைதானத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து மேல் மாகாண மொமேரியா மகளிர் கல்லூரி அணி மோதியது. முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

(ம-422)

## மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி திவ்வியமணி



பிறப்பு 15.10.1939
இறப்பு 04.10.2017

ஆவரங்கால் கிழக்கு புத்தூரை பிறப்பிடமாகவும், 12ஆம் கட்டை விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி திவ்வியமணி 04.10.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சரஸ்வதி தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சரவணை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், திவ்வியரூபன் (கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு), திவ்வியதர்சினி (ஆசிரியர், மு/விசுவமடு மகா வித்தியாலயம்), சுதர்ஜினி (கணக்காளர், பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு) அவர்களின் பாசமிகு தந்தையும், பத்மாவதி (புத்தூர்), திருமேனி (புத்தூர்), திருச்செல்வம் (முள்ளியவளை), பத்மலிங்கம் (பிரான்ஸ்), திவ்வியநாயகம்(புத்தூர்), திவ்வியராணி(லண்டன்), திவ்வியமலர்(கொழும்பு), சித்திராதேவி(லண்டன்), திவ்வியமாலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மதுவாணி (ஆசிரியர், மு/பாரதி வித்தியாலயம்), றஞ்சித் (சுரபி வீடியோ), சிவசிறிதரன் (Softlogic Life Insurance) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரபி, அட்சயன், அநுபாயன், வைஷாலி, ரிஷிகேசன், நிகேஷன், நிதந்தகி, நர்த்தனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**12 ஆம் கட்டை,**
**விசுவமடு. 0772307550**

தகவல்:
குடும்பத்தினர்.

After O/L A/L Study Abroad

UK Collaboration
* University of East London
* Bedfordshire University
* CRIC - Anglia Ruskin University
* EIC - Edinburgh Napier University
* HIBT - University of Hertforshire
* ICP - University of Portsmouth
* LIBT - Brunel University
* PDIC - Plymouth University

Australia Collaboration
* James Cook University
* Curtin University
* Macquarie University
* MIBT - Deakin University
* ACN - La Trobe University
* PIBT - Edith Cowan University
* SIBT - University of South Australia

Apply Now For 2017/18 Intake

Swiss Collaboration
* HTMI - Hotel Tourism Management Institute
* European University

New Zealand Collaboration
* UCIC - University of Canterbury
* NTEC
* Quantum College

Study Hotel Management in Singapore & Malaysia with part time job

Malaysia Collaboration
* APU (APIIT)
* Taylor's University
* INTI University
* SEGI University
* KDU University

Singapore Collaboration
* James Cook University
* Curtin University * MDIS * LSBF

Latvia,Poland,Lithuania,Cyprus
(Europe Countries ,Low Countries)

Study MBBS
China | Malaysia | Russia | Latvia
Belarus | Bangladesh | India
Approved by SLMC
UK, ECFMG-USA , IMED
WHO & UNESCO

வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் .......

iCS DREAM BEYOND BOARDERS
Foreign Education Services
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
021 4926222 , 077 3013060
107 B 1/1, Galle Road, Colombo-06

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கணக்காளர் திருமதி சி. சுதர்ஜினி
அவர்களின் அன்புத் தந்தை



**சின்னத்தம்பி திவ்வியமணி**
(விசுவமடு)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம்,புதுக்குடியிருப்பு.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.